Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

சுடர் : 38
கதிர் : 295

ஞாயிற்றுக்கிழமை 17 செப்ரெம்பர் 2023

ஆவணி 31 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## அரச நிதியில் திலீபன் நினைவிட வேலி அமைப்பு: அதிகாரிகள் மீது குற்றப்பத்திரிகை!

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 17

நல்லூர் பின்வீதியில் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்துக்கு நல்லாட்சி அரசின் காலத்தில் அரசாங்க நிதி ஒதுக்கீட்டில் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டமை தொடர்பில் கடந்த ஆண்டு விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில் அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

»15

## பூநகரியில் விபத்து: இளைஞன் சாவு!



கிளிநொச்சி, செப். 17

பூநகரி - நல்லூரில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சந்திரசேகரம் மிதுஜன் (வயது-29) என்ற இளைஞரே இவ்வாறு »15

## பருத்தித்துறையில் 10 பவுண் நகை திருட்டு

பருத்தித்துறை, செப். 17

பருத்தித்துறை, ஐயனார்கலட்டியில் வீட்டுக் கதவை உடைத்து பட்டப்பகலில் 10 பவுண் தங்க நகை மற்றும் 30 ஆயிரம் ரூபா பணத்தை திருடிச் சென்றுள்ள சம்பவம் நேற்று சனிக்கிழமை »15

## கிராம அலுவலர்களின் கொடுப்பனவு அதிகரிப்பு

கொழும்பு, செப். 17

கிராம அலுவலர்களின் கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பில் ஆராய விசேட குழுவொன்றை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் நேற்று இடம்பெற்ற செயலமர்வொன்றில் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த இதனைத் தெரிவித்துள்ளார். (அ-ஓ.இ)

## காணாமற்போனவர் சடலமாக மீட்பு!

முல்லைத்தீவு, செப். 17

புதுக்குடியிருப்பு, பொன்னம்பலம் மருத்துவமனைக்கு அருகாமையில் உள்ள தென்னங்காணியிலிருந்து ஆணின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு, கோம்பாவிலைச் சேர்ந்த இராசலிங்கம் சுதர்சன் (வயது-29) என்ற இளைஞர் 13 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார் என அவரது உறவினர்களால் நேற்றுமுன்தினம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. »15

## கடலில் விழுந்து ஒருவர் உயிரிழப்பு

பருத்தித்துறை, செப். 17

பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து பலநாள் மீன்பிடிப்படகில் மீன்பிடிக்கச் சென்ற குடும்பத் தலைவர் கடலில் விழுந்து உயிரிழந்துள்ளார். திருகோணமலையைச் சேர்ந்த 44 வயதுடைய ஆர்.பி.நிமல் கருணாரத்ன என்பவரே »15

## ஐ.எம்.எப். 2ஆம் கட்டம் இப்போதைக்கு இல்லை

கொழும்பு, செப். 17

சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் நிதி நிவாரணத் தொகுதியின் இரண்டாம் தவணை இந்த மாதம் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டபோதும், அது »15



தேசியமட்ட

## வேகநடைப்போட்டியில் விக்ரோறியாவுக்கு தங்கம்

கொழும்பு, செப். 17

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற தேசியமட்ட 5ஆயிரம் மீற்றர் வேகநடைப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி மாணவி ஜீ.தமிழரசி முதலிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை தனதாக்கிக்கொண்டுள்ளார். (அ-ஓ.இ)

## ஒரு கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் மீட்பு!

### 70 வயதான சந்தேகநபர் கைது



யாழ்ப்பாணம், செப். 17

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் ஒரு கிலோ மற்றும் 40 கிராம் உயிர்கொல்லி ஐஸ் போதைப் பொருளுடன் 70 வயதான முதியவர் ஒருவரைக் கைது செய்துள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தலைமையகப் பொறுப்பு அதிகாரி தெரிவித்தார். »15

காதல் விவகாரம்:

## பெற்றோல் குண்டுத்தாக்குதல்: வீட்டிலிருந்த 5 பேர் காயம்

### சந்தேகநபர்கள் 3 பேர் கைது

யாழ்ப்பாணம், செப். 17

தாவடி, வன்னியசிங்கம் வீதியிலுள்ள வீடொன்றின் மீது நேற்று அதிகாலை 4 மணியளவில் பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதுடன் வீட்டின் உடைமைகளும் அடித்துச் சேதப் படுத்தப்பட்டுள்ளன. இந்தச் சம்பவத்தில் வீட்டிலிருந்த 5 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். »15

# சஞ்சீவி



noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் விடயம்: துரித விசாரணை தேவை!



## கருஜயசூரிய வேண்டுகோள்

கொழும்பு, செப். 17

உயிர்த்தஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலை பின்னணியாகக்கொண்டு 'சனல்-4' அலைவரிசை ஒளிபரப்பிய விடயங்கள் தொடர்பில் உண்மையை அறிந்துகொள்ளும் பூரண உரிமை நாட்டு மக்களுக்கு உள்ளது. எனவே தேசிய மற்றும் சர்வதேசமட்டத்திலான விசாரணைகளை அரசாங்கம் துரிதப்படுத்தவேண்டும் - இவ்வாறு சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் தலைவர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக 'சனல்-4' அலைவரிசையில் ஒளிபரப்பப்பட்டிருந்த விடயங்கள் முறையான விசாரணை இல்லாமல் ஒருபோதும் ஒதுக்கிவிட முடியுமான விடயங்கள் அல்ல. இதுதொடர்பில் சரியான ஆய்வொன்றை மேற்கொண்டு, பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

'சனல் -4' வெளிப்படுத்தலின் பின்னரும் அதுதொடர்பாக தேடிப்பார்க்க இரண்டு விசேட விசாரணைகளுக்குச் செல்வதாக அரசாங்கம் தெரிவித்திருக்கிறது.

அதன் விசாரணைகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில் அதற்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் எந்தத் தராதரங்களில் இருப்பவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அந்த விசாரணைக் குழுவுக்கு அதிகாரம் இருக்கவேண்டும்.

அத்துடன் உயிர்த்தஞாயிறுத் தாக்குதலின் பின்னர் நாட்டில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராகச் சமூகக் கருத்தாடல் ஒன்று கட்டியெழுப்பப்பட்டது.

உயிர்த்தஞாயிறுத் தாக்குதலுடன் ஏற்பட்ட அமைதியற்ற நிலைமைகள் மூலம் பல்வேறு கொடூரமான செயற்பாடுகளுக்கு நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதாக சாட்சிகள் இருக்கும் சில அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் விசாரணையின்போது கவனம் செலுத்தவேண்டும்- என்றுள்ளது.

(ச-இ)

ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்;

# குற்றச்சாட்டுகளை பரிசீலனை செய்க!

## மைத்திரி கோரிக்கை

'சனல் - 4' தொலைக்காட்சியின் ஆவணப்படம் மூலம் ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான பல சர்ச்சைக்குரிய தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், தனக்கு எதிரான குற்றச்சாட்டு களை மீள்பரிசீலனை செய்யுமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது சட்டத்தரணி ஊடாக உயர்நீதிமன்றத்திடம் நேற்றுமுன்தினம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவம் தொடர்பாகப் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட 12 அடிப்படை உரிமை மனுக்கள் நேற்றுமுன்தினம் மீள விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பில் மன்றில் முன்னிலையான பைஸர் முஸ்தபா இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இதேவேளை - வழக்கு விசாரணையின் பின்னர் சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைக் காரியாலயத்துக்கு அடுத்த வாரம் சென்று ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்துமாறு மனு ஒன்றை கையளிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ம)

# ஈஸ்டர் தாக்குதலில் சர்வதேச விசாரணை

## அமெரிக்கா அதிரடி அறிவிப்பு

**கொழும்பு, செப். 17**

**ஈஸ்டர் தாக்குதல்களில் அமெரிக்கர்களும் உயிரிழந்திருப்பதால் இந்த விடயத்தில் சர்வதேச விசாரணையொன்றை நடத்துவது தொடர்பில் அமெரிக்கா ஆராய்கின்றது என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவர் பெத் வான் ஸ்காக் தெரிவித்துள்ளார்.**

பெத் வான் ஸ்காக் மற்றும் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோருக்கு இடையில் அமெரிக்காவில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இது தொடர்பில் பெத் வான் ஸ்காக் தெரிவித்துள்ளார்.

'சனல்-4' செய்திச்சேவையால் இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட ஆவணப்படத்தின் பின்னணி மற்றும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களின் உண்மைத்தன்மை, உயிர்த்தஞாயிறுதினக் குண்டுத் தாக்குதல்களில் அமெரிக்கர்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டவர்களும்கொல்லப்பட்டிருப்பதால்இதனை சர்வதேச குற்றமாகக் கருதி சர்வதேச விசாரணையொன்றை முன்னெடுப்பதற்கான சாத்தியப்பாடு ஆகிய விடயங்கள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இது தொடர்பில் அமெரிக்காவின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் விரைவில் வெளிப்படுத்தப்படும் என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# இராணுவத்துக்கு எதிரான நிகழ்ச்சி நிரலே 'சனல்-4'

## விமல் வீரவன்ஸ தரப்பு கண்டுபிடிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு முடிவுகட்டிய படையினருக்கு எதிராக சர்வதேச விசாரணையை நடத்தும் நிகழ்ச்சி நிரலே 'சனல் – 4' வீடியோ ஊடாக முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. அதனால்தான் சம்பந்தனும் சர்வதேச விசாரணையைக் கோருகின்றார். இதற்கு அரசு இடமளிக்கக்கூடாது – இவ்வாறு விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி வலியுறுத்தியுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்ததாவது:–

'உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம்மீதான பொறுப்பை எமது நாட்டு புலனாய்வுப் பிரிவு மற்றும் படையினர்மீது சுமத்துவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. புலனாய்வுப் பிரிவு மற்றும் படையினர் வேட்டையாடப்படுவதைத் தடுப்பதற்கு நாட்டு மக்கள் தலையிடவேண்டும். புலிகள் அமைப்பைத் தோற்கடிப்பதற்குத் தமது உயிரைத் தியாகம் செய்த புலனாய்வுப் பிரிவு மற்றும் படையினரை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தி, அவர்களுக்குத் தண்டனை பெற்றுக்கொடுப்பதற்கு தமிழ்ப் புலம்பெயரிகள் முயற்சிக்கின்றன.

'சனல் – 4'வில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள புலனாய்வுப் பிரிவு பிரதானி உள்ளிட்டவர்களுக்கு எதிராக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார். ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரின் போது, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பிரதி ஆணையாளரும் சர்வதேச விசாரணைகோரும் யோசனையை முன்வைத்துள்ளனர். இதன்மூலம் நோக்கம் தெளிவாகின்றது.

அதாவது பிரிட்டனில் உள்ள 'சனல் – 4'விற்கு தமிழ்ப் புலம்பெயரிகள் பணம் கொடுத்து நிகழ்ச்சியை ஒளிபரப்புகின்றனர், அந்த வீடியோவில் உள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு சம்பந்தன் சர்வதேச விசாரணை கோருகின்றார்.

'சனல் – 4' வீடியோ ஊடாக சர்வதேச சக்திகள் மேலும் ஒரு நோக்கங்களை அடையப் பார்க்கின்றன. ஒன்று, இலங்கையில் செயற்படும் இஸ்லாம் அடிப்படைவாதத்தை மறைப்பது, அடுத்தது, தாக்குதலைத் தடுக்கத் தவறிய ஆட்சியாளர்களைப் பாதுகாப்பது. 'சனல் – 4' என்பது பணத்துக்காக வீடியோக்களை வெளியிடும் ஊடகம், படையினருக்கு எதிராக இதற்கு முன்னரும் வீடியோக்களை வெளியிட்டுள்ளது. எனவே, படையினருக்கு எதிராக சர்வதேச விசாரணையை நடத்த வழிவகுப்பதே இதன் நோக்கம். இது தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்' – என்றார். (ம-44)

வேலையாட்கள் தேவை
யாழ்நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு
1. காசாளர்
2. கணக்காளர்
3. உதவியாளர்
077 991 1025
(cs 5231) (N-1)

வேலைவாய்ப்பு
சுன்னாகத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்துக்கு
(Computer Billing)
செய்யக்கூடியவர்கள் / பழக விரும்புபவர்கள் தேவை.
தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
ஆண்கள் மட்டும்
தகைமை:
அடிப்படைக் கணினி அறிவு அவசியம்
வயதெல்லை : 20 - 30 வயது வரை
076 540 4630
(cs 52126) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கெஹலியவுக்கு எதிராகப் போர்!

கொழும்பு, செப்.17

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உடனடியாகப் பதவிவிலக வேண்டும் என வலியுறுத்தி சுகாதார அமைச்சுக்கு முன்பாக நேற்றுமுன்தினம் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

சிவில் செயற்பாட்டாளர்கள் சிலர் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். போராட்டத்தின் காரணத்தால் சுகாதார அமைச்சுக்கு முன்பாகப் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஆதரவு தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தி தமது கட்சிப் பிரதிநிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தனவை அனுப்பியிருந்தது.

சம்பவ இடத்துக்குச் சென்ற அவர், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விவரங்களை ஒப்படைத்தார். சுகாதார அமைச்சர் பதவி விலகவேண்டும் அல்லது ஜனாதிபதி அவரை பதவிநீக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (எ-44)

**CAREER OPPORTUNITY**
**SALES & MARKETING EXECUTIVE**
**RESIDENT IN JAFFNA**

CEYLON ASSET MANAGEMENT

**Job Description**
You are required to reach investors in the Jaffna District in order to gain their trust and confidence to facilitate new investments into unit trust funds managed by Ceylon Asset Management, an associate company of Sri Lanka Insurance Corporation.

**Eligibility Criteria**
✓ Minimum of one year experience in a commercial bank is essential
✓ Candidate to be located in Jaffna, so preferably a resident from Jaffna
✓ Degree in marketing, management or an equivalent professional qualification is mandatory
✓ Fluency in Tamil and English is mandatory

The candidate will be entitled to a monthly remuneration package of LKR 50,000/- plus commissions.

Please send your resume by **30th September, 2023** to ***anisha@ceylonam.com***
Please indicate **"Sales & Marketing Executive - Jaffna"** in the subject line of the email.

No. 33, PARKLAND 1, Park Street, Colombo 02
Tel. +94 11 739 4000
www.ceylonam.com

# ‘அரகலய’ போராட்டக் காலத்தில் 13 ‘பிளஸ்’ வழங்கியிருக்கலாம்!

## சந்திரிகா சுட்டிக்காட்டு



**கொழும்பு, செப். 17**

**அரகலய போராட்டக்காலத்தில் நாட்டில் முன்னெப்போதும் இல்லாத ஒற்றுமை இருந்தது. அந்தச்சமயத்தில் 13ஆவது திருத்தத்துக்கும் அப்பாற்சென்று 13 பிளஸைக்கூட வழங்கியிருக்கலாம் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சுட்டிக்காட்டியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பிரச்சினை தொடர்பில் நான் பேசவேண்டும். எனது வாழ்வில் இந்தப் பிரச்சினைக்காகப் பெரியளவில் அர்ப்பணித்துள்ளேன். இந்த விடயம் தொடர்பில் என்னைக்கொலைசெய்தும் இருப்பார்கள். அரசமைப்பின் சட்டமாகக் காணப்படும் 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறே தற்போது ஜனநாயக முறையில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தலைவர்கள் கோருகிறார்கள். இருப்பினும் இதனைச் சிலர் ஒருபுறம் தள்ளி வைத்துள்ளனர். அதனை ஏன் செயற்படுத்தமுடியாது? 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமானால் சில விடயங்கள் உள்ளன. அதனை நடைமுறைப்படுத்த விரும்புவதாக ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார். அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் என்னிடமும் கேட்டுக்கொண்டார். அதற்கு எந்தவொரு ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு நான் தயார். ஆனால், அதற்கு வடக்கு - கிழக்கில் மாகாணசபைகள் இருக்கவேண்டும். அது அவசியம். ஜனாதிபதியாக நான் பொறுப்பேற்ற காலத்தில் புதிய அரசமைப்பைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்தேன். இனப்பிரச்சினைக்காக முன்வைக்கப்பட்ட முக்கியமான தீர்வாக அது இருந்தது. உலகம் அதை ஏற்றுக்கொண்டது. ஆனால் அதை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்னிடம் இல்லை. ஏழு வாக்குகளே இதற்குப் போதாமல் இருந்தது. அந்த ஆதரவை அன்று ஐக்கிய தேசியக் கட்சி தரவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியுடன் 5 மாதங்கள் கலந்துரையாடிக் கொண்டுவந்த அரசமைப்பு வரைவை ஐக்கிய தேசியக் கட்சி விதண்டாவாதமாக எதிர்த்தது. அது மாத்திரமல்ல எனக்கு எதிராகக் கூச்சலிட்டு, அதனைத் தீயிட்டுக் கொளுத்தினர். தற்போதாவது அதனை நிறைவேற்றவேண்டும் என அவர் கூறுகிறார். அது மிகப்பெரிய விடயமல்லவா?

‘அரகலய’ போராட்டக் காலத்தில் 13க்கும் அப்பால் சென்றும் தீர்மானங்களை எடுத்திருக்கலாம். நானாக இருந்திருந்தால் அதைச் செய்திருப்பேன். தற்போது 13ஐ நடைமுறைப்படுத்தவேண்டிய உண்மையான தேவை ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளது. இது தொடர்பில் சிறந்த புரிந்துணர்வும் அவருக்கு உள்ளது - என்றார். (ம)

# புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டம் இறுக்கமாக நடைமுறையாகும்

## நீதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 17

இலகுவில் தப்பித்துக்கொள்ள முடியாத வகையில் கடுமையான தண்டனைகள் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஊழல் அற்ற நாட்டை ஏற்படுத்துவதற்கு அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார். நேற்றுமுன்தினம் முதல் ஊழல் எதிர்ப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. அந்தச் சட்டம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்தல், ஊழல் மோசடி மற்றும் இலஞ்சம் பெற்றுக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளால் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலைக்குச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

நிதி, நிர்வாக அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவை அமைக்க நடவடிக்கை எடுத்தோம். அதன் பிரகாரமே ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் அனுமதித்துக் கொள்ளப்பட்டது. இலஞ்சம், ஊழல் மோசடியற்ற நாடொன்றை ஏற்படுத்துவதற்கு ஊழல் எதிர்ப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே இருந்த சட்டத்திலும் பார்க்க சுயாதீனத் தன்மை இதன்மூலம் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை மீறுபவர்களுக்கு இலகுவில் தப்பித்துக்கொள்ள முடியாமல் கடுமையான தண்டனைகள் வழங்கப்படும்- என்றார். (ச-இ)

# அடிக்கல்!

யாழ்., செப். 17

உசன், கஜகேணி விநாயகர் ஆலயத்துக்கு ஊர்மக்களின் 8 மில்லியன் ரூபா நிதிப்பங்களிப்பில் கருங்கல்லிலான மூலஸ்தானம் மற்றும் மண்டபம் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது. (ச-9)

# அசாஞ்சேவின் விடுதலைக்கு ஆஸி. எம்.பி.க்கள் குரல்!

கொழும்பு, செப். 17


விக்கிலீக்ஸ் ஸ்தாபகரான ஜூலியன் அசாஞ்சேவை விடுதலைசெய்யவேண்டும் என்று 60க்கும் மேற்பட்ட அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவுஸ்திரேலிய பிரஜையான ஜூலியன் அசாஞ்சே பிரிட்டன் சிறையில் இருந்து, விசாரணைக்காக அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டால் அவுஸ்திரேலியாவில் எதிர்ப்பலைகள் உருவாகக்கூடும் எனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஜூலியன் அசாஞ்சேவை விடுதலை செய்துகொள்வது தொடர்பான பேச்சுகளை முன்னெடுப்பதற்காக அவுஸ்திரேலியா நாடாளுமன்றக் குழுவொன்று அடுத்தவாரம் வொஷிங்டன் செல்லவுள்ளது. இந்தநிலையில் அவரின் விடுதலையை வலியுறுத்தி 63 நாடாளுமன்ற உறுப்பினர்கள்வரை கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

அமெரிக்க இராணுவம் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் நடத்திய தாக்குதல் தொடர்பான ஆவணங்களை விக்கிலீக்ஸ் இணையத்தளத்தில் 2010ஆம் ஆண்டு வெளியிட்டார் அதன் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே. இதனால் விக்கிலீக்ஸ் மீது குற்ற விசாரணையை அமெரிக்கா முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த 26ஆம் திகதி சனிக்கிழமை தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற 13 ஆவது புத்தக அரங்க விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வின் காட்சிகள்.

(ய)



கடந்த 26ஆம் திகதி சனிக்கிழமை தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற 13 ஆவது புத்தக அரங்க விழாவின் முதலாவதுநாள் காட்சிகள்.

(ய)




யாழ்.மாவட்டச் செயலகத்தின் தீர்மானத்துக்கு அமைவாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்கள் மேற்படி பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்களால் கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மேற்பார்வை செய்யப்பட்டது.

(ய-66)



கைதடி- நாவற்குழியில் கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தின் அனுசரணையில் கடந்த 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விழிப்புணர்வு பதாகை திறந்து வைக்கப்பட்டு மரநடுகையும் சிரமதான நிகழ்வும் இடம்பெற்றது.

(ய-159)



குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா கடந்த 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

(ய-66)



"ஒன்றுகூடுவோம் இலங்கை முல்லைத்தீவு" நிலையத்தால் நடத்தப்பட்ட இலவச மூன்றுமாத கால ஆங்கிலம், கணினி மற்றும் விசேட பாடங்களை பூர்த்தி செய்த 3ஆம் 4ஆம் சிறுவர் பிரிவு சிறார்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 26ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி- இராமநாதபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

(ய- 159)



அறக்கொடைச் செம்மல், திருப்பணி அரசு சுப்பிரமணியம் கதிர்காமநாதன் கடந்த 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, தான் கல்விகற்ற பாடசாலைகளான காரை நகர் யாழ்ற்றன் கல்லூரி, ஆயிலி சிவஞானோதயா வித்தியாசாலை ஆகியவற்றுக்கு பயணம் செய்து 490 மாணவர்களுக்கு புத்தகப் பைகளை வழங்கினார்.

(ய-27- 125)



பேசாலை சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை விநாயகர வழிபாடு சாந்தியுடன் ஆரம்பமாகியது.

(ய-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NEXT INTAKE OCTOBER 2023

# SLT TRAINING CENTRE உடன் உங்கள் வாழ்வை தொடங்குங்கள்



தொலைத் தொடர்பாடல் முன்னோடியின் பின்னணியில் இயங்கும் இலங்கையின் ஒரே ஒரு கல்வி நிறுவகமான SLT பயிற்சி மையம் உலகப் புகழ் பெற்ற பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவகங்கள் மூலம் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பட்டம் மற்றும் தகைமைகளுடன் பயிற்சியினையும் வழங்குகிறது. இன்றே SLT பயிற்சி மையத்தில் இணைந்து உங்கள் வாழ்க்கைப் பயணத்தையும் இனிதே ஆரம்பித்திடுங்கள்.

## BACHELOR OF ENGINEERING HONOURS DEGREES (BEng - UK)

FROM A WORLD'S TOP RANKING UNIVERSITY

University of Hertfordshire UH

DEGREE PROGRAMMES

- BEng (Hons) in Electrical & Electronic Engineering
- BEng (Hons) in Electronics & Communication Engineering
- BEng (Hons) in Electronics & Computer Engineering

*UP TO 30% A/L RESULTS BASED SCHOLARSHIPS

Enrol with your A/Level results* Direct entry to 2nd year NDT, NDES, HNDE, BTEC HND

DURATION: 3 YEARS (FULL TIME)
+ 6 Months Industrial Training at SLT-MOBITEL

2 years working Visa to UK and Australia upon completion of the Master's Degree

Attractive discounts for Master's Degrees at the University of Hertfordshire - UK

UGC Recognised

ELIGIBLE FOR AN IET MEMBERSHIP

## PEARSON BTEC LEVEL 5 HND IN DIGITAL TECHNOLOGIES

Be on your way to master the digital sciences and open the gateway to international University Degree programmes in the USA, UK, Australia, and more.

Specialist Pathways:

- Cyber Security
- Software Development and Programming
- Data Analytics
- Cloud Networking
- Artificial Intelligence AI Solutions and Applications

Duration: 2 Years (Weekends/Weekdays)
+ 6 Months Industrial Training at SLT-MOBITEL*

Venues: Welisara, Kandy & Moratuwa

## PEARSON BTEC LEVEL 5 HND IN ELECTRICAL & ELECTRONIC ENGINEERING

Now here's a qualification that can be your gateway to local & international University Degree programmes in the USA, UK, Australia, and more.

DURATION: 2 YEARS (Full-time/Part-time)
+ 6 months Industrial Training at SLT-MOBITEL*

Get exemptions to international degree programmes upon successful completion.

Venue: Welisara

*EQUIVALENT TO NVQ LEVEL 6

## PEARSON BTEC INTERNATIONAL LEVEL 3 FOUNDATION DIPLOMA IN ENGINEERING

Accelerate your career at SLT Training Centre by choosing international University Degree programmes in USA, UK, Australia, and more.

Duration: 6 months (Weekdays)

Enrol for a Bachelor of Engineering Honours Degree (UK) or the Pearson BTEC Level 5 HND (Engineering) upon successful completion of the Foundation Diploma.

SLT TRAINING CENTRE

0112 956 633
sltttc@sltnet.lk
www.slt.lk/training


வெலிசர 0112 956 721 | மொறட்டுவை 0112 645 371 | கண்டி 0812 388 500

இவற்றுடன் கைகோர்த்து

University of Hertfordshire UH | Pearson | BTEC

SLTMOBITEL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழா நிறைவுற்ற நிலையில், யாழ்ப்பாணம் மாநகரசபையினர் நேற்றுக்காலை விசேட பூசை வழிபாடுகளை மேற்கொண்டனர். யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (எ-26)

# கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர் உள்ளீர்ப்பு தாமதம்

## ஆசிரியர் சேவைச் சங்கம் கண்டனம் போராட்டம் நடத்தப்படும் என எச்சரிக்கை

**மன்னார், செப். 17**

**2019 க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை உள்ளீர்ப்புச் செய்வது காலதாமதம் அடைகிறது. கல்வியமைச்சின் இந்த அசமந்தப் போக்கால் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடுமோ என்ற அச்சம் தோன்றியுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பில் அந்தச் சங்கம் தெரிவித்ததாவது:

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை உள்ளீர்ப்புச் செய்வது தொடர்ந்து காலதாமதம் அடைகிறது. கொரோனாத் தொற்றுக் காரணமாக 2019 - 2020 மாணவர்கள் கல்வியியற் கல்லூரிக்கு உள்ளீர்க்கப்படுவது தடை செய்யப்பட்டிருந்தது. கல்வி அமைச்சின் அசமந்தப்போக்கால் இந்த வருடத் தொகுதியிலுள்ள மாணவர்கள் தங்களுடைய இதர கல்வி நடவடிக்கைகளைத் தொடர முடியாமல் இருக்கிறார்கள். வயது அதிகமாகின்றமையால் வேறு பட்டப்படிப்புகள் மேற்கொள்ள இயலாத நிலையிலும் ஒழுங்கான வேலைவாய்ப்புகள் இல்லாமலும் வீடுகளில் முடங்கிக் கிடக்கும் நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. மாணவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகின்றது.

2019 - 2020 வருடத் தொகுதியில் 7 ஆயிரத்து 400 மாணவர்கள் உள்ளீர்ப்புச் செய்யப்படாதிருப்பதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. எனவே கல்வியியற் கல்லூரிகளுக்கு அவர்களை உள்ளீர்ப்பதில் இனியும் தாமதம் செய்யாது சம்பந்தப்பட்ட தரப்பினர் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். இது தொடர்பில், கல்வி அமைச்சு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாதுவிடின் மாணவர்களின் உரிமைக்காக முன்னறிவித்தலின்றி போராட்டத்தில் குதிப்போம் - என்றுள்ளது. (ச-213)



நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழா நிறைவுற்ற நிலையில், திருவிழாக் காலத்தில் அங்கு கடமையில் இருந்த சாரணர்கள் நேற்றுக் காலை நல்லூர் ஆலயத்தில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டனர். திருவிழாக் காலக் கடமையில் ஈடுபட்ட சாரணர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டன. (எ-26)

# பளுதூக்கலில் சாதித்த இராமநாதன் கல்லூரி



கடந்த மாதம் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற வடமாகாணப் பாடசாலைகளுக்கான பளுதூக்கல் போட்டியில் யாழ்.இராமநாதன் கல்லூரி ஒரு தங்கம், 3 வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது. 17 வயதுக்குட்பட்ட பளுதூக்கல் போட்டியில் க.பிரணதி, ஞா.சங்கவி ஆகியோர் 2 ஆம் இடத்தையும் இ.மயூரணி, ந.வைஷ்ணவி ஆகியோர் 3ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

20 வயதுக்குட்பட்ட பளுதூக்கல் போட்டியில் சு.அபிநயா முதலாம் இடத்தினையும் நீ.மஸ்மிதா 2 ஆம் இடத்தையும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். (ஒ13-125)

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

**மிதுனம்:** மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும். பாதிப்பு எதுவும் இருக்காது. முக்கியமான முடிவு எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும்.

**கடகம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது நல்லது. காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தந்தையின் தேவையை பூர்த்தி செய்வீர்கள். பிரச்சினைகள் நீங்கும்.

**சிம்மம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாயின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**துலாம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். உடல்நலனில் கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகளில் நன்கு சிந்தித்து ஈடுபடவும்.

**தனுசு:** மகிழ்ச்சி தரும் நாள். வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள்.

**மகரம்:** முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம். தாய்வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு சற்று கவலை தரும். பல வகைகளில் நன்மைகள் ஏற்படும்.

**கும்பம்:** நினைத்த காரியத்தை முடிப்பதில் சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வது ஆறுதல் தரும்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். ஆதாயம் கிடைக்கும். சகோதரர் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கள்ள மௌனம்கூட கலப்பற்ற அநீதியே!

அநீதியான சூழ்நிலையில் நியாயம் தேடப்பட வேண்டிய இடத்தில், 'நடுநிலையாளர்' என்று அறிவிப்புச் செய்வது ஒருபோதும் நடுநிலை என்று பொருள்படாது. உண்மையில் அது ஒடுக்குமுறையாளனின் பக்கம் நிற்பதாகும். நீதியைத் தேடுபவனுக்கு எதிராக ஒடுக்குமுறையாளனின் கைகள் ஓங்குவதற்கு இடமளிப்பதே இந்தச் செயல் என்கின்றார் தென்னாபிரிக்காவின் 'நீதிவான்' என்று பலராலும் வர்ணிக்கப்பட்ட பேராயர் டெஸ்மன் டுட்டு.

தென்னாபிரிக்காவில் நிலவிய கறுப்பின அடக்குமுறைகளுக்கு எதிராகத் தீவிரமாகப் போராடிய ஒரு செயல் வீரன்தான் டுட்டு. அவருடைய மேற்கோள்களும் கொள்கைளும் இனப்படுகொலை, இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராக 'அறிவிக்கப்படாத' கருத்தியலாகப் பின்பற்றப்படுகின்ற நிலையில், சமநாள்களில் டுட்டுவின் இந்தக் கருத்துகள் இலங்கையின் நிகழ்காலத்தையும் இலங்கை விடயத்தில் சர்வதேச சமூகம் கொண்டிருக்கும் பாராமுகத்தையும் வலுவாகவே கட்டியம் செய்கின்றன. இன்னும் சொல்லப்போனால், பேராயர் டுட்டு விதைத்துச்சென்ற கருத்தியல்களின் கனதி தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத்தொடரில் வலுவாகவே உணரப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46/1 மற்றும் 51/1 ஆகிய இரு தீர்மானங்களையும் முற்றுமுழுதாக மறுத்திருக்கின்றது கொழும்பு. பேரவையின் 54 ஆவது அமர்வு ஜெனிவாவில் தற்போது நடைபெற்று வரும் நிலையில், இலங்கை தொடர்பான விவாதத்தின் ஆரம்பத்தில் இந்த மறுப்பறிவிப்பை பகிரங்கப்படுத்தியிருக்கின்றார் ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி அருணதிலக. 'இலங்கை தொடர்பான தீர்மானத்தை பல நாடுகள் எதிர்த்தன. இன்னும் பல நாடுகள் வாக்களிப்பதைத் தவிர்த்தன. தீர்மானங்களின் உள்ளடக்கங்களை ஏற்றுக்கொள்ளாத நிலையிலேயே மேற்படி நாடுகள் இவ்வாறு வினையாற்றின' என்றிருக்கின்றார் அவர். ஆக, தீர்மானத்தை எதிர்த்த நாடுகளுடன், நடுநிலையில் நின்ற நாடுகளையும் 'தன் ஆதரவு நாடுகள்' எனும் நோக்கோடு அணுக இலங்கை தலைப்பட்டிருப்பது இங்கு புலப்படுகின்றது.

இலங்கைக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்களைச் சேகரிக்கும் விடயம் இதற்கு முன்னர் இடம்பெறாத ஒன்றே. இது மனித உரிமைகள் பேரவைக்கு உறுப்பு நாடுகள் வழங்கிய ஆணைக்கு அப்பாற்பட்டது என்பதே பேரவையில் இலங்கையின் விவாதப்புள்ளி. 'நடுநிலை நாடுகள் ஏற்காத தீர்மானங்கள்' என்பதன் மூலம் ஹிமாலி குறிப்பிட முனையும் விடயமும் அதுதான். உண்மையில் இந்த விவாதப்புள்ளியின் தோற்றுவாய், இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை 'நடுநிலை' என்ற கள்ளமௌனத்தில் அணுகிய சில நாடுகளின் 'பூகோள அரசியலே'.


பஹ்ரைன், காபோன், கமரூன், சூடான் உள்ளிட்ட நாடுகளுடன் இந்தியா மற்றும் ஜப்பான் நாடுகளும் 'நடுநிலை' என்ற புள்ளியில் நின்றே ஐ.நா.வில் இலங்கையின் விவகாரத்தை அணுகின – அணுகிக்கொண்டிருக்கின்றன. இங்கே இவர்கள் சொல்லவரும் 'நடுநிலை' என்பது 'தமிழர்களுக்குச் சார்பாக இன்னும் நாம் செல்லவில்லை. சீன, ரஷ்யக் கூட்டணியின் பக்கமாக இலங்கை சாயுமாயின் தமிழர் நலன்சார் முடிவுகள் எந்நேரமும் எடுக்கப்படலாம்' என்பதே. மற்றும்படி வேறெந்த அழுத்தம் திருத்தமான முடிவையும் கொள்கைகளையும் பிராந்திய வல்லரசான இந்தியாவோ அல்லது ஜப்பானோ முன்வைக்கவில்லை. எப்போது இந்திய அரசியல் நிலைப்பாடு சார்ந்து இலங்கை சிந்திக்கத் தலைப்படுகின்றதோ அப்போது இந்தியாவின் பிடி இலங்கை மீதிருந்து தளர்த்தப்படும். இந்தத் தளர்வு நிலைக்குத் தயாராக ஏற்படுத்தப்பட்டிருக்கும் இராஜதந்திர நகர்வுகூட ஒருவகையில் பேரபத்தமே. இது இலங்கைக்கான வாய்ப்புகளையே வழங்குகின்றது. அன்றி நீதிக்கும் இந்த வியூகத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை.

உண்மையில் ஐ.நா. தீர்மானத்துக்கு எதிராக காலாகாலமாக வாக்களித்து இலங்கையைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், கியூபா கூட்டணியை விடவும் ஆபத்தானது இந்த நடுநிலை நகர்வுதான். தமிழர்களுக்கு வரலாற்றுத் துரோகம் இழைப்பதில் இந்தியா எப்போதும் பின்நின்றதேயில்லை. இப்போதும்கூட.

## நாளொரு நல்வார்த்தை

"குறைந்த செலவுதனைக் கொண்ட ஆசைகளைக் கொண்டவனும் பணக்காரனே"

- ஹென்றி டேவிட் தொரேயு



# ஈழ அகதிகளுக்கு தமிழகத்தில் வீடு!

## இன்று வழங்குகின்றார் ஸ்டாலின்

**சென்னை, செப். 17**

**ஈழத் தமிழ் அகதிகளுக்காக தமிழகத்தின் 13 மாவட்டங்களில் அமைக்கப்பட்ட ஆயிரத்து 591 வீடுகள் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் இன்று திறந்துவைக்கப்படவுள்ளன.**

2021ஆம் ஆண்டில் ஸ்டாலினால் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சுமார் 143 கோடி இந்திய ரூபா செலவில் இந்தத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் ஆயிரத்து 591 வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் அவை முதற்கட்டமாக இன்று கையளிக்கப்படவுள்ளன. இதர வீடுகளை இந்த வருடத்தின் இறுதிக்குள் அல்லது அடுத்த முதற்காலாண்டுக்குள் கையளிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ம)

# யானை - மனித மோதல் தடுப்பதற்கு ஆட்சேர்ப்பு

## அமைச்சர் அறிவிப்பு

வன உயிரிகள் திணைக்களத்துக்கு பல்துறை பணியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதனூடாக யானை - மனித மோதல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கமுடியும் என்று வன உயிரிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யானை - மனித மோதல்களைத் தடுப்பதற்கு ஏற்கனவே பணியில் ஈடுபடுத்தப்பட்ட சிவில் பாதுகாப்புத் திணைக்கள உறுப்பினர்களின் சேவையைத் தொடரவேண்டும். அதே நேரம் பல்துறைப் பணியாளர்களை இணைத்துக் கொண்டால் யானைகள் கிராமங்களுக்குள் அத்துமீறி நுழைவதைத் தடுப்பதற்கான கண்காணிப்புகளை மேற்கொள்ள முடியும். தற்போது சேவையாற்றும் பல்துறைப் பணியாளர்களை நிரந்தர ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

# மருத்துவர்கள் ஓய்வு: வயதெல்லை நீடிப்பு!

கொழும்பு, செப். 17

அரச சேவை விசேட மருத்துவர்கள் மற்றும் மருத்துவர்களின் ஓய்வு வயதை 65ஆக நீடிக்கும் புதிய தீர்மானத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நாட்டின் சுகாதார சேவையில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை குறைக்கும் முயற்சியில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

பொதுத்துறை ஊழியர்களின் ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு வயது 60 ஆகும். ஆயினும் நாட்டில் நிலவும் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு புதிய பிரேரணையின்படி மருத்துவர்களின் ஓய்வு வயதெல்லையை 65 ஆக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

**நாளை** 18.09.2023 திங்கட்கிழமை புரட்டாதி 01

சுபநேரம் : 12.03 - 01.33
ராகுகாலம் : 7.33 - 09.03

விநாயகர் சதுர்த்தி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களின் இன்னலும் ஐ.நா.வில் இனி எதிரொலிக்கும்

## ஐ.நா. இலங்கைப் பிரதிநிதி மார்க் அந்தரே தெரிவிப்பு

**கொழும்பு, செப். 17**

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நிகழ்ச்சி வலயத்தில் மலையக மக்களின் பிரச்சினைகள், தேசிய நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு எதிர்வரும் காலங்களில் முன்னுரிமை வழங்கப்படும் என்று ஐ.நா.வின் இலங்கைப் பிரதிநிதி மார்க் அந்தரே தெரிவித்துள்ளார்.**

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், கேகாலை மாவட்ட அமைப்பாளர் பரணீதரன் உள்ளிட்டோரை இலங்கை ஐ.நா.பிரதிநிதி மார்க் அந்தரே சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது 15 லட்சம் மலையகத் தமிழர் மத்தியில் சுமார் ஏழரை லட்சம் பேர் இன்னும் பெருந்தோட்டங்களில் வாழ்கின்றனர். அவர்களில் ஒன்றரை லட்சம் பேர் தோட்டத் தொழிலாளர்கள். இவர்கள் சமூக பொருளாதார வளர்ச்சியில் மிகவும் பின் தங்கியவர்கள். அவர்களின் பிரச்சினைகளும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் எடுத்துரைக்கப்படவேண்டும். அவர்களுக்குரிய நல்வாழ்வுக்கு வழிவகுக்க வேண்டும் என்று மனோ கணேசன் சுட்டிக்காட்டினார்.

இதையடுத்தே, எதிர்காலத்தில் ஐ.நா. நிகழ்ச்சி வலயத்தில் மலையகத் தமிழர்களின் பிரச்சினைகள், தேசிய நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று ஐ.நா.வின் இலங்கைப் பிரதிநிதி உறுதியளித்தார். (ச-இ)



இலங்கை தேசிய அறக்கட்டளை - யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து 'சிலோனில் ஒரு ஸ்கொட்லாந்து ஓவியர்: எட்வர்ட் அட்கின்சன் ஹோர்னல்' என்ற தொனிப்பொருளில், இலங்கையில் எடுக்கப்பட்ட 20ஆம் நூற்றாண்டின் முற்காலத்துக்கான 47 ஒளிப்படங்கள் அடங்கிய கண்காட்சியை முன்னெடுத்து வருகின்றது.

கடந்த 11ஆம் திகதி முதல் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட வளாகத்தில் அமைந்துள்ள கலைக்கூட வளாகத்தில் இடம்பெற்றுவரும் இந்தக் கண்காட்சி எதிர்வரும் 20ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. (ச-125)

# பண்ணாகம் மெய்கண்டானில் நிறுவுநர் சிலை திரைநீக்கம்!

யாழ்ப்பாணம், செப். 17

யாழ்ப்பாணம் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் சிலை திரைநீக்க நிகழ்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு வித்தியாலய முன்றிலில் இடம் பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி க.கலாபமதி தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பழைய மாணவியும் ஓய்வுநிலை ஆசிரியருமான க.இரத்தினம் அம்மையார் சிலையைத் திரைநீக்கம் செய்து மலரஞ்சலி செலுத்தவுள்ளார். (ச)

# மூதாட்டியின் கோழிகள் கூண்டோடு 'அபேஸ்'!

## கச்சாயில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 17

மூதாட்டியொருவர் வாழ்வாதாரத்துக்காக வளர்த்துவந்த கோழிகள் கூண்டோடு திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் கச்சாய் பகுதியில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

குறித்த மூதாட்டி காலையில் எழுந்து கோழிக் கூட்டைத் திறக்கச் சென்றபோது அங்கு கூண்டோடு கோழிகள் காணாமற் போயிருந்தமை தெரியவந்தது. சம்பவம் தொடர்பில் மூதாட்டி கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-9)

# பரு.வில் றோலர் படகு விஷமிகளால் தீக்கிரை

யாழ்ப்பாணம், செப். 17

பருத்தித்துறை முனைப் பகுதியில் கரையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த றோலர் மீன்பிடிப் படகு இனம்தெரியாத விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. இதன்போது றோலர் மீன்பிடிப் படகு முற்றிலுமாக எரிந்து சாம்பராகியுள்ளது என்று உரிமையாளர் தெரிவித்துள்ளார். (ச-100)

# சித்திரத்தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், செப். 17

கோப்பாய் இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்துக்கு புதிதாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேரின் வெள்ளோட்ட நிகழ்வு நாளை திங்கட்கிழமை விநாயகர் சதுர்த்தி தினத்தன்று இடம்பெறவுள்ளது.

பூர்வாங்கக் கிரியைகளைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு தேரின் வெள்ளோட்டம் இடம் பெறும் என்று ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (ச-17)

### தென்மராட்சியில்

# 'அஸ்வெசும' மேன்முறையீட்டு பயநர்களுக்குக் கொடுப்பனவு

சாவகச்சேரி, செப். 17

தென்மராட்சிப் பிரதேசத்தில் 'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தில் இணைக்கப்படாது மேன்முறையீடு செய்த பயனாளிகளின் ஜூலை மாதக் கொடுப்பனவுகள் அந்தந்த சமுர்த்தி வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அவற்றை வழங்கும் பணிகளை சாவகச்சேரி, கொடிகாமம், வரணி, கைதடி ஆகிய சமுர்த்தி வங்கி கள் முன்னெடுத்துள்ளன.

மேன்முறையீடு செய்த 2ஆயிரத்து 600 பேருக்கான கொடுப்பனவுகளே இவ்வாறு வழங்கப்பட்டு வருகின்றன. (ச-9)


**விற்பனைக்கு**

வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 077 0299 953**
**070 6873 133**

**வாடகைக்கு**

நல்லூர் குறுக்குத் தெருவில் 9 அறைகள், 5 குளியலறைகள், 5 வாகனத்தரிப்பிடங்கள் உள்ள மாடி வீடு உடனடி வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது) தொடர்பு: **076 84 500 10**

**சமையல்/பராமரிப்பு**

கொழும்பில் உள்ள வீடொன்றுக்கு தங்கியிருந்து சமையல் மற்றும் சிறுபிள்ளை பராமரிப்பு செய்யக் கூடிய பணிப்பெண் தேவை. போதிய சம்பளம் + தங்குமிடம் + உணவு.

மேலதிக தொடர்புகளுக்கு:

**077 936 9984**

(CS 25036) A-1

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி சங்கத்தானையில் A9 வீதியில் இருந்து 50M தூரத்தில் சாவ. இந்துக்கல்லூரி. சங்கத்தானை புகையிரத நிலையத்தில் இருந்து 50M தூரத்தில் பிரபல கல்வி நிறுவனம் நடைபெற்ற 2 1/2 பரப்புகாணி சுற்று மதில். குழாய் கிணறு. மலசலகூடம். பயன்தரு மரங்களுடன் ரியூசன் தளபாடங்களுடன் 50 அடி நீள சீற் கொட்டில்களுடன் விற்பனைக்குண்டு. விலை T.P இல் நேரில் தொடர்புகொள்ளலாம்.

**T.P.No: 076 343 2521**

(CS 26242)A-1

**பெண் வேலை ஆட்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கிவரும் பூக்கடை ஒன்றுக்கு மாலை கட்டக்கூடியவர்கள்/ பழக விரும்பும் பெண்கள் தேவை

**074 0814 079**

(cs 26244) M-1

**விற்பனைக்கு**

கடைப் பெயர் பலகைகள் (Name Board) பித்தளை, சில்வர், குத்துவிளக்குகள், டைனமோ - 6 KW, England, Underground வயர், திருத்தி பயன்படுத்தக் கூடிய D பிறிஸர், சோடா போத்தல்கள் விற்பனைக்குண்டு.

**077 236 7848**

**இலவச ஆங்கில கணினி வகுப்புக்கள்**

**பிரிவு 49**

- Diploma in English / Spoken English
- Diploma in ICT
- Diploma in Artificial Intelligence(AI)
- Diploma in Singalam
- Diploma in Psychology & Counselling
- Diploma in Business Management
- Diploma in Project Management
- Diploma in Care Giver
- Diploma in Nursing
- Diploma in Hotel Management

**காலம் : 3 மாதங்கள்**
**பெறுமதிமிக்க சான்றிதழ்**

ஆரம்பம்
23,24/09.2023
10.00 AM

**Free Consultancy Service:**
UK, Canada, Australia
போன்ற நாடுகளுக்கான VISA ஆலோசனைகள் எமது சட்டத்தரணிகளால் இலவசமாக வழங்கப்படும்.

குறிப்பு: க.பொ.த.(உ/த)-2022 பெறுபேறு பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு விசேட பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

IPS Thirunelvely, Jaffna.
T.P:- 021 434 0229
076 685 2529


**கண்ணீர் அஞ்சலி**



பிறப்பு 12.03.1956 இறப்பு 16.09.2023

எமது பிராந்திய காரியாலயத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும்
**திரு. வி.யசோதரன்** அவர்களின்
பாசமிகு தாயார்

**திருமதி சியாமளா விஜயஈஸ்வரன்**

அவர்கள் நேற்று (16.09.2023) சனிக்கிழமை இறைபதமடைந்தமையால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.


பிரிவால் துயருறும்
ஊழியர் நலன்புரிச்சங்கம்
[illegible] பிராந்திய காரியாலயம்
தென்னை பயிர்ச்செய்கை சபை. பளை - கிளிநொச்சி.

(CS 26235)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 12 . 1936



மறைவு
16 . 09 . 2023

## அம்பலவாணர் கனகசபை

(ஆசாரி)

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் கனகசபை (ஆசாரி) நேற்று (16.09.2023) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் (தம்பையா) தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற முருகேசு சின்னாச்சி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கமலாம்பிகையின் கணவரும், நகுலேஸ்வரி லிங்கேஸ்வரன், லோகேஸ்வரி, பரமேஸ்வரன், மகாலக்ஷ்மி, வாகீஸ்வரி, ஜெகதீஸ்வரன் ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற தயானந்தன் மற்றும் கார்த்திகா, இலங்கநாதன், துஷியந்தி, திருமாறன், பிரதீசன், சுரேந்தினி ஆகியோரின் மாமனாரும், மயூரன், பிருதுவிராஜ், இந்துஷா, ஹம்சாரிணி, சாகித்தியன், ஜெகதாரிணி, கம்சவர்தனன், சந்தோஷ், சகானா, ஸ்ரீரங்கன், ஸ்ரீவத்ஸன், அபிராமி, கௌதீஸ், பிரவகி, நிம்கே, தவகணேஷ், சங்கீத் ஆகியோரின் பேரனும், தோபியாஷின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.

(CS 26210) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
30 . 04 . 1944



மறைவு
16 . 09 . 2023

## அப்புத்துரை சதானந்தவேல் (மநுநீதி)

சுழிபுரம் மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் மெல்பேன் அவுஸ்திரேலியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை சதானந்தவேல் நேற்று (16.09.2023) சனிக்கிழமை மெல்பேன், அவுஸ்திரேலியாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் அமரர்களான சின்னையா அப்புத்துரை (சுழிபுரம் பழைய விதானையார்) திலகவதியார் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், சச்சிதானந்தராணியின் அன்புக் கணவரும், அமரர்களான மூளாய் இராசரட்ணம் புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், மது ஆனந்தன் (சிட்னி), திலகா (மெல்பேன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபாசினி (சிட்னி), லூக் (மெல்பேன்) மெல்பேனில் வசிக்கும் ஈஸ்வர நாதன், அருணகிரிநாதன், செந்தில்நாதன், தர்ஷனா ஆகியோரின் அன்பு மாமனாரும், சாந்தகுமாரி (மெல்பேன்), அமரர் நிர்மலாதேவி, நித்தியானந்த மநுநீதி, கிருபானந்த மநுநீதி, நளாயினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமரர் கந்தசாமி, கலாவதி, சந்திரவதனா, தயாபரநாதன், ராதானந்தமலர், கைலாயநாயகி ஆகியோரின் மைத்துனரும், மநுஹரன் (பிறிஸ்பேன்), மநுமதி, மநுமிதா, மநுமயூரன் (லண்டன்), கெயான் (மெல்பேன்), பிரியா (கன்பரா) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (19.09.2023) செவ்வாய்க்கிழமை மெல்பேனில் மாலை 4.00 (அவுஸ்திரேலியா நேரப்படி) இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
R.தயாபரநாதன் - 077 1144 129
அ.நித்தியானந்த மநுநீதி - 077 621 7550
அ.கிருபானந்த மநுநீதி - 077 2335 258

(CS 26234) A-1

# மரண அறிவித்தல்



## நாகமணி வயிரவநாதன்

முன்னாள் கிளை முகாமையாளர் – சங்கானை ப.நோ.கூ. சங்கம்

அராலியைப் பிறப்பிடமாகவும் வட்டு.தென்மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி வயிரவநாதன் நேற்று (16.09.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி-முத்துமாரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-செல்லம்மா தம்பதியினரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற இரத்தினவல்லியின் பாசமிகு கணவரும் சண்முகநாதன், நல்லம்மா, அன்னம்மா,பரமகுருநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரனும்காலஞ்சென்ற சிவகெங்கை, மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிமலன், நிர்மலன் (காரைநகர் பிரதேச சபை), நிமாலினி (யா/இளவாலை கென்றி அரசர் கல்லூரி), நிராஜினி (யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அரச-குமாரி (ஜேர்மனி), சுமித்ரா(யா/அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி), பத்மநாயகி (யா/துணவி அ.மி.த.க பாடசாலை), வத்சலா(யா/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி), சிறிதரன், சிற்சபேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரஞ்சன், நிதாகரன், நிஷாந்தன், வாகீசன், வனஜா, வசந்தன், பத்மஸ்ரீ, பத்மசிரோஜினி, ஜெயந்தி, அகிலாண்டேஸ்வரன், அஜந்தினி, அமுதினி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் குகவதனி, குகசீலன், லோகசீலன், கடம்பவதனி, கடம்பசோதி, தட்சாயினி, மயூரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் நிலோஜன், நிலானி, மயூரா, அஜந்தனா, தரண்யா, பிரவீன்ஜா, நிவேதிகா, தீபிகா, தேனுஜா, நிருபன், நிலவினி, நிவேதன், நிதிலன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2023) ஞாயிற்றுக்கிழமை பி.ப 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அராலி தெற்கு பூனாவோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திக்கிராய் வீதி,
வட்டுக்கோட்டை.
T.P: 0776737001/ 0773305001

தகவல்: நிருபன்
(நிரு-பேரன்)

# மரண அறிவித்தல்

பிறப்பு
20 . 06 . 1941



இறப்பு
13 . 09 . 2023

## சிவதாசன் பரிமளம்

பத்தமேனி அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவதாசன் பரிமளம் கடந்த (13.09.2023) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம் பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவதாசன் அவர்களின் பாசமிகு மனைவியும், ஜெயமளா, சியாமளா, நிமலதாசன், கோமளா, பரிதாசன், கிருஸ்ணதாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், விக்னேஸ்வரன், சிவகுமார், வினோதினி, ஆயிசா, நிறஞ்சன் ஆகியோரின் மாமியாரும், அமரர் இரா்சாத்தி, பரமேஸ்வரி, புஸ்பராணி, சிவசிதம்பரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் முத்தையா, அமரர் கதிரேசு, பரராசசிங்கம், புஸ்பராணி, அமரர்களான பாலசுப்பிரமணியம், சரவணபவான், ஜெயசீலன், செல்வராணி ஆகியோரின் மைத்துனியும், சாருஜன், கனுஜன், விதுஜா, நிருஜா, டினோஜன், வனஜா, தினேஸ், அஞ்சனா, திவாணன் ஆகியோரின் பேர்த்தியும், அர்னுஜன், நைனிக்கா, அபிநயா, அக்சஜா, அர்னிஸ், ஆருத்கி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2023) ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தீத்தாங்குளம் உல்லிவிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26210) A-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள திரையரங்கு ஒன்றிற்கு கீழ்வரும் பணிகளுக்கு வேலையாள் தேவை. (வயது : 22 - 55 வரை)

1). **கணக்கு உதவியாளர்**
கணினி அறிவும் கணக்கு அனுபவமும் தேவை.

2). **Ticket விற்பனையாளர், Ticket பரிசோதகர், துப்பரவு பணியாளர்.**

தொடர்பு: (காலை 9.00- மாலை 5.00) **077 3935 909** (CS 26230)A-1

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் இல.79, சுப்பல் வீதி, மூன்றாம் குறுக்கு வீதி, இரண்டும் இணையும் இடத்தில் 3 வரவேற்பறை, 8 அறைகள், 2 சமையலறை, 5 குளியலறையுடன் கூடிய கழிப்பறைகள், 2 வாகனத் தரிப்பிடம், குடிநீர் விநியோகம் (கிணறு) என்பவற்றுடன் கூடிய மாடி வீடு வாடகைக்கு உண்டு.

**0777 166 028, 077 546 7916**


## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18.02.1945

மறைவு 04.09.2016



**அமரர் V.P. வேலாயுதம்பிள்ளை**

(முன்னை நாள் உதவி அரசாங்க அதிபர்)

திதி : வளர்பக்க திருதியை

தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தில் வந்துதித்த அப்பாவே - உம் பிரிவை
ஆற்றோம் எம் ஐயா அழுகின்றோம் ஓவென்று
தேற்றுவார் யாருமில்லை தேறுவதற்கும் வழியில்லை
மாற்றமாம் வையகத்து நியதியென நினைந்து
இறைவன் திருவடியில் இன்புற்றிருக்கவென
வேண்டி மனம் ஆறுகின்றோம்.


இல.35/6, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

குடும்பத்தினர் (Cr 40578) (N.1)

## மரண அறிவித்தல்

மலர்வு 02 . 02 . 1959

உதிர்வு 16 . 09 . 2023



**திரு.பாலசிங்கம் நந்தகுமாரன்**

**(ஓய்வுபெற்ற உதவிப் பொறியியலாளர், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, திருகோணமலை)**

பயிரிக்கூடல், காரைநகரைப் பிறப்பிடமாகவும் உப்புவெளி, திருகோணமலையை வதிவிடமாகவும் கொண்ட பாலசிங்கம் நந்தகுமாரன் அவர்கள் நேற்று (16.09.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் தவமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை இரத்தினம் (வடலியடைப்பு) தம்பதியரின் மருமகனும், சிவநிதி (ஓய்வுபெற்ற ஆசிரியை, தி/ஸ்ரீ மாதுமை அம்பாள் வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், நிரூபிணி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பட்டினமும் சூழலும், திருகோணமலை), நிரூஜனன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கிரியாதேவி, காலஞ்சென்ற சிவகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு.திலகராஜா (ஓய்வுபெற்ற பொறியியலாளர், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, திருகோணமலை) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம் பெற்று, பூதவுடல் காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பயிரிக்கூடல், காரைநகர் மேற்கு.**
**தொடர்பு இல:077 7573 413**

**தகவல்: குடும்பத்தினர்.**


## தேவை

கிளிநொச்சியில் அமைந்துள்ள பிரபல ஆடையகத்திற்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை.

**077 452 3408, 077 563 2734**

## இலவச Taxi Meter

நீங்கள் உங்கள் வாகனங்களுக்கு PickMe Taxi meter இல் இணைக்க அழைக்கவும். (முச்சக்கர வண்டி / CAR/ VAN / மோட்டார் சைக்கிள்)

**077 473 7737** (CS52124) (N.1)

## வீடு விற்பனைக்கு

சோமசுந்தரம் அவெனியூவில் 1 3/4 பரப்பு வீடு விற்பனைக்குண்டு

தொடர்பு: **077 732 6792**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989 ஆம் ஆண்டு பரணி நட்சத்திரம் கிரகபாவம் 22, செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் பணிபுரியும் (HND IT) மணமகனுக்கு தகுந்த பணிபுரியும் மணமகளை எதிர்பார்க்கின்றோம். (மணமகள் வடமராட்சிக்குள் வசிப்பராக இருத்தல் விரும்பத்தக்கது) (cs 26220) (N-1)

தொடர்பு: **077 864 9878**
**077 634 3103** (Viber)

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தையில் மூன்று படுக்கையறை மற்றும் இரண்டு குளியலறை கொண்ட தொடர்மாடி வீடு 7 ஆம் மாடியில் விற்பனைக்குண்டு. பிரபல பாடசாலைகள் மற்றும் சுப்பர் மார்க்கெட், வைத்தியசாலை என்பவற்றிற்கு மிகவும் அருகில் உண்மையாக வாங்க விரும்புபவர்கள் மட்டும் தொடர்புகொள்வதன் மூலம் appointment எடுத்து வீட்டை பார்க்க முடியும். (1000) சதுர அடி (Land side), வீட்டு உறுதி உள்ளது. விலை பேசி தீர்மானிக்க முடியும். (cs 25035) (N-1)

**071 495 8229**

## வேலையாள் தேவை

வவுனியா நகரத்தில் தாய் இல்லாத சிறு பெண் தனது சொந்தக் கடை நடத்துகின்றார். அவருக்கு உதவியாக பெண் ஊழியர் தேவை. (cs 25808) (N-1)

**070 484 5366**

## மணமகன் தேவை

பருத்தித்துறை (குருகுலம்) 1992.03.20 (சித்திரை), ஆசிரியர், பதிவு திருமணம் நடந்து ஒருசில காரணங்களால் குழம்பிய. அரசதுறை / தொழில்செய்யும் மணமகன் தேவை (Ni 24746) (N-1)

**077 977 3676**

## மாடி வீடு விற்பனைக்கு

வத்தளையில் பிரதான வீதிக்கு அருகாமையில் சகல வசதிகளையும் கொண்ட 2 மாடி வீடு விற்பனைக்குண்டு 45 மில்லியன். பேசி தீர்மானிக்கலாம் (cs 25034) (N-1)

**077 760 7644**

## வர்த்தக நிலம் விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் வர்த்தக நிலம் விற்பனைக்கு உள்ளது. யாழ்ப்பாணம் - காரைநகர் வீதி, நவாலி, வட்டுக்கோட்டையில் 6 வது KM போஸ்டில் (கல்லுண்டாய் வைரவர் கோயிலுக்கு அருகில்) 33 லார்ச்சங்கள் மற்றும் எந்தவொரு வணிக வளர்ச்சிக்கும் தயாராக உள்ளது. 1.5 மில்லியன் ஒரு லார்ச்சம் கடைவளாகம் புதுப்பிக்கப்படும் நிலையில் உள்ளது. (cs 25033) (N-1)

(Monile) **077 974 8228**

## நாவற்குழியில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பெண் வேலையாட்கள் தேவை

- வயது எல்லை : 18 தொடக்கம் 40 வரை
- வேலை நேரம் : 08am - 5p.m
- சம்பளம் 25000/- இருந்து வழங்கப்படும்.

**076 894 9246**

## காணி விற்பனைக்கு

நுவரெலியா நகர எல்லைக்குள் 48 பேர்ச் காணி தூய உறுதி பத்திரத்துடன் விற்பனைக்கு உண்டு. ஒரு பேர்ச் 30 இலட்சம்.

**0773 882 333**
**0718 625 625**


## நன்றி நவிலல்

தோற்றம் 01 . 09 . 1942

மறைவு 18 . 08 . 2023



கடந்த (18.08.2023) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் உதயலட்சுமி பேரம்பலம்**

அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நாம் துயருற்று இருந்தவேளை, எம் குடும்பத்தோடு இணைந்து உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும், மலர் வளையம், அஞ்சலி ஆறுதல், தெரிவித்தவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இல.172, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.** (cs 52127) (2.6)

**குடும்பத்தினர்**

# ஆவணி சதுர்த்தி விரதம்

யாழ்., செப். 17

இருபாலை தென்கோவை அருள்மிகு கற்பகப் பிள்ளையாரின் ஆவணி சதுர்த்திவிரதம் நாளை திங்கட்கிழமை காலை 6 மணியிலிருந்து பிற்பகல் 3 மணி வரை புஷ்பகரணி தீர்த்தக்கேணியில் தீர்த்தம் எடுத்துக் கொண்டு வந்து பக்தர்கள் தங்கள் கைகளால் விநாயகப் பெருமானுக்கு தீர்த்தம் ஊற்றுவார்கள். அதனைத் தொடர்ந்து மாலை 4மணி தொடக்கம் விநாயகப் பெருமானுக்கு விஷேட அபிஷேகமும் பூஜை வழிபாடுகளும் மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் இடம்பெற்று உள்வீதி வெளி வந்து அடியார்களுக்கு அருள்காட்சி கொடுப்பார். பக்தர்கள் வரும் போது குடம் தேங்காய் என்பவற்றைக் கொண்டுவருதல் வேண்டுமென ஆலயநிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-இ)

# தினேஷ் - பஸில் சந்தித்துப் பேச்சு!

கொழும்பு, செப். 17

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் பஸில் ராஜபக்சவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. பொதுஜனபெரமுனவின் முக்கியஸ்தர்கள் சிலரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டுள்ளனர். தினேஷ் குணவர்த்தனவைப்பதவிநீக்குவதற்கு ராஜபக்சக்கள் முயற்சிக்கின்றனர். மஹிந்தவைப் பிரதமராக்குவதற்கான இந்த முயற்சியின் பின்னணியில் பஸிலே உள்ளார் எனச் செய்திகள் வெளிவந்த நிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி

## NCDB

## Northern Co-operative Development Bank

# பதவி வெற்றிடம்

**1. அபிவிருத்தி உத்தியோகத்தர் (Credit)**

- பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு இணையான **தகைமை:** கணக்கியல் முகாமைத்துவத்துறை.
- குறைந்த பட்சம் 3 வருடம் வங்கி / நிதி நிறுவனத்தில் கடன் பிரிவில் வேலை செய்த அனுபவம்.
- கணக்காய்வு அறிக்கைகளை பகுப்பாய்வு செய்யக்கூடிய ஆற்றல்

**2. சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்**

- பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு இணையான **தகைமை:** கணக்கியல் முகாமைத்துவத்துறை. பொருளாதாரம் சார்ந்ததுறை.
- அபிவிருத்தி துறையில் குறைந்த பட்சம் 8 வருட தொழில் அனுபவம்.
- நிதி மற்றும் கணக்கீடு தொடர்பான மேலதிக கல்வித்தகைமைக்கு முன்னுரிமை

**3. அபிவிருத்தி முகாமையாளர்**

- பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு இணையான **தகைமை:** கணக்கியல் முகாமைத்துவத்துறை. பொருளாதாரம் சார்ந்த துறை.
- அபிவிருத்தி துறையில் குறைந்த பட்சம் 8 வருட தொழில் அனுபவம்.
- Accounting மென்பொருளை கையாளும் திறன்

**பொதுவான தகைமைகள்**


- Ms Office மென்பொருளை கையாளும் திறன்
- வடமாகாணத்தின் எப் பாகத்திலும் கடமையாற்றக் கூடியவராகவும் பயணம் செய்யக் கூடியவராகவும் சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
- கூட்டுறவுத் துறை தொடர்பான அனுபவத்திற்கு முன்னுரிமை
- அறிக்கை எழுதுதல் மற்றும் தகவல் தொடர்பாடல் திறன் கொண்டிருத்தல்

**பொருத்தமான விண்ணப்பதாரிகள் lk.ncdb@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு தொர்புகொண்டு தங்கள் பதவி நிலைக்கான விண்ணப்பபடிவத்தை பெற்று ஒக்ரோபர் 11 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.**

- **விண்ணப்ப முடிவுத் திகதி : 11.10.2023**
- **விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: தலைவர், வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி, முதியோர் இல்ல வளாகம், கைதடி.**
- விண்ணப்பம் யாவும் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
- சகல பதவிகளுக்குமான சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- பதவி நியமனம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும்.

தலைவர் (cr. 40571) (N.1)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 - 07 - 1946 | 29 - 08 - 2022 |

அமரர்

## நல்லையா பத்மநாதன் (பிறைசூடி)

ஆண்டு ஒன்று ஓடி விட்டது தெய்வமே!
எங்கே எங்களின் அப்பா என நான்கு
திசையிலும் தேடி மனம் வெதும்பி
அழுவதை இரக்கமற்ற இறைவன்
ஏன் வைத்தான்?
என ஏங்குகின்றோம்.
அப்பா எங்களின் கண்ணீர் காயவில்லை
இனி தாண்டும் நாட்கள்
உங்களின் நினைவுகளுடன்

உங்களின் ஆத்மா இறைவனின் திருப்பாதங்களில் அமைதிபெற பிரார்த்திக்கின்றோம்.

**56/3, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர். 077 3614 630**

CS 26224 (A-1)

# மரண அறிவித்தல்



| பிறப்பு | மறைவு |
|---|---|
| 01 • 08 • 1948 | 15 • 09 • 2023 |

## சிவானந்தம் பரமேஸ்வரி

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவானந்தம் பரமேஸ்வரி நேற்றுமுன்தினம் (15.09.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி தங்கச்சியம்மாள் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், சிவானந்தத்தின் அன்பு மனைவியும், சிவகுமாரி (ஜேர்மன்), சிவரூபன் (அவுஸ்ரேலியா), சிவரூபி (கோண்டாவில்) ஆகியோரின் அன்பு தாயும், இரத்தினசிங்கம், சுதாகர் ஆகியோரின் அன்பு மாமியாரும், பேரப் பிள்ளைகளின் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கலைவாணி மக்கள் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோகுல வீதி, கோண்டாவில்.**

**தகவல்: குடும்பத்தினர்**

52121 (N-1)

# கண்ணீர் அஞ்சலி



| எம்மத்தியில் உறவாட | எம்மத்தியில் விடைபெற |
|---|---|
| 08 • 02 • 1980 | 10 • 09 • 2023 |

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட

## சிறீஸ்கந்தராசா சாந்தறூபன்

(யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 1998 - 1999 மாணவமுதல்வர் சபை முதல்வர்களில் ஒருவர், கரப்பந்தாட்ட அணித்தலைவர், இந்துமாமன்ற தலைவர் மற்றும் வணிகமன்ற பொருளாளர்)

கல்லூரியில் சின்னதாய் கட்டிய நட்பென்ற குருவிக்கூடு விருட்சமாகி பறவைகள் மகிழும் காலம்
ஒரு சிட்டு பறக்கும் போது சிறகொடிந்ததை நண்பர்களின் மனங்கள் பொறுக்கவில்லை!
எமது மண்ணின் மத்தியத் தாயின் அணியில் சிறப்பாக விளையாடி அதேவேகத்தில்
புலம்பெயர் ஐரோப்பிய நாடுகளிலும் தாய்மண்ணின் அணிகளில்
பல வெற்றிக்கிண்ணங்களுக்கே தனி அறை ஒதுக்கியதை அறிந்தோம்! மகிழ்ந்தோம்!!
நீ நேர்மைக்கும் அன்புக்கும் குழந்தையானவன்! கராத்தேயில் காதல் கொண்டவன்!
இசை ரசனையில் மொழிப்பற்றில் ஏறுமுகமானவன்!
ஒரு யதார்த்தமான சமூக அக்கறைக் கவிஞன்! அழகிய சித்திரக் கலைஞன்!
இவ்வளவு ஆளுமையும் திறமையும் கொண்ட நிஜ ஹீரோவாக வாழ்ந்த நீ
ஏன் அவசரப்பட்டு எமக்கு மனத்துயரை தந்தாய்! அமைதியாக உறங்கு நண்பா!

பிரிவால் துயருறும்

**1999 உயர்தர வர்த்தகப் பிரிவு நண்பர்கள். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

(cs 26215) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



தோற்றம்
05.04.1949

மறைவு
28.08.2023

கடந்த (28.08.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்த
எங்கள் குடும்பத் தலைவி

### அமரர் செல்வராணி பரராஜசிங்கம்

திதி: பூர்வபக்க திரயோதசி

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன நிகழ்வும் இன்றைய தினம் (17.09.2023) ஞாயிற்றுக்கிழமை சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசியூடாகவும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், துண்டுப் பிரசுரங்கள், பதாகைகள், சமூகவலைத்தளங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இன்றுவரை எமக்கு பலவழிகளில் உதவியாக இருந்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல.15, ஆடியபாதம் றோட்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 086 8650

(cr.38118) (2.6)

## மரண அறிவித்தல்



தோற்றம்
12 . 03 . 1956

மறைவு
16 . 09 . 2023

### திருமதி சியாமளா விஜயஈஸ்வரன்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதி, நல்லூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சியாமளா விஜயஈஸ்வரன் அவர்கள் நேற்று (16.09.2023) சனிக்கிழமை நல்லைக்கந்தன் திருவடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Dr. சோமசுந்தரம் (இளைப்பாறிய வைத்தியர்) பத்மாவதி தம்பதியரின் பாசமிகு ஏகபுதல்வியும், காலஞ்சென்றவர்களான முருகையா (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) நாகரெத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், விஜயாஸ்வரனின் (இளைப்பாறிய படவரைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம்) பாசமிகு மனைவியும் மற்றும் Dr.முரளிதரனின் (இளைப்பாறிய சிரேஷ்ட விரிவுரையாளர், Lawyer, Australia) அன்புச் சகோதரியும், சத்தியாவின் (கனடா) அன்பு மச்சாளும், யாழினி (ஆசிரியை-நல்லூர்), ஜனகன், யசோதரன் (முகாமைத்துவ உதவியாளர், யாழ்பாண பிராந்தியக் காரி யாலயம், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை), ஜனனி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்ரீசிவா (பொறியியலாளர், Ideal Engineering (Pvt) Ltd), ரஞ்சித் (சவூதி - ஊரெழு) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸ்ரீஜான்வியின் பாசமிகு பேர்த்தியும் மற்றும் விஜயராஜா (லண்டன்), விஜயராணி (லண்டன்), காலஞ்சென்ற விஜயநேசன் (லண்டன்), காலஞ்சென்ற விஜயசுந்தரி (இந்தியா), விஜயஸ்வரி (பிரான்ஸ்), விஜயகுமார் (இளைப்பாறிய பொதுச் சுகாதார பரிசோதகர் - நல்லூர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

138/3, நல்லூர் கந்தசுவாமி
கோவில் வடக்கு வீதி,
(கோவில் வீதி),
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல் : விஜயஈஸ்வரன்
மற்றும் குடும்பத்தினர்.
077 0200 807 (கணவர்)
077 821 0139 (மகன்)
077 248 7237 (மகள்)

CS 26184 M-1

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
08 . 12 . 1995

மறைவு
18 . 08 . 2023

கடந்த (18.08.2023) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எமது அன்புச் செல்வம்

### அமரர் குணசேகரம் வருதிஷா

(தாதியர் - நொதேன் வைத்தியசாலை)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (17.09.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தொடர்ந்து ஸ்ரீ லக்ஷ்மி பிளாசா (இல.84, ஐயனார் கோயில் வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்) மண்டபத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசனமும் நடைபெறவிருப்பதால், தாங்கள் வருகை தந்து அன்னாரின் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

குடும்பத்தினர்.

77/57, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 0777 110 527
0776 117 095

CS 26236) A-1

## மரண அறிவித்தல்



### திரு. J.R அல்பேட் ஜெயராஜகுலேந்திரன்

(ஓய்வுபெற்ற அதிபர் - தரம்: 1)

உடுவிலை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் டேவிட் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.J.R.அல்பேட் ஜெயராஜகுலேந்திரன் (ஓய்வுபெற்ற அதிபர் - தரம் : 01) நேற்றுமுன்தினம் (15.09.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோன் றொபேட் அல்பேட், பிறிசில்யா இராசாத்தியம்மா தம்பதியரின் மூத்த மகனும், மேரி கில்டாவின் அன்புக் கணவரும், திருச்செல்வம் லூர்த்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், றோஸலின் ஜெயமலர், ஜெயராஜினி (கொழும்பு), ஜெயராஜவதனி (ஜேர்மனி), ஜெயசிறிதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை, மைக்கேல் (பொறியியலாளர்- யாழ்ப்பாணம்), இம்மானுவேல் (ஜேர்மனி) பிலிப் ஜோசப் (ஜேர்மனி), லம்பேட் (ஜேர்மனி), அன்ரனிமெல் (ஜேர்மனி), லிப்ரன் (UK), ஹட்சன் (ஜேர்மனி), ஆகியோரின் அன்பு மைத்துனரும், வோல்வின் (ஆசிரியர்), கிருஷாந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெறின் (விரிவுரையாளர்), சாருமதி (வங்கி முகாமையாளர் BOC) ஆகியோரின் அன்பு மாமனாரும், டீலன், கெய்லினா, ஹெய்நிஷா, லிருனா, ஹற்றியன், ஜினுரியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (18.09.2023) திங்கட்கிழமை 3.00 மணியளவில் யாழ். மரியன்னை தேவாலயத்தில் நடைபெற்று, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(cs.26118) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உள்ளூராட்சித் தேர்தல்: இரத்துச் செய்ய ஏற்பாடு

## கொழும்பு ஊடகம் பரபரப்புத் தகவல்

**கொழும்பு, செப். 17**

**ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கொழும்பு ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

கடந்த மார்ச் மாதம் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. ஆயினும் நிதிநெருக்கடி காரணமாக உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. இதனால் வேட்புமனுக்களைத் தாக்கல்செய்த வேட்பாளர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தவர்களில் பலர் அரச ஊழியர்கள். அவர்கள் பிரதேசங்களில் நடைபெறும் பொது நிகழ்வுகளிலும்கூட கலந்துகொள்ளமுடியாத நிலை காணப்படுகிறது எனப் பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டினர். அதனையடுத்தே இந்தத் தேர்தலை இரத்துச்செய்ய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-6)




கொழும்புத் துறைமுக நகர்

# பொருளாதாரச் சிறப்பறிக்கை உடனடியாகச் சமர்ப்பிக்குக!

## அரச நிதி பற்றிய குழு பணிப்பு

கொழும்பு, செப். 17

கொழும்புத் துறைமுகநகரத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்பாடுகளால் அரசாங்கத்துக்குக் கிடைத்திருக்கும் வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரச நிதி பற்றிய குழு பணித்துள்ளது.

அரச நிதி பற்றிய குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் அண்மையில் கூடியபோதே இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது வெளிநாடுகளின் வருவாயை ஈர்க்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள கொழும்புத் துறைமுக நகரத்தில் உணவுக்கூடங்கள் அமைக்கப்பட்டிருப்பதன் சட்ட ஏற்பாடுகள் குறித்து அரச நிதி பற்றிய குழு வினவியது. கொழும்பு துறைமுக நகரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அனைத்து உணவகங்களும் கொழும்புத் துறைமுக நகர பொருளாதாரத்துடன் இணைந்த பொழுதுபோக்கு நடவடிக்கைகளின் கீழ் இயங்குகின்றன. அவை 2027ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் அகற்றப்படும் என்று கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக் குழுவின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். இந்த உணவுக்கூடங்கள் அமைப்பதற்காக அனுமதிகளை வழங்குவது மற்றும் நீக்குவது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக் கொண்டீர்களா? என வினவிய ஆணைக்குழு, இதுதொடர்பான தகவல்களை விரைவில் குழுவில் சமர்ப்பிக்குமாறு கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக் குழுவுக்குப் பணிப்புரை விடுத்தது.

மேலும் துறைமுக நகரத்தில் தற்பொழுது முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளால் அரசாங்கத்துக்குக் கிடைத்திருக்கும் வருமானம், செலவுகளின் வகைப்படுத்தல் ஆகியவை பற்றிய விவரங்களை வழங்குமாறும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அரசாங்க நிதி பற்றிய குழு அறிவுறுத்தியது. (ச-44)

## கலந்துரையாடல்

வவுனியா, செப். 17

'மலையக மக்களும் 200 வருட வாழ்வியலும் நிலவுரிமையும்' எனும் தலைப்பில் சமூகவிஞ்ஞான படிப்புவட்டம் நடத்தும் திறந்த கலந்துரையாடல் இன்று மாலை 3 மணிக்கு வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஆசிரியர் பாமதி ஆரணன் தலைமையில் இந்தத் திறந்த கலந்துரையாடல் இடம்பெற உள்ளது. (ம-110)

# மின்கம்பங்களை அகற்றுமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 17

அளவெட்டி தெற்கு இளையதம்பி வீதியால் போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படும் மின் கம்பங்களை அகற்றி ஓரமாக நடுமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த வீதியில் காணப்படும் மின்கம்பங்களால் இரவுநேரங்களில் விபத்துகள் ஏற்படலாம்.

எனவே அந்த மின்கம்பங்களை அகற்றி பாதுகாப்பான பயணத்துக்கு வழிவகுத்துத் தாருங்கள் என்றும் தெரிவித்துள்ளனர். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சதொச' பணியாளர்கள்

## 300பேருக்கு கட்டாய ஓய்வு!

கொழும்பு, செப். 17
கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்தின் (சதொச) மறுசீரமைப்பின் கீழ், 300 ஊழியர்களை இம்மாதம் 30ஆம் திகதி முதல், கட்டாய ஓய்வில் அனுப்புவதற்கு அதன் பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.
பொது மேலாளர், மேலாளர், கணக்காளர், உதவிக் கணக்காளர், மேலாண்மை உதவியாளர், மேற்பார்வையாளர், மண்டல மேற்பார்வையாளர், பொறியியல் மேற்பார்வையாளர், சாரதி, சாரதி உதவியாளர் உள்ளிட்ட பல பதவிகளில் பணியாற்றிய 292 பேரே கட்டாய ஓய்வில் அனுப்பப்படவுள்ளனர்.
வர்த்தக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ அமைச்சரவையில் முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கீகாரம் கிடைத்துள்ள நிலையில் 'சதொச' நிர்வாகம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. (அ-ஒ-இ)



நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழா நிறைவுற்ற நிலையில், பொலிஸார் நேற்றுக்காலை விசேட பூசை வழிபாடுகளை மேற்கொண்டனர். யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்கள் இதில் கலந்துகொண்டனர். (எ-26)

# நாவற்காடு குளத்தை புனரமைத்துத் தரவும்

## மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 17
வரணி - நாவற்காடு பகுதியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆல யத்துக்கு அருகிலுள்ள குளம் தற்போதைய கடும் வறட்சி காரணமாக வற்றியதால் கால்நடைகள் குடிதண்ணீரின்றி அந்தரிக்கின்றன என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
இந்தக் குளத்தின் இருபக்கமும் வயல் வெளி காணப்படுகிறது. தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக குறித்த குளத்தின் நீர் வற்றிப்போயுள்ளது. இதனால் வயல்வெளிகளில் மேய்ந்துவிட்டு வரும் கால்நடைகள் குடிப்பதற்குத் தண்ணீரின்றித் திண்டாடி வருகின்றன.
எனவே இந்தக் குளத்தைப் புனரமைக்கும் பட்சத்தில் அது அடுத்த வருடத்திலாவது சிறப்பானதொரு நீரேந்துப் பகுதியாக இருக்கும் என்று பொதுமக்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-159)

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 07 . 1945



மறைவு 16 . 09 . 2023

### சண்முகநாதன் மகேந்திரன்

இணுவில் மேற்கு இணுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் மகேந்திரன் அவர்கள் நேற்று (16.09.2023) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதன் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் தவமணியின் மருமகனும் பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும் தரணீதரன் (இலங்கை மின்சார சபை - சுன்னாகம்), துஷ்யந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் கிருபானந்தன் (கனடா), காயத்திரி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - உடுவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸ்ரீநிதன், ஸ்ரீனோகா (கனடா), தர்வின், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும், ராஜேஸ்வரி அமரர் தங்கேஸ்வரன், சண்முகமலர், சிவமதி (சுவீடன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலச்சந்திரன், குமுதினி, செல்வநாயகம், மகேந்திரன் (சுவீடன்) ஆகியோரின் மைத்துனரும் சோதிமலர், அமரர் மனோகரன், குணாளன் (பிரான்ஸ்), பத்மினி, குமரவேள் (ஆசிரியர் - யா/யூனியன் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும் கந்தசாமி, ராஜேஸ்வரி, சுகந்தி, சபாநாதன், டிலானி ஆகியோரின் சகலனும் மற்றும் மருமக்கள் பெறாமக்களின் மாமனாரும் பெரியதந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்
077 9785 731

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 11 . 1950



மறைவு 15 . 09 . 2023

### செல்வி. இராஜராஜேஸ்வரி (மங்கை)

யாழ்ப்பாணம், தாவடி தெற்கு, பாடசாலை ஒழுங்கை (School Lane) தாவடியை பிறப்பிடமாகவும், இந்தியா, மலேசியாவை வதிவிடங்களாக்கிய மங்கை என்று அழைக்கப்படும் செல்வி. இராஜராஜேஸ்வரி அவர்கள் கடந்த (15.09.2023) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் தாவடியில் இயற்கை எய்தினார்.
அன்னார் காலஞ்சென்ற நாகராசா, நாகரத்தினம் (அம்மாக்கா) தம்பதியரின் அன்பு மகளும், மகேந்திரராணி (லீலா) அக்கா, பவளம் (தங்கை) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற திரு.தம்பாப்பிள்ளை, விக்னேஸ்வரன் அவர்களின் மைத்துனியும், கெங்காதரன் (இலங்கை), கெங்காதேவி (Canada), ஈசு (Canada), காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் (London), கருணாகரன் (London), பிரபாகரன் (London), பிரபாலினி (Malaysia) ஆகியோரின் சித்தியும், ஜெயந்தி, சுபாஸ்கரன், துஜி, முகுந்தினி, கணேசன் ஆகியோரின் அன்பு சின்ன மாமியும், தர்மிக்கா மிதுலன், கௌசிக்கா குகன், தீபிக்கா, கவின், நிலவன், கதிரவன், ஹரேந்திரா ஆகியோரின் அம்மம்மாவும் லக்ஷன், சிந்து, வைதேகி, யாதவி ஆகியோரின் அப்பம்மாவும், மறவன், மாசிலன், அன்னை ஆகியோரின் அப்பம்மாவும், வெண்ணிலாவின் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2023) ஞாயிற்றுக்கிழமை பாடசாலை ஒழுங்கை, தாவடி தெற்கு கொக்குவில் யாழ்ப்பாணத்தில் அவரின் இல்லத்தில் முற்பகல் 9.30 மணியளவில் நடைபெறும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மகேந்திரராணி
075 5465 632
077 949 6855

(CR 40586) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பெற்றோல்...

நேற்று அதிகாலை வன்முறைக் குழுவொன்று குறித்த வீட்டுக்குள் புகுந்து பெற்றோல் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளது. அந்தக் குழு பெற்றோல் ஊற்றி வீட்டின் சில பகுதிகளை எரிப்பதற்கும் முயன்றுள்ளது. வீட்டின் வெளியில்நின்றிருந்த முச்சக்கரவண்டி உள்ளிட்ட உடைமைகள் மீதும் தாக்குதல் நடத்திவிட்டு வன்முறைக்குழு தப்பிச் சென்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் வீட்டிலிருந்த 5பேர் காயமடைந்துள்ளனர்.

அந்த வீட்டிலிருந்த பெண்ணுக்கும் உரும்பிராயைச் சேர்ந்த இளைஞருக்கும் இடையிலான காதல் விவகாரமே இந்தத் தாக்குதலுக்கு காரணம் எனப் பொலிஸார் தமது முதல் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகக் குறிப்பிட்டனர். சம்பவம் தொடர்பில் உரும்பிராய், அச்செழு, ஊரெழுவைச் சேர்ந்த 36, 25 மற்றும் 28 வயதுடைய இளைஞர்களை நேற்றுக் கைது செய்துள்ளனர். அதில் பெண்ணைக் காதலித்தவர் என்று சொல்லப்படும் இளைஞனும் உள்ளடங்கியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ-ஒ-20-27-125)

# இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கைகள் மாயமாகுவது தொடர்பில் விசாரணை

கொழும்பு, செப். 17

பதிவுத் தபாலில் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்ட அரச இரசாயன பகுப்பாய்வு அறிக்கைகள் காணாமல் போனமை குறித்து முறையான விசாரணை நடத்தப்படவேண்டும் என நீதி மற்றும் சட்டத்தை மதிக்கும் சமூகம் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அரச இரசாயன பகுப்பாய்வு அறிக்கைகள் பதிவு தபால் மூலம் அந்தந்த நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படும். குறிப்பிடப்படும் பல அறிக்கைகளை மீண்டும் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றங்களால் கோரப்படுவதாகவும் அந்த அறிக்கைகள் கிடைக்கப் பெறவில்லை என்ற காரணங்களை நீதிமன்றங்கள் தெரிவிக்கின்றன எனவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் முறையான விசாரணை நடத்துவதே பொருத்தமானது என குழு அவதானித்துள்ளது.

அரச இரசாயன பகுப்பாய்வு அறிக்கைகளை திருப்பி அனுப்ப சிறிது கால அவகாசம் தேவைப்படுவதால், அது தொடர்பான நடவடிக்கைகள் தாமதமாகி, பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு பெரும் அநீதி இழைப்பதாகவும் துறைசார் குழு தாக்கல் செய்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பகுப்பாய்வுகளை மேற்கொள்ள இரசாயனங்கள், இதர பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், இயந்திர உதிரிபாகங்கள் பற்றாக்குறை இருப்பதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

அரச பகுப்பாய்வு திணைக்களத்தில் 113 பணியிடங்கள் வெற்றிடமாக உள்ள நிலையில் இவற்றின் தாமதத்துக்குக் காரணமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ஒ-இ)

## திலீபன்...

தியாகதீபம் திலீபனின் இறுதிநாள் நினைவேந்தலுக்கு முன்னதாக இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டு 4 ஆண்டுகளின் பின்னர் விசாரணைகள் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவே பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

நல்லாட்சி அரசின் காலத்தில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சுக்கு ஊடாக, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் நிதியில் பாதுகாப்பு வேலிக்கான நிதி ஒதுக்கப்பட்டது. அதற்கு அமைவாக அது நிர்மாணிக்கப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுக்கு நல்லாட்சிக் காலத்தில் பொலிஸார் தடை உத்தரவு பெற்றனர். இதன்போது நீதிமன்றத்துக்கு முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களில், திலீபனின் நினைவுத் தூபி அரசாங்க நிதியில் அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணப் பொலிஸாரால் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு இந்த விடயம் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு மிகக் காட்டமான கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. பயங்கரவாத அமைப்பின் உறுப்பினர் ஒருவருக்கு அரசாங்க நிதியை எவ்வாறு ஒதுக்க முடியும்? என்று அதில் கேள்வி எழுப்பப்பட்டிருந்ததுடன் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு அமைவாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் புலன் விசாரணைப் பிரிவினர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து கடந்த ஆண்டு, நல்லூர் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகத்திடம் வாக்குமூலம் பதிவு செய்திருந்தனர்.

இந்த நிலையில் இந்த ஆண்டு தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஆரம்பமாகியுள்ள நிலையில், பொலிஸ் திணைக்களம் கடந்த ஆண்டு இடம்பெற்ற விசாரணையின் முன்னேற்றம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கோரியுள்ளது. இதற்கு அமைவாக சட்டமா அதிபர் திணைக்களம் உள்நாட்டலுவல்கள் அமைச்சிடம் விளக்கம் கேட்டுள்ளது. இதனையடுத்து உள்நாட்டலுவல்கள் அமைச்சின் புலன் விசாரணைப் பிரிவு யாழ்ப்பாணத்துக்கு இந்தவாரம் வருகை தந்து அப்போதைய மாநகரசபையின் ஆணையாளராக இருந்த பொ.வாகீசனிடம் வாக்குமூலம் பெற்றுள்ளது. நல்லூர் பிரதேச செயலகம் ஊடாகக் கிடைத்த நிதியில் பணிகளை மாநகரசபையே முன்னெடுத்திருந்தமையால் அதனடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கு அமைவாக அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

(அ-ஒ-5)

## காணாமற்போனவர்...

இந்த நிலையிலேயே குறித்த இளைஞர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ-ஒ-19)

## ஐ.எம்.எப்...

இப்போதைக்குக் கிடைக்கப்பெறாது என வெரிட்டி ரிசேர்ச் நிறுவனம் தெரிவித்துள்ளது.

வெரிட்டி ரிசேர்ச் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி நிஷான் டி மெல் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

அந்த நிதி இந்த மாத இறுதிக்குள் வழங்கப்படுமாயின் இரண்டு மாதங்களுக்கு முன்னதாக மதிப்பாய்வை மேற்கொண்டிருக்கவேண்டும். ஆனால், அது நடைபெறவில்லை. இலங்கையின் செயற்பாடுகள் சற்று மந்தகதியில் காணப்படுவதால் சர்வதேச நாணய நிதியத்தின் மதிப்பீட்டுப் பணிகள் தாமதமடைந்துள்ளன.

இதேவேளை - சர்வதேச நாணய நிதியம் வழங்கிய பல்வேறு நிபந்தனைகளை இலங்கை பூர்த்தி செய்துள்ளது - என்றார்.

(அ-ஒ-இ)

## ஒரு கோடி...

நேற்றுமுன்தினம் மாலை சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த ஹைஏஸ் வாகனத்தை விசேட அதிரடிப்படையினர் வழிமறித்துச் சோதனை செய்தனர். இதன்போது உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

இதனையடுத்து வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 70 வயதான முதியவர் ஒருவர் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார். (அ-ஒ-26-27-125)

## பருத்தித்துறையில்...

பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலிருந்த வயோதிபப் பெண் அயல் வீட்டில் இடம்பெற்ற திவச நிகழ்வுக்குச் சென்று மீண்டும் வீட்டுக்கு வந்தபோது வீடு உடைக்கப்பட்டு அங்கிருந்த தங்கச் சங்கிலி, தங்கக்காப்பு என 10 பவுண் தங்கநகை மற்றும் பணம் என்பன திருடப்பட்டமை தெரியவந்தது.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டு செய்யப்பட்டுள்ளது. இதற்கமைவாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ-ஒ-100)

## பூநகரியில்...

உயிரிழந்துள்ளார். பூநகரியிலிருந்து பரந்தன் நோக்கி குறித்த இளைஞரும் மற்றொருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்தனர். அப்போது பரந்தனிலிருந்து பூநகரி நோக்கி பயணித்த கப்ரக வாகனம் ஒன்று, எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ளது. சம்பவ இடத்தில் இளைஞர் உயிரிழந்ததுடன் மற்றையவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்தை ஏற்படுத்திய சாரதி தப்பிச் சென்றுள்ள நிலையில் பூநகரி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(அ-ஒ-113)

## கடலில்...

இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பருத்தித்துறை துறைமுக கடலில் இருந்து மீன்பிடிப்பதற்காக சென்றபோது நடுக்கடலில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் படகில் இருந்தவர்களால் மீட்கப்பட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை காலையே சடலம் கரைக்குக் கொண்டு வரப்படும் எனவும் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டு வரும் தென்பகுதியை சேர்ந்த பலநாள் மீன்பிடி படகுகள் பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நின்று ஓய்வெடுத்து மீண்டும் மீன்பிடி பயணத்துக்கு தயார்படுத்தி செல்வது வழக்கமாகும். அவ்வாறு பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நின்று நேற்றைய தினம் ஆழ்கடல் மீன்பிடிக்குச் சென்றபோதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-ஒ-100)

வேலைக்கு ஆள் தேவை (பெண்)

தனியார் நிறுவனம் ஒன்றின் திருநெல்வேலி கிளைக்கு வாடிக்கையாளரை கையாளும்

அனுபவ முள்ள பெண் ஊழியர் தேவை.

வயதெல்லை 20 - 30 உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளமுடியும்.

074 391 0844

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, செப். 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்று மழைக்கு வாய்ப்புள்ளது என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. இதுதொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


## காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாயில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

(CS24384)(J-1) 070 701 3060

## காணி விற்பனைக்கு

புத்தூர் மேற்கு, நவற்கிரி சந்திக்கு அருகில் 14 பரப்புத் தோட்டம் விற்பனைக்கு இரண்டு பேர் இரண்டாக்கி வீடும் கட்டலாம்.

077 706 6487

## மணமகன் தேவை

பருத்தித்துறை இந்து (V) 36 வயதுடைய (மூல நட்சத்திரம்) சித்த ஆயுர்வேத வைத்தியருக்கு அரச வேலை உடைய இந்து (V) மணமகனை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு: 077 389 9115

## A/L Online Group Classes

Biology, Chemistry

Jaffna Lecturer :- 077 807 5566

## திருவாசகம் முதியோர் இல்லம்

திருவாசகம் முதியோர் இல்லம் நல்லூர் கோயிலுக்கு அருகாமையில் 87.89 செட்டித்தெருவில் உள்ள திருவாசகம் முதியோர் இல்லத்தில் நவீன அறைகளுடன் தங்குமிட வசதி, உணவு மற்றும் தாதியர் பராமரிப்பு சேவை உண்டு.

தொடர்புகளுக்கு: 076 207 4416
077 528 5213
044 749 589 0204

## மணமகள் தேவை

யாழ். இந்து திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியில் தொழிற்சாலை ஒன்றில் 35 வருடங்கள் கடமைபுரியும் குடிப்பழக்கம் அற்ற, நோய் காரணமாக மனைவியை இழந்த இன்னும் 6 மாதத்தில் கடமையில் இருந்து ஓய்வுபெறும் மணமகனுக்கு 45 வயது முதல் 55 வயதுடைய நற்குணமுடைய மணமகள் தேவை. சுயவிபரங்களுடன் விண்ணப்பத்தை பின்வரும் முவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பர இலக்கம் JF 1050
C/O உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(cs 26229) (N-1)

## காணி விற்பனைக்கு

அல்லைப்பிட்டி சந்தியிலிருந்து 200m தூரத்தில் வீதியோரமாக அமைந்துள்ள 42 பரப்புக் காணி (நண்டு Factory அருகாமையில்) விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர்மானிக்கலாம்.

(cs 52103) (N-1)

076 129 3011

## மதிய உணவு பொதி விநியோகம்

யாழ்ப்பாண நகரப்பகுதியில் அமைந்துள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் கடமைபுரியும் அலுவலர்களுக்கான மதிய நேர உணவு நேரடியாக அல்லது நகரப்பகுதியில் அமைந்துள்ள விநியோகப் பகுதியில் பெற்றுக் கொள்ள முடியும்.

மரக்கறி பாசல் 325/-

076 2735 930 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொண்டு பதிவுசெய்துகொள்ளமுடியும்.

(cs 52096) (N-1)

## காணி விற்பனைக்கு

யாழ். தையிட்டி காங்கேசன்துறையில் 8 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

074 234 3241

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம்,1985 இல் பிறந்த, பலாலியை சேர்ந்த படித்த அரச தொழில் செய்யும் மணமகனுக்கு (விவாகரத்து) 2 இல் சூரியன் செவ்வாய் பொருந்தக் கூடிய அழகிய மணமகளை எதிர்பார்கின்றோம். (உள்நாடு / வெளிநாடு)

077 935 2943

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

உங்கள் புதிய பழைய கட்டடங்கள், கோவில், வில்லு மண்டபங்கள், கொங்கிறீட் சிலப்புகள் அனைத்திற்குமான நீர் கசிவை தடுப்பதற்கும் மற்றும் வீடுகளில் ஏற்படும் வெடிப்புகளை உத்தரவாதத்துடன் சீர்செய்தும் தருவோம். நீங்களும் இரசாயன பொருட்களை பெற்றும் சீர்செய்யலாம். (North and East Engineernig) முதன் முதலில் வடமாகணத்தில் அறிமுகம் செய்தவர்கள் கொங்கிறீட் பாறைகள், லேசாக உடைப்பதற்கான இரசாயனத்தையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

10 வருட உத்தரவாதம் உண்டு, உலகத்தரம் மிக்க கட்டட இரசாயனப் பொருள்களின் Finex ஸ்தாபனத்தாரின் ஏக விநியோகத்தர்கள் விஷேட விலைக்கழிவு உண்டு.

N & E ENGINEERING FINEX
(Exclusive Dealer For FINEX)
No.108, Galle Road, Dehiwala
Tel.: 011 273 9391 Mobile: 071 753 9391
Hot Line: 071 743 9393

(cs 52323) (N-1)

## வேலைக்கு ஆட்கள் தேவை

அளவெட்டியில் இயங்கிக்கொண்டிருக்கும் பிரபலமான மொத்த சில்லறை வியாபார நிறுவனத்திற்கு பின்வரும் வேலைகளுக்கு ஆட்கள் உடனடியாகத் தேவையாக உள்ளது.

i. அனுபவம் உள்ள சிட்டை எழுதுனர் (Bill Clerk) (ஆண்கள் or பெண்கள்)
ii. பொருள்கள் விநியோகிப்பவர் (Sales man)
iii. மூடைகள் ஏற்றி இறக்கக்கூடிய தொழிலாளிகள்

மேற் குறிப்பிட்ட வேலைகளிற்கு தகுதியானவர்கள் கீழுள்ள தொடர்பு இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு இலக்கம்: 075 911 9271
077 911 9971

(cs 40583) (N-1)

## ஆண் வேலையாள் தேவை

80 வயது ஆண் ஒருவரை பராமரிப்பதற்கு 45 - 55 வயதிற்கு இடைப்பட்ட பகுதிநேர ஆண் வேலையாள்கள் தேவை.

(cs 52107) (N-1)

077 210 9860, 077 658 3202

## வேலையாட்கள் தேவை

காங்கேசன்துறை தையிட்டியில் அமைந்துள்ள மருதம் (பண்ணைக்கு) Farm தங்கி நின்று வேலைசெய்வோர்கள் தேவை. இடவசதியுண்டு. குடும்பமாக தங்கி வேலைசெய்யும் வசதியுண்டு. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

077 747 4498

## சமையலாளர் தேவை

தங்கி நின்று வேலை செய்பவர்களுக்கு சமைப்பதற்கு அனுபவமுள்ள சமையலாளர் தேவை. (மூன்று வேளையும் சமைப்பதற்கு)

(cs 52115) (N-1)

077 442 4240

## கொழும்பு விலையில்

யாழ்ப்பாணத்தில் கோழி மலிவு விற்பனை

*1 Kg சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி விலை 1250/-
*1 Kg பேரன்ஸ் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி விலை 1250/-
*கல்பேட் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி விலை 1 Kg 1250/-
*விறாத்து கோழிக்குஞ்சுகள், சேவல், ஊர்கோழி

இவை அனைத்தும் வியாபாரிகளுக்கு, ஹோட்டல் தேவை படுபவர்களுக்கு விசேட விலை கழிவு உண்டு.

தொடர்பு: நியு சிற்றி பாம்
நியு சிற்றி கோழிக்கடை
இல.08, சின்னக்கடை மார்க்கெட், குருநகர். யாழ்ப்பாணம்.

(CS 26214)A-1

## கடை விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 2 மாடி வியாபாரகட்டடம் குளியலறை தங்குமிட வசதிகளுடன் விற்பனைக்கு

077 728 0826

## Weigh Bridge (வாகன நிறை அளவிடும்) பொறி For Sale

யாழ். தென்மராட்சிப்பகுதியில் Weigh Bridge ஒன்று உடனடியாக விற்பனைக்குண்டு.

(cs 52118) (N-1)

077 771 1449

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 150 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

* வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்
* நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்
* A-9 வீதியிலிருந்து 200 மீற்றர் தூரம்
* யாழ். பஸ் நிலையம் 3 1/2 கிலோமீற்றர் தூரம்
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* நன்னீர் ஊற்று
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300000/=)
* தரகர் தேவையில்லை

தொடர்பு:- 077 6234 204
076 7558 606
077 076 0389

(CS 26222 A)A-1

## வேலைவாய்ப்பு

மாதம் ஒரு லட்ஷத்துக்கு மேல் சம்பாதிக்கலாம்

◆ யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனத்திற்கு மாவட்ட ரீதியிலான முகவர்களும் பிராந்திய முகவர்களும் தேவை.

◆ இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

◆ சொந்த ஊரில் இருந்தபடியே வேலை செய்யும் வாய்ப்பு. ஏற்கனவே அரச / தனியார் வேலை பார்க்கும் அலுவலர்களோ அல்லது புதிதாக வேலை தேடுபவர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

◆ கல்வி தகுதி - GCE O/L
◆ வாகன ஓட்டுநர் அனுமதி மோட்டார் வாகனம்
◆ வங்கி கணக்கு அவசியம்
◆ Smart phone அவசியம்

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்
லண்டன் - 0044 788 0328991 (whatsapp)
இலங்கை - 077 59511 34 /0710404773

(cs 52101) (N-1)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

மன... ள்ளுவர் ஆண்டு : 2053 ஆவணி 31 ஞாய... மை (17.09.202... :165

இங்கு ஓர் மலர் வாடுகின்றதே
இதயநாடிகள் ஒடுங்குகின்றதே
தங்கமேனியைச் சாவு தின்னுதே
தணலில் ஆடிய மேனி சோருதே!

–புதுவை இரத்தினதுரை





# ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகளுக்கு மன்னிப்பா?

## கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்குப் பகிரங்கக் கடிதம்

○ அ.நிக்ஸன்

**1991** ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் திகதி தாங்கள் கொழும்பு துணை ஆயராகத் திருநிலைப் படுத்தப்பட்டுப் பின்னர் 1995 இல் இரத்தின புரி மறை மாவட்ட ஆயராகவும் 1995 முதல் 2001 வரை இரத்தினபுரி ஆயராகவும் பணிபுரிந்தீர்கள்.

அதன் பின்னர் 2001 ஒக்ரோபர் முதலாம் திகதி உரோமை மறைபரப்பு பேராயத்தின் துணைச் செயலராகவும் நியமனம் பெற்றிருந்தீர்கள். வத்திக்கானில் உள்ள உலகக் கத்தோலிக்கத் திருத்தந்தையின் இந்தோனேசிய மற்றும் கிழக்குத் திமோர் நாடுகளுக்கான தூதுவராக 2004 ஏப்ரல் முதல் 2005 டிசெம்பர் வரை கடமையாற்றியிருந்த போதுதான் தாங்கள் பேராயராகவும் தரமுயர்த்தப்பட்டீர்கள் என்பது உலகம் அறிந்த உண்மை.

இந்தப் பின்புலத்திலேதான் 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ற் தங்களை கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் பேராயராக நியமனம் செய்தார். அதே ஆண்டு ஜூன் 29 ஆம் திகதி புனித பேதுரு பெருங்கோவிலில் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்றின்கரங்களினால் பேராயருக்குரிய சிறப்புச் சின்னமாகிய 'கம்பளித் தோள்பட்டை' ((Pallium) தங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

பின்னர் கொழும்பு உயர் மறைமாவட்டப் பொறுப்பை அதே ஆண்டு ஓகஸ்ட் ஒன்பதாம் திகதி ஏற்றீர்கள். உங்கள் சேவை மற்றும் இனமத பேதமற்ற 'மனிதகுலம்' என்ற பொது மனப்பாங்கு ஆகியவற்றைக் கணிப்பீடு செய்தே 2010 ஆண்டு ஏப்ரல் மாதம் தங்களுக்குக் 'கர்தினால்' என்ற சர்வதேச தரம் வாய்ந்த அந்தஸ்துக் கிடைத்தது. அதாவது எதிர்காலத்தில் திருத்தந்தையாவதற்குரிய அங்கீகாரம் என்றால் அது மிகப் பொருத்தம்.

உலகில் வாழும் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் திருத்தந்தை வத்திக்கானில் இருக்கிறார். வத்திக்கான் என்பது இத்தாலி நாட்டின் ஒரு நகரமாக இருந்தாலும் வத்திக்கான் திருத்தந்தையின் இறை அரசாட்சியின் கீழ் தனித்தே இயங்குகின்றது.

ஆகவே இனமத பேதங்களைக் கடந்து உலக மக்கள் நலனுக்காக மாத்திரம் குறிப்பாக புவிசார் அரசியல், புவிசார் பொருளாதார நிலைமைகளைக் கற்றுணர்ந்து அவதானித்து உலக வல்லரசுகளின் தவறுகளைச் சமநிலையில் சுட்டிக்காட்டிச் சீர்திருத்தக்கூடிய உயர்தரமிக்க 'திருத்தந்தை' ஆவதற்குரிய அங்கீகாரத்துக்கான 'கர்தினால் என்ற அந்தஸ்தில் தாங்கள் இருப்பது இலங்கைத்தீவு மக்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

ஆயராக இருந்து கர்தினால் வரையும் தாங்கள் தரமுயர்ந்தமைக்கு வத்திகானில் உள்ள திருதந்தையின் அவதானிப்புத் தான் காரணம் என்பதைத் தாங்கள் அறியாதவருமல்லர். தரமுயர்வதற்கு உள்ளூர் அரசியல்வாதிகளின் அல்லது வேறு உயர்நிலையில் உள்ளவர்களின் செல்வாக்குகள் அவசியமற்றவை.

ஆகவே நன்னடத்தைகள் ,கல்வித் தகுதிகள் கணிக்கப்பட்டுத் தங்களுக்கு வழங்கப்பட்ட உயர்தரப் பதவிகளை வைத்துக் கொண்டு திருத்தந்தையின் உண்மைப் பிரதிநிதியாகச் செயற்பட்டிருக்கலாமே?

தனிப்பட்ட குடும்ப அரசியல், உள்ளூர்க் கட்சி அரசியல் செயற்பாடுகளுக்கு அப்பால் உலக மக்களின் அரசியல் பொருளாதார மற்றும் வாழ்வியல் உரிமைகளை உறுதிப்படுத்தும் பணிகளிலேயே திருத்தந்தையும் அவருக்கு அடுத்த நிலையில் இருக்கும் கர்தினால்களும் ஈடுபட்டு வருகின்றனர். ஆகவே திருத்தந்தையின் கர்தினால்களில் ஒருவராக இருந்து கொண்டு ஏன் இலங்கைத்தீவு மக்கள் என்று பொது நோக்கோடு சிந்திக்காமல் 'சிங்கள மக்கள்' 'சிங்கள பௌத்தர்கள்' மற்றும் ராஜபக்ச குடும்ப அரசியல் என்ற கண்ணோட்டத்தில் தங்கள் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளீர்கள்?

தாங்கள் ஆயராகப் பதவியேற்ற 1991 ஆம் ஆண்டுதான் ஈழப் போர் இரண்டாம் கட்ட நிலையில் உக்கிரமடைந்தது. அப்போதுயாழ். ஆயராக இருந்த மறைந்ததியோகுப்பிள்ளை இலங்கைத்தீவு மக்கள் என்ற உணர்வுடனும் வடக்கு-கிழக்கு ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை, ஈழத்தமிழ் மரபு பண்பாடு என்பதிலும் உறுதியாக இருந்தார்.

> **நீதிமான் என்ற தகுதியைப் பாவம் செய்தவனுக்கு வழங்குகின்ற கிருபையின் கருவியாக இருப்பது விசுவாசம். ஆகவே குற்றவாளிகளுக்கு விசுவாசம் யாரை நோக்கி வரும்? எப்படி மன்னிப்பு வழங்க முடியும்? போர்க்காலக் குற்றங்கள், ஊழல்மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகங்கள் என்று ஒரு நீண்ட பட்டியல் உண்டு அல்லவா?**

அப்போது கொழும்பு உயர்மறை மாவட்ட பேராயராக இருந்த மாக்கஸ் பெர்னாண்டோ ஈழத்தமிழர்கள் சார்ந்து எந்த ஒரு கருத்தையும் வெளியிடவில்லை. மாறாக இலங்கை 'ஒற்றையாட்சி அரசு' என்ற கட்டமைப்பைப் பாதுகாக்கும் பேராயராகவே அவரும் செயற்பட்டிருந்தார். இத்தனைக்கும் அவர் சிலாபத்தைச் சேர்ந்த ஒரு தூயதமிழர்.

மாக்கஸ் பெர்னாண்டோ 'இலங்கைத்தேசியம்' என்ற வரையறைக்குள் செயற்பட்ட காரணத்தினால் கத்தோலிக்கச் சமயப் பணிகள் பற்றிய விவகாரங்களில்கூட ஆயர் தியோகுப்பிள்ளை கொழும்பு உயர் மறை மாவட்டத் திட்டங்களுக்கு கட்டுப்படாமல் வடக்கு - கிழக்கு ஆயர்கள் என்ற சிந்தனையை வரையறுத்துச் செயற்பட வேண்டிய சூழல் உருவாகியிருந்தது. 1992 இல் மன்னார் மறை மாவட்டத்துக்கு ஆயராகத் தெரிவு செய்யப்பட்ட இராயப்பு ஜோசப், ஆயர் தியோகுப்பிள்ளை செய்த பணியின் தொடர்ச்சியை மேலும் தீவிரப்படுத்தியிருந்தார். ஆனால் இனவாதமற்ற மற்றும் ஒட்டுமொத்த இலங்கைத்தீவு என்ற உயர் நிலையிலும் ஈழத் தமிழர்களின் தனித்துவமான அரசியல் விடுதலையைச் சாத்தியப்படுத்தும் வியூகங்களோடும் அவர் செயற்பட்டிருந்தார் என்பது தங்களுக்குத் தெரியாததல்ல.

2009 இறுதி யுத்தத்தில் சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் கொல்லப்பட்டதுடன் சுமார் ஒரு இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருப்பதாக ஆயர் இராயப்பு ஜோசப் ஜெனிவாவில் கூறியிருந்தார்.

எண்பது வருட அரசியல் விடுதலைப் போராட்டத்தில் அரசியல் நீதி கிடைக்கவில்லை என்றும் ஆயர் விரிவாகக் கூறியிருந்தார். ஆனால் தாங்கள் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்தும், சிங்களத் தலைவர்கள் 2009 க்குப் பின்னர் கடந்த பதினான்கு ஆண்டுகளாக நிரந்தர அரசியல் தீர்வை முன்வைக்கவில்லை என்பது பற்றியும் இதுவரை எதுவுமே பேசவில்லையே.

இந்நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக 'சனல் 4' தொலைக்காட்சி வெளியிட்ட ஆவணத்தை அடுத்து சர்வதேச விசாரணையைக் கோரியுள்ளீர்கள். ஆனால், 2009 போர்க்குற்றம் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஆயர் இராயப்பு ஜோசப் கோரியபோது ஏன் மௌனமாக இருந்தீர்கள்?

ஜெனிவாவில் சர்வதேச விசாரணை அவசியம் என்று அழுத்தம் கொடுக்கப்பட்டபோதும் ஏன் வாய்திறக்கவில்லை?

வடக்கு - கிழக்கில் வாழும் கத்தோலிக்கராகிய தமிழர்களின் சமயப் பணிகளில் கூட ஒழுங்கான முறையில் தாங்கள் கவனம் செலுத்தி வருகிறீர்களா என்பது கேள்வியே.

முப்பது வருடகாலப் போரில் இலங்கை இராணுவத்தால் குறைந்தது ஒன்பது அருட் தந்தையர்கள் கொல்லப்பட்டுள்ளனர். பலர் கைதாகி விசாரிக்கப்பட்டனர். 1982 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரால் அருட்தந்தை. சிங்கராயர் கைது செய்யப்பட்டதில் இருந்து தமிழ்க் கத்தோலிக்க தேவாலயங்கள் பல அழிவுகளை எதிர்நோக்கி வருகின்றன. இது பற்றித் தாங்கள் இலங்கை அரசாங்கத்திடம் ஒரு தடவையேனும் பகிரங்கமாக நீதி கேட்டதாகத் தெரியவில்லை.


இந்தப் பின்புலத்தில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சூத்திரதாரிகள் மனம் திருந்திக் குற்றத்தை ஏற்றுக்கொண்டால் மன்னிப்பு வழங்கப்படும் என்று எந்த அடிப்படையில் ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிட்டீர்கள்?

மனந்திரும்புதலாகிய செயலின் மூலமாக ஒருவர் பாவமன்னிப்பைப் பெற முடியும் என்று அர்த்தமல்ல.

இதனை விளக்கும் வாசகங்கள் பைபிளில் உண்டு. (கொரிந்தியர் பத்தாம் பதினோரம் அதிகாரங்கள்) இது பற்றி எந்த வாக்குவாதத்துக்கும்

04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ‘சனல் 4’: திறந்திருக்கும் வாய்ப்புக்கள்

○ நிலாந்தன்

சனல்-4’ வெளியிட்ட வீடியோவை முதலில் அதிகமாக பரவலாக்கியதும் பரப்பியதும் சாணக்கியனுக்கு ஆதரவான சமூக வலைத்தளக் கணக்குகள் தான். அந்த ஆவணப் படத்தில் பிள்ளையானுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் இருப்பதனால், சாணக்கியனுக்கு ஆதரவான தரப்புகள் அதை வேகமாகவும் அதிகரித்த அளவிலும் பரப்பினார்கள். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சாணக்கியன் போன்ற தரப்புகளிடம் பலமான சமூக வலைத்தள பிரசாரக் கட்டமைப்புகள் உண்டு. சாணக்கியனுக்கு ஆதரவான சமூக வலைதளக் கட்டமைப்புக்கூடாகத் தான் பிள்ளையானுக்கு எதிரான ஆசாத் மௌலானாவின் சாட்சியம் பரவலாகப் பகிரப்பட்டு வருகின்றது.

அந்த வீடியோவானது,ரணிலைப் பலப்படுத்தும் மேற்கத்தைய நிகழ்ச்சி நிரலின் பிரதிபலிப்பு எனலாம். அதேசமயம் அதில் தமிழ் மக்களுக்குச் சாதகமான அம்சங்கள் உண்டு. இலங்கை அரசுக் கட்டமைப்பின் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கும் குற்றச்சாட்டுகள் அந்த வீடியோவில் உண்டு. தமிழ்மக்கள் ஏன் பரிகார நீதியைக் கேட்கின்றார்கள் என்பதற்குத் தேவையான தர்க்கபூர்வமான சான்றுகளை அந்த வீடியோ வெளிப்படுத்துகின்றது. அந்த வீடியோவில் கூறப்படும் தகவல்கள் உண்மையா இல்லையா என்பதனை விசாரிப்பதற்கு அனைத்துலக விசாரணை வேண்டும் என்று பேராயர் மல்கம் ரஞ்சித் கேட்கிறார். முஸ்லிம்கள் ஏற்கனவே கேட்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேட்கிறார். குண்டுவெடிப்பின்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரி கேட்கிறார். முன்னாள் படைத்தளபதியும் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சரத் பொன்சேகாவும் கேட்கிறார்.

அப்படி ஒரு விசாரணை நடக்கலாம், நடக்காமல் விடலாம். ஆனால் பொறுப்புமிக்க பதவிகளில் இருந்தவர்களும் இருப்பவர்களும் அவ்வாறு கேட்பது என்பது இலங்கைத்தீவின் அரசுக் கட்டமைப்பின் பொறுப்புக்கூறும் தன்மையைக் கேள்விக்குட்படுத்துகின்றது. அது தமிழ்மக்களுக்குச் சாதகமானது. தமிழ்மக்கள் வேறு காரணங்களுக்காக அதாவது இனப்படுகொலைக்கு எதிரான நீதியை நிலைநாட்ட அனைத்துலக விசாரணை வேண்டும் என்று கேட்கிறார்கள். பேராயர் மல்கம் ரஞ்சித் அப்படிக் கேட்கமாட்டார். ஆனாலும் தமிழ் மக்கள் ஏன் உள்நாட்டு விசாரணையை நம்பவில்லை என்ற கேள்விக்கான விடை பேராயரின் கோரிக்கைக்குள் பொதிந்து கிடக்கின்றது. எனவே ‘சனல் -4’ வெளியிட்ட வீடியோவானது இலங்கையில் மேற்கு நாடுகளின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கிலானது என்பது அதன் ஒரு பரிமாணம். இன்னொரு பரிமாணம் அது தமிழ்மக்களின் நீதிக்கான போராட்டத்துக்குப் பலம் சேர்க்கின்றது என்பது.

எனது கடந்த வாரக் கட்டுரையில் கூறப்பட்டதுபோல, சனல் 4 வீடியோ மட்டுமல்ல, இந்தப் பூமியிலே இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக அல்லது இலங்கைத்தீவின் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்புக்கு எதிராக வெவ்வேறு நாடுகள், அனைத்துலக நிறுவனங்கள் முன்னெடுக்கும் வெவ்வேறு வகைப்பட்ட நடவடிக்கைகள் அனைத்துமே ஏதோ ஒருவிதத்தில் ஈழத்தமிழர்கள் கெட்டித்தனமாகக் கையாள வேண்டிய வாய்ப்புகள்தான். அவ்வாறான வாய்ப்புகளை வழங்கும் மேற்கத்தைய மற்றும் பிராந்திய அளவிலான நகர்வுகளைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

முதலாவதாக, அமெரிக்காக் கண்டத்தில் அங்குள்ள இரண்டு பெரிய நாடுகளாகிய அமெரிக்காவும் கனடாவும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகவும் அதன் படைப்பிரதானிகள் சிலருக்கு எதிராகவும் நிர்ணயகரமான நகர்வுகளை முன்னெடுத்திருக்கின்றன. இலங்கைத் தீவின் இப்போதுள்ள படைத்தளபதியை அமெரிக்கா நாட்டுக்குள் வருவதற்கு தடை விதித்திருக்கிறது. அதுபோலவே முன்னாள் கடற்படைத் தளபதி ஒருவருக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவை தவிர கடந்த மார்ச் மாதம் அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தின்படி போர்க்குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் நோக்கத்தோடு வழக்குத் தொடுக்க முடியும். அவ்வாறு மூத்த ராஜபக்சக்கள் இருவருக்கும் எதிராக அமெரிக்காவில் வழக்குத் தொடுக்கத் தேவையான வாய்ப்புகளை அந்தச் சட்டம் அதிகப்படுத்தியிருக்கிறது. இது முதலாவது.

இரண்டாவதாக, கனடாவில் இனப்படுகொலை தொடர்பில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. தவிர, மூத்த ராஜபக்சக்கள் இருவருக்கும் எதிராக இந்த ஆண்டு மார்ச் மாதம் கனடா தடைகளை விதித்திருக்கின்றது. அதன்படி அவர்கள் அந்த நாட்டில் தமது பினாமிகள் ஊடாகக்கூட முதலீடுகளைச் செய்ய முடியாது.

கனடாவின் மேற்கண்ட நடவடிக்கைகள் அங்குள்ள பலமான தமிழ்ப் புலம்பெயர் சமூகத்தின் வாக்குகளைக் கவரும் நோக்கிலானவை என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. ஆனால் அவை அவற்றின் விளைவுகளைக் கருதிக்கூறின் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்துக்குப் பலம் சேர்ப்பவை.

மூன்றாவது நகர்வு, ஐ.நா.வின் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஓர் அலுவலகம். இது கடந்த ஆண்டு ஐ.நா.வில் நிறைவேற்றப்பட்ட 6\1 தீர்மானத்தின் பிரகாரம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குள் இயங்கி வருகிறது. அங்கே சேகரிக்கப்படும் தகவல்கள் என்றைக்கோ ஒருநாள் இலங்கைக்கு எதிராகக் கையாளப்படத் தக்கவை. அண்மையில் தொடங்கிய ஐ.நா. கூட்டத் தொடரில் மனித உரிமைகள் உதவி ஆணையாளர் அந்த அலுவலகத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். அடையாளம் காணப்பட்ட பத்து நபர்களைப் பற்றிய விபரங்களை உறுப்பு நாடுகள் கேட்பதாகவும் குறிப்பிடுகிறார். ஏற்கனவே அமெரிக்காவும் கனடாவும் குறிப்பிட்ட சில படை அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கும் ஒரு பின்னணியில், மேலும் பத்துப் பேர் பற்றி பிரஸ்தாபிக்கப்படுகிறது.

அந்த அலுவலகத்தால் சேகரிக்கப்படும் தகவல்களில் தமிழ்த் தரப்பின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தரவுகளும் இருக்கலாம்.. ஏனெனில் ஐ.நா. அதைத் தமிழ் நோக்கு நிலையில் இருந்து தொகுக்கவில்லை. சீன விரிவாக்கத்தின் கருவிகளாகக் காணப்படும் ராஜபக்ச சகோதரர்களை எப்பொழுதும் சுற்றிவளைத்து வைத்திருக்கும் ராஜதந்திர உள்நோக்கங்கள் ஐ.நா. தீர்மானங்களில் உண்டு. ஆனாலும் தமிழ் நோக்கு நிலையில் இருந்து இலங்கைத்தீவின் அரச கட்டமைப்பும் அரசியல் பாரம்பரியமும் பொறுப்புக்கூறலுக்கு உகந்தவை அல்ல என்பதனை நிரூபிப்பதற்கு அவை உதவும்.

நான்காவது நகர்வு, இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அண்மையில் ராமேஸ்வரத்தில் வைத்துக் கூறிய கருத்துகள். இலங்கைத்தீவில் இடம்பெற்றது பெரிய மனிதப் படுகொலை அல்லது இனப்படுகொலை என்ற பொருள்பட அவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார். தனது ருவிற்றர் பக்கத்தில் இனப்படுகொலை என்று தமிழில் எழுதியிருந்தார். தமிழகத்தில் உள்ள திராவிடக் கட்சிகளின் வாக்கு வங்கிக்குள் இருந்து ஈழ ஆதரவாளர்களைப் பிரித்து எடுப்பதற்கான ஓர் உத்தியாகத்தான் அமித்ஷா அப்படிச் சொன்னார் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அவர் ஓர் உள்துறை அமைச்சர். அவர் அவ்வாறு கூறியிருப்பதை ஈழத்தமிழர்கள் பொருத்தமான விதங்களில் கையாளலாம். ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கு முன் 1983 இல் அப்பொழுது இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி இந்திய நாடாளுமன்றத்தில் வைத்து “இலங்கையில் நடப்பது இனப்படுகொலையேயன்றி வேறு எதுவுமில்லை”என்று கூறினார். அடுத்த ஆண்டு அப்பொழுது உள்துறை அமைச்சராக இருந்த சவான் இலங்கைத்தீவில் தமிழர்களுக்கு எதிராக நடப்பவற்றில் “இனப்படுகொலையின் கூறுகள் உண்டு” என்று கூறினார். இப்பொழுது அமித்ஷா கூறியிருக்கிறார்.

அமித்ஷா கூறியிருப்பது பெருமளவுக்கு உள்நாட்டுத் தேர்தல் தேவைகளுக்கானதாக இருக்கலாம். ஆனால் அதை ஈழத்தமிழ் நோக்கு நிலையில் இருந்து வெற்றிகரமாகக் கையாளவேண்டும். அதற்குரிய உபாயங்களை ஈழத்தமிழர்கள் வகுத்துக்கொள்ளவேண்டும். இப்பொழுது தொகுத்துப் பார்க்கலாம். கனடாவோ அமெரிக்காவோ அல்லது இந்திய உள்துறை அமைச்சரோ அல்லது ஐ.நா.வோ அல்லது ஏனைய உலகப் பொதுநிறுவனங்களோ ‘சனல்- 4’ தொலைக்காட்சியோ தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் இருந்து முடிவுகளை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது அப்பாவித்தனமானது அம்புலிமாமாக் கதை போன்றது. அரசியல் என்பது நலன்சார் உறவுகளின் இடையூடாட்டம் தான். அங்கே அற நெறி, நீதி நியாயம் போன்றவை இரண்டாம்பட்சம்.

உலக நாடுகளும் உலகப் பொது நிறுவனங்களும் உலகளாவிய ஊடக நிறுவனங்களும் தங்கள் தங்கள் நலன்சார் நோக்கு நிலைகளில் இருந்துதான் முடிவுகளை எடுக்கும். தமது அரசியல், பொருளாதார, இராணுவ இலக்குகளை முன்வைத்தே எந்தவோர் அரசும் வெளிவிவகார முடிவுகளை எடுக்கும்.


ஆனால் இலங்கை சம்பந்தப்பட்ட அவர்களுடைய நகர்வுகள் ஈழத்தமிழர்கள் தமக்குச் சாதகமாகக் கையாளத்தக்கவைகளாக இருக்குமானால்,. அவற்றைப் பொருத்தமான விதத்தில் பொருத்தமான வேளைகளில், வெற்றிகரமாகக் கையாண்டு நீதிக்கான தமது போராட்டத்துக்கு எப்படி அணி சேர்க்கலாம் என்று ஈழத்தமிழர்கள் சிந்திக்கவேண்டும்.

கடந்த மே 18ஆம் திகதியன்று கனேடியப் பிரதமர் தன்னுடைய உத்தியோகபூர்வ ருவிற்றர் தளத்தில் இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்குச் சாதகமான கருத்துகளைத் தெரிவித்திருந்தார். எத்தனை லட்சம் தமிழ்மக்கள் திரும்பத்திரும்ப ரீருவீற் பண்ணினார்கள்? என்று ஓர் அரசியற் செயற்பாட்டாளர் கேட்டார். அங்கே தான் தெரிகிறது தமிழ் மக்களின் இலத்திரனியல் வலையமைப்புகளின் பலவீனம். கனேடியப் பிரதமரின் கருத்துக்கு இலங்கை உத்தியோகபூர்வமாக எதிர்ப்புத் தெரிவித்திருந்தது. அதாவது அதை இலங்கை அரசுக் கட்டமைப்பு எதிர்க்கின்றது. அப்படியென்றால் அதைத் தமிழ் மக்கள் எப்படிக் கையாண்டிருக்கவேண்டும்? கனேடியப் பிரதமரின் உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்துக்குச் சென்று அவர் அங்கே பதிவிட்டிருப்பதை திரும்பத் திரும்ப லட்சக்கணத்தில் கோடிக்கணக்கில் திரும்பத் திரும்ப ரீருவீற் பண்ணியிருக்க வேண்டும். அது அவருக்கு உற்சாகமூட்டும். தமிழ்மக்கள் கனடாவோடு தமது சகோதரத்துவத்தை, வாஞ்சையைத் தெரிவிப்பதற்கு அது ஓர் அருமையான சந்தர்ப்பமாக இருந்தது.

அப்படிதான் அமித்ஷா தனது ருவிற்றர் பக்கத்தில் தமிழில் இனப்படுகொலை என்று பிரசுரித்திருந்ததை தமிழர்கள் கோடிக்கணக்கில் ரீருவீற் பண்ணியிருந்திருக்க வேண்டும். ஆனால் எத்தனை தமிழ்க்கட்சிகள் அல்லது தமிழ் அமைப்புகள் அல்லது செயற்பாட்டாளர்கள் அதை அவ்வாறு கையாண்டன?

அதுதான் பிரச்சினையே. மேற்சொன்ன வெளியுறவு வாய்ப்புக்களை வெற்றிகரமாகக் கையாளத் தேவையான ஒன்றிணைந்த கட்டமைப்புகள் தமிழ் மக்களிடம் இல்லை. கட்சிகளை அல்லது அரசியல்வாதிகளின் தனிப்பட்ட வாக்கு வங்கிகளைக் கட்டியெழுப்பும் நோக்கத்தோடு இலத்திரனியல் கடடமைப்புகள் உண்டு. ஆனால் தேசத்தைக் கட்டியெழுப்பும் கட்டமைப்புகள் குறைவு. அவ்வாறான ஒன்றிணைந்த கட்டமைப்புகள் இல்லாத ஒரு வெற்றிடத்தில், ஈழத்தமிழர்கள் வெறுவாய் சப்பிக்கொண்டு, வீர வசனம் பேசிக்கொண்டு வெளியாருக்காகக் காத்திருக்கிறார்கள் ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்காவுக்கு,
அய்யாவும் அம்மாவும்
கஷ்ரப்பட்டுப் பணம் அனுப்பிக்
கொண்டிருந்தனர்.
மீண்டும் சிக்கலான சந்தோஷம்.
அண்ணைக்கும் கம்பஸ் கிடைத்து
விட்டது.செலவு இரட்டிப்பானது.
அய்யா தோட்டத்தில் கடுமையாக
வேலை செய்யத்
தொடங்கினார்.

# அய்யா கடை

சஞ்சீவி சிறுகதை

கோகுலராகவன்

அய்யாவுக்கு நாலு பரப்புத் தோட்டக்காணி வேம்பிராய்ச் சந்திக்கு கிட்டவாக இருந்தது. அங்கே தான் அய்யா நெடுகத் தோட்டம் செய்து கொண்டிருந்தார்.நாங்கள் படித்துக் கொண்டிருந்தோம். அக்கா ஏ.எல். இ[illegible]ாம் தரம். அண்ணா ஏ.எல். முதல்தரம். சி[illegible]கா ஓ.எல் . நான் ஐந்தாம் வகுப்பு. எங்களுக்குத் தோட்டத்துக்குப் போக நேரம் கிடைக்காது. பள்ளிக்கூடத்தால் வந்ததும் ரியூசனுக்கோ,பெடியளுடன் சேர்ந்து படிக்கவோ போய்விடுவோம்.

அய்யா தனியாகவே கஷ்ரப்பட்டு தோட்டம் செய்து கொண்ருந்தார். மாரி முடிய தையில் தான் தோட்டம். மட்டுவில் கிட்ட என்றபடியால் வெள்ளைக்கத்தரி நல்லாய்க் காய்க்கும்.

ஆனால் சாவகச்சேரிச் சந்தையில் விலை சூடாகவோ சில வேளைகளில் மலிவாகவோ போய் கொண்டிருக்கும். மலிவான காலங்களில் அய்யா பாடு மிகவும் சிரமமாக இருக்கும். கொடிகாமம் சந்தைக்கு சைக்கிளில் கத்தரிக்காய் மூடையைக் கட்டிக் கொண்டு விடிய வெள்ளெனப் போவார். அங்கேயும் மலிவாக இருக்கும். பாவம், அய்யா! கள்ளுக் குடிக்கவே காசு இல்லாமல் சிரமப்படுவார்.இதனால் அய்யா அடிக்கடி ஒரு யோசனை சொல்வார்.

"சாவகச்சேரிச் சந்தைக்குள்ள ஒரு பலசரக்குக்கடை திறக்கப் போறன்"

அய்யாவிடம் ரீயூசன் காசு இல்லாமல் பல வேளைகளில் நான் பத்துப்பதினைந்து நாள்கள் ரீயூசனுக்குப் போகாமல் நின்று விடுவது ஞபாகம். பிறகு அய்யா காசு தரத்தான் போவேன்.

"எதுக்கும் ஒரு கடை போட்டால் தான் பெடியனைப் படிப்பிக்கலாம்"

அய்யாவின் குரலில் தெரிவது உறுதியா? அல்லது தளர்வா? என்று எனக்குப் புரிகிற வயதில்லை.

அன்றிரவு அய்யா கள்ளுக்குப் போய்விட்டார். அம்மாவுடன் சாப்பிட்டுக் கொண்டு இருந்தேன். சாவகச்சேரியில் நிறையக் கடைகளின் பெயர்ப் பலகைகளை வாசித்திருக்கின்றேன்.சிவம் ஸ்ரோர்ஸ், அம்பிகை களஞ்சியம், விக்கினேஸ்வரர் ஸ்ரோர்ஸ்,மாதுரி ஸ்ரோர்ஸ். இப்பிடிப்பல கடைக்காரர், தங்கள் பிள்ளைகளின் பெயரையும் அல்லது தெய்வ நாமங்களையும் சில வேளை பெண்சாதிமாரின் பெயரையும் கடைக்கு வைப்பார்கள். இவற்றை நான் தலைமயிர் வெட்டச் சாவகச்சேரிக்குப் போகும் போது எழுத்துக் கூட்டி வாசித்திருக்கிறேன். 'அய்யா கடை திறந்தால் என்ன பெயர் வைப்பார்?' என்று சாப்பாட்டையும் மறந்து யோசித்தேன்.

"என்னடா முழுசுறாய்? சாப்பிடு"

"ஒண்டுமில்லை"

"காசு கீசு வேணுமே"?

"இல்லை"

"அப்ப என்ன"

"அய்யா கடை திறந்தால் கடைக்கு என்ன பெயர் வைப்பார்?"

"அவற்றை ஆத்தையின்ர பேரை வைப்பார். பொத்திக் கொண்டு சாப்பிடு. கொய்யாவும் ஒரு கடையும்!"

அம்மா ஆத்தையெண்டு சொன்னது ஆரையெண்டால் அய்யாவின் தாயைத்தான். எனது அப்பம்மாவை . எனக்கு ஆளைத் தெரியாது. நான் பிறக்க முன் இறந்து போய் விட்டார். அப்பம்மாவுக்கும் அம்மாவுக்கும் கொஞ்சமும் சரிப்பட்டு வராது . ஒரேபிள்ளை என்று அப்பம்மா, அய்யாவுக்குப் செல்லம் கொடுத்து வளர்த்ததால்தான் அய்யாவுக்கு பொறுப்புக் காணாமல் போய் விட்டதாக அம்மாவின் நினைப்பு.

அந்த வருடம் அக்காவுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படிக்க இடம் கிடைத்து விட்டது. அக்காவின் நடையில் மாற்றம் தெரிந்தது. தலையைப் பல தடவை வாரிக் கொண்டாள். எங்களுக்கு உள்ளூர்ப் பவுடர். அவர்களுக்கு கொழும்புப் பவுடர். அக்காவுக்கு உயரமான செருப்பு வாங்கவும், கவுண்கள், சாறிகள் வாங்கவும்,கொப்பிகள்,புத்தகங்கள் வாங்கவும் நிறையக் காசு தேவைப்பட்டது. அம்மாவுக்கு ஒரு பக்கம் சந்தோஷம்,மறுபக்கம் பணக்கஷ்டம் .

"நாலு வருசம் படிக்க வேணுமாம்" அய்யாவுக்கு என்ன செய்வதெண்டு தெரியாமல் இருந்திருக்கும். கள்ளால் வந்தவர் தலைவாசல் வாங்கில் படுத்துக்கொண்டு சொன்னார்.

"எனக்குத் தெரியும் அவளுக்கு வாசிற்றி கிடைக்குமெண்டு"

கள்ளுப்புளித்திருக்க வேண்டும். காறித்துப்பினார்.

"அவள் கெட்டிக்காரி"

"புளுகினது காணும். பொடிக்கு உடுப்புகள் வாங்க வேணும்" என்று அம்மா நிலைமையச் சொன்னாள்.

"ஓமோம் வாசிற்றி எல்லே. நல்லதாய் நாலு சாறி வாங்க வேணும் "

"பின்னை.......உங்கினை அங்கினை போறமாதிரியே போறது? பைல் ஒண்டும் வாங்க வேணுமாம்"



அய்யா சாப்பிடாமலே நித்திரை ஆகிவிட்டார். அடுத்த நாள் அய்யா அக்காவைக் கூப்பிட்டு இரண்டாயிரம் ரூபா காசு கொடுத்தார். "உனக்குத் தேவையானதை வாங்கு பிள்ளை" அய்யாவுக்கு எங்கால காசு?; ஒரு சுருட்டு வாங்கவே அம்மாவிடம் ஒரு ரூபாவுக்கு அடிபடுவார்.

அய்யா சாப்பிடாமலே நித்திரை ஆகிவிட்டார். அடுத்த நாள் அய்யா அக்காவைக் கூப்பிட்டு இரண்டாயிரம் ரூபா காசு கொடுத்தார்.

"உனக்குத் தேவையானதை வாங்கு பிள்ளை"

'அய்யாவுக்கு எங்கால காசு?; ஒரு சுருட்டு வாங்கவே அம்மாவிடம் ஒரு ரூபாவுக்கு அடிபடுவார். எங்களுக்குத் தெரியாமல் கடை போட்டு விட்டாரா? ஏது இவ்வளவு காசு ? கடை போட்டால் மத்தியானம் அய்யாவுக்கு நான் சாப்பாடு கொண்டு போய்க் கொடுக்கலாம். அப்ப அய்யா சாப்பிடும் போது தம்பி,ஒரு யானைச் சோடா எடுத்துக் குடி!" எண்டு சொல்லக்கூடும்.

யானைச்சோடாவில் நெக்ரோ என்றால் எனக்குத் தனி விருப்பம். உதடு,நாக்கு எல்லாம் சிவந்து, வாசமடிக்கும் அய்யாவுக்குத் தெரியாமல் சக்கரைக் கட்டியை எடுத்துத் தின்னலாம். போட்ட சேர்ட்டையே திரும்பவும் சோலையம்மன் கோவில் பொங்கலுக்குப் போடாமல் அய்யாவிடம் கேட்டு,றஞ்சனாஸில் புதுச் சேர்ட் வாங்கிப் போடலாம்.

பிறகொருநாள் அம்மாவுடன் சாவகச்சேரிச் சந்தைக்குத் தலைமயிர் வெட்டப் போயிருந்தேன். அம்மா ஒரு சுளகு வாங்கத் திரிந்தார். நான் ஒவ்வொரு கடையின் பெயரையும் வேகமாக வாசிக்கத் தொடங்கினேன். "முத்து ஸ்ரோர்ஸ் எங்காவது இருக்கா?(முத்துக்குமரன் எனது பெயர்)

"மலர் ஸ்ரோர்ஸ் எங்காவது இருக்கா?" (தவமலர் அம்மாவின் பெயர்) "கிருஸ்ணா ஸ்ரோஸ் எங்காவது இருக்கா?" (அய்யா கிருஷ்ணனின் பக்தர்)

கிருஸ்ணா ஸ்ரோர்ஸ் என்று ஒரு கடை தெரிந்தது. இது தான் ! இது தான் அய்யாவின் கடை !

அம்மா சுளகுக்காரியுடன் 2 ரூபாவுக்கு அடிபட,ஓடிப் போய் கடையை எட்டிப் பார்த்தேன். அந்தக் கடையின் பட்டடையில் ஒரு கறுவல் மொட்டையன் தான் இருந்தான்.

யாரையோ உரத்துத் திட்டிக்கொண்டு இருந்தான், என்னையில்லை.நான் சலித்தபடி திரும்பி அம்மாவிடம் வந்தேன்.

அக்காவுக்கு,அய்யாவும் அம்மாவும் கஷ்ரப்பட்டுப் பணம் அனுப்பிக் கொண்டிருந்தனர்.

மீண்டும் சிக்கலான சந்தோஷம். அண்ணைக்கும் கம்பஸ் கிடைத்து விட்டது.செலவு இரட்டிப்பானது. அய்யா தோட்டத்தில் கடுமையாக வேலை செய்யத் தொடங்கினார்.

கள்ளுக் குடிப்பதை நிறுத்திவிட்டார். கத்தரி இரண்டாயிரத்துக்கும் மேல் வைத்திருந்தார். தோட்டத்தால திரும்ப ஏழு,எட்டு மணியாகி விடும். குளித்து,சாப்பிடும் போது சொல்லுவார்."கடை ஒண்டு திறக்கத்தான் வேணுமப்பா" அம்மா குனிந்தபடி அய்யாவுக்கு கத்தரிக்காய் கறியைப் போட்டுக் கொண்டிருந்தார்.

"சுப்பமாக்கற்றில் சிவராசாவின் கடையை வாடகைக்குக் கேட்டான். ஓமெண்டு சொன்னவன்."

"முதல் வேணுமே?" இது அம்மா.

"அடைவு வைப்பமே?"

அம்மா எதுவும் பேசவில்லை. அம்மாவிடம் ஆறு பவுண் தாலிக்கொடி மட்டும் தான் நகையாக இருந்தது. அய்யா சுருட்டுப் பற்றியபடி உறங்கிவிட்டார்.

இப்ப நான் ஒன்பதாம் வகுப்பு. ஒரு புத்தகப்பை வாங்கினால் நல்லது. கடைக்கார மணியத்தின் மகன் கொழும்பு "பாக்" எல்லாம் கொண்டு வாறான். அய்யா கடை போட்டால் நல்லாச் செலவளிக்கலாம். இந்தாள் சும்மா சொல்லுது. போடாது.

நான் எழும்ப முன். அய்யா எழும்பித் தோட்டத்துக்குப் போய்விட்டார். வாங்கிலில் அவரைக் காணவில்லை.

பெரியக்கா கம்பஸ் முடித்து நாவலப்பிட்டியில் ரீச்சராக வேலையாகிய மூட்டம், சின்னக்காவும் "கம்பஸ்" போனாள்,

சின்னக்காவின் செலவுக்கு பெரியக்கா பணம் அனுப்புவாள். நான் கம்பஸில் படிக்கப் போன போது, அண்ணை பூவரசங்குளத்தில் தமிழ் வாத்தியாராகப் படிப்பிக்கப் போனான். எனக்குச் செலவுக்கு அவன் பணம் அனுப்பிக் கொண்டிருந்தான்.

அடுத்த வருடம் அக்காவுக்கு கல்யாணம் நடந்தது. அது 1982 அல்லது 1983 ஆக இருக்க வேண்டும். அய்யா,50,000 ரூபா சீதனமும்,நகைகளும்,கொடுத்தார். வீட்டுக்காணியும் கொடுத்திருந்தார். தோட்டக் காணியைக் கொடுக்கவில்லை .


நான் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கம்பஸில் இருந்து வீட்டுக்கு வரும் பொழுது சாவகச்சேரியில் பஸ்ஸால் இறங்கியதும்,அய்யாவின் கடை தெரிகிறதா என ஒரு முறை சுற்று முற்றும் தேடிப் பார்ப்பேன். இப்போதும் அப்படிப் பார்ப்பது வழமையாகி விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரை மாய்த்தலும் வாழ்வை நேசித்தலும்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

**மருத்துவர் எஸ்.சிவதாஸ்**
உளமருத்துவ நிபுணர்
யாழ்.போதனா மருத்துவமனை



தற்கொலைகளில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதைப்போன்று, மரபணு சார்ந்த காரணிகளும் பங்காற்றுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. சில குடும்பங்களில் பலர் இத்தகைய மரணங்களுக்கு ஆட்படுவதை அதிகமாக நாம் அவதானிக்கின்றோம். எனவே பரம்பரைக்காரணிகளைநாம்புறக்கணித்துவிட முடியாது. அதனை விட முன்யோசனையின்றி உடனடியாகச் செயற்படுகின்றமை மற்றும் ஆக்ரோஷமான ஆளுமைக் கூறுகள் என்பவையும் இத்தகைய மரணங்களில் பங்காற்றுகின்றன. இவற்றை நாம் ஆரம்பத்தில் இருந்தே கவனிக்க வேண்டியது அவசியமாகிறது. அதிலும் குறிப்பாக 'மிகைத்துடியாட்ட கவனக்குவிப்பு குறை நோய்' சார்ந்தவர்கள் இத்தகைய மரணங்களுக்கு இலக்காகின்றனர். இதனை சிறு பராயத்திலேயே அவதானித்து அதனை ஆரோக்கியமாகக் கையாள்வதன் மூலம் இந்த மரணங்களைத் தவிர்க்க முடியும்.

## கவனிக்கப்பட வேண்டிய கட்டிளமைப் பருவங்கள்

இளையவர்களின் மிக முக்கியமான பிரச்சினைகள் பெரும்பாலும் அவர்களின் கட்டிளமைப் பருவத்திலேயே வெளிப்படுகின்றன. இந்தக்காலப் பகுதியிலேயே உளநோய்களில் சரிபாதிக்கும் மேற்பட்டவை ஏற்படுகின்றன என்கின்றன ஆய்வுகள். இந்தக் காலப்பகுதியில் இளையவர்கள் உதவியற்றவர்களாகவும், பாதுகாப்பு இல்லாதவர்களாகவும் உணரப்படுகின்றனர். அத்துடன் தங்கள் வாழ்க்கை தங்களது கட்டுப்பாட்டை மீறிச் செல்கின்றது என்று அவர்கள் எண்ணிக் கொள்கின்றனர். எனவே இக்காலப் பகுதியில் இளையவர்கள் வாழ்வைத் திறம்பட எதிர்கொள்வதற்கு சமூக ஆதரவும், குடும்ப ஆதரவும் தேவைப்படுகின்றது. இவை இல்லையென்று உணரத்தலைப்படும்போதே அவர்கள் தங்களின் உயிரை மாய்த்துக்கொள்ளத் தலைப்படுகின்றனர். எனவேதான் வளங்களை மேம்படுத்தி, சந்தர்ப்பங்களை வழங்கி, நல்ல ஆதரவுத் தளத்தை வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தும்போது அவர்கள் வாழ்வை நேசித்து வாழ்கின்றனர்;வளர்கின்றனர்.

## உணர்ச்சித் தளம்பல்கள்

பிள்ளைகள் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொள்வதற்கு மற்றொரு காரணமாக உணர்ச்சித் தளம்பல்கள் அமைகின்றன. உணர்ச்சித் தளம்பல்களுடன் கூடிய சிந்தனைப் பிறழ்வுகளும் பேராபத்தானவை. அதனைவிட பிரச்சினைகளைக் கையாளுகின்ற திறன் இன்மையும் பாதகமான விளைவுகளுக்கு வழி செய்கிறது. இப்படியான பாதிப்புகள் காணப்படும்போது பாதுகாப்பற்ற உணர்வுக்கு சென்றுவிடும் நிலையும், தன்னம்பிக்கை இழக்கின்ற நிலையும் ஏற்படுகின்றது. இவ்வாறானநிலையில் தொடர்பாடல் சார்ந்த பிரச்சினைகளும் முரண்பாடுகளும் பெற்றோருடன் ஏற்படும்போது அது பெரியளவில் பிள்ளைகளைப் பாதிக்கச் செய்கின்றது. மறுமுனையில் குடும்ப வன்முறைகளும் இளையோர் தற்கொலை செய்துகொள்வதற்கான பிரதான காரணிகளில் ஒன்றாக மாறியிருக்கின்றன.

## சமவயதுக் குழுக்கள்

அடுத்து சமவயதினருடன் ஏற்படுகின்ற உறவுச் சிக்கல்களும் இளையோர் தற்கொலைகளில் பெருமளவு தாக்கத்தை உண்டாக்குகின்றன. ஒத்தவயதுடைய நண்பர்களின் நிராகரிப்பு, உறவு முறிவு அல்லது இழப்பு என்பன இதற்குள் அடங்கும். சுமார் 20 வீதமான இறப்புகளுக்கு இவை முக்கியமான காரணிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. தற்கொலை செய்துகொண்ட மாணவர்களில் சுமார் 15 வீதமான மாணவர்களின் தற்கொலைகள் நிகழ்வதற்குப் பாடசாலைகளே காரணமாக அமைகின்றன. பரீட்சைகளும், மதிப்பீடுகளும் அவை ஏற்படுத்தும் நெருடல்களும் இதில் பங்காற்றுகின்றன. இவற்றைக் குறைப்பதற்கு நாம் சிலபல வழிமுறைகளைக் கையாள வேண்டும்.

## மன ஆரோக்கியத்தின் மகிமை

இளைஞர்களின் தற்கொலைகளைத் தடுப்பதற்கு மன ஆரோக்கியம் மேம்படுத்தப்பட வேண்டும். இங்கு மன ஆரோக்கியம் என்பது மனத் திருப்தியுடன் சீரான வாழ்வை வாழ்வதைக் குறித்து நிற்கின்றது. மனதின் ஆரோக்கியம் எந்நாளும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்றில்லை. இதில் ஏற்றங்கள், இறக்கங்கள் காணப்படலாம். ஆனாலும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சீரான நிலையில் இதைப் பேணவேண்டும்.

வேலை, பொழுதுபோக்கு, ஓய்வு என்பவற்றை சரியான அளவில் செயற்படுத்தல், மாற்றங்களை ஏற்றுக்கொள்கின்ற பக்குவத்தை உருவாக்கி வளப்படுத்தல், நிறைவு கொள்ளுதல், மகிழ்ச்சியாகப் பொழுதுகளைக் கழித்தல், நெருக்கீடுகளைக் கையாளுதல், வாழ்க்கையை ஒரு இலக்கோடு கொண்டு செல்லல் என்பன மன ஆரோக்கியத்தை உறுதிப்படுத்தும் செயன்முறைகளாக அமைகின்றன.

உயிரை மாய்த்தலுக்கு பல காரணிகள் காணப்படுகின்ற போதிலும், அவற்றையெல்லாம் தாண்டி பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து பலர் வாழ்ந்து வருகிறார்கள்; வாழ்ந்து காட்டுகிறார்கள். இவர்கள் தங்கள் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தி, உறுதியான உள்ளம் கொண்டவர்களாக வாழ்கின்றனர். அவர்களிடம் இருந்து நாம் வாழ்க்கையை நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



# ஈஸ்டர் தாக்குதல்...

இடமில்லை. ஒன்றின் காரணமாக மற்றொரு காரியம் நிகழ்வதற்கும் (Cause - மூலம்) ஒன்றில்லாமல் இன்னொன்றிருக்க முடியாது என்று சொல்லுவதற்கும் இடையில் பெரும் வேறுபாடு உண்டு. பைபிளின் படி ஒருவன் நீதிமானாகிறபோது மாத்திரமே அவனுடைய பாவங்களுக்கு மன்னிப்புக் கிடைத்து அவன் குற்றவாளி இல்லை என்ற நிலையை அடைய முடியும்.

அந்த நீதிமானாகுதலை ஒருவன் விசுவாசத்தின் மூலம் மட்டுமே அடைய முடியும் (Faith Alone). ஆகவே நீதிமான் என்ற தகுதியைப் பாவம் செய்தவனுக்கு வழங்குகின்ற கிருபையின் கருவியாக (Instrumental Means) இருப்பதே விசுவாசம்.

ஆகவே குற்றவாளிகளுக்கு விசுவாசம் எங்கிருந்து யாரை நோக்கி வரும்? உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் குற்றம் மாத்திரமா? இல்லையே! போர்க்காலத்தில் நடந்த குற்றங்கள், ஊழல்மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகங்கள் என்று ஒரு நீண்ட பட்டியல் உண்டு அல்லவா?

இவை பற்றியெல்லாம் சுட்டிக் காட்டிப் பேச மறுக்கும் தாங்கள் முதலில் வடக்கு - கிழக்கு உள்ளிட்ட ஒட்டுமொத்த 'இலங்கைத்தீவு மக்கள்' என்ற விசுவாசத்தின் மூலம் நீதிமானாக மாற்றமடைய முற்படுங்கள்.

அதன் பின்னர் மற்றைய குற்றவாளிகளுக்கு மன்னிப்புக் கொடுப்பது பற்றி யோசிக்கலாம்.

சிங்களக் கத்தோலிக்க மக்கள், பௌத்த சிங்களவர்கள் என்ற உணர்வை மாத்திரம் முன்னிலைப்படுத்தி நீதிமானாகிவிட முடியாது இதனைப் புரிய மறுக்கத் தாங்கள் சிறுபிள்ளை அல்ல.

வத்திக்கானில் உள்ள திருத்தந்தையின் 'கர்தினால்' என்ற சர்வதேச அந்தஸ்தில் (International Excellence) இருந்து கொண்டு, இலங்கைத்தீவில் உள்ள ஏனைய சமூகங்களை ஓரக்கண்ணால் பார்க்கும் சிறுமைத் தனத்தில் (Smallness) இருந்து முதலில் தாங்கள் வெளியே வரவேண்டும்.

தங்கள் தமிழர்களுக்காகச் செய்த உதவி ஒன்றேயொன்றுதான், 1995 இல் சந்திரிகாவின் அரசாங்கம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது சுமார் ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்து வன்னிப் பெருநிலப்பரப்பில் உறவினர்களின் வீடுகளிலும் ,கொட்டகைகளிலும் வாழ்ந்தார்கள். அவர்களுக்கு உதவி செய்வதற்காக யாழ்.மரியன்னைப் பேராலய பங்குத் தந்தை ஜெபநேசன் அடிகளார் கொழும்புக்கு வந்து உதவிப் பொருள்களையும் ஐந்து இலட்சம் ரூபா பணத்தையும் பெற்றுக் கொண்டு வன்னிக்குச் சென்றிருந்தபோது வவுனியா சோதனைச் சாவடியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

அப்போது இராணுவ உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அந்தப் பொருள்களும் பணமும் விடுதலைப் புலிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டதல்ல, இடம்பெயர்ந்து வாழும் மக்களின் தேவைகளுக்காக என்று அடித்துக் கூறியிருந்தீர்கள். இதுதான் அன்று தாங்கள் நினைத்துச் செய்த ஒரு நல்ல காரியம்.

ஆனாலும் பல மாதங்கள் சிறையில் இருந்த பின்னரே அருட்தந்தை விடுதலை செய்யப்பட்டிருந்தார். சிறையில் நடத்தப்பட்ட பலமான அடி உதையினால் நோய் ஏற்பட்டே ஜெபநேசன் மரணமடைந்தார் என மருத்துவர்கள் அன்று கூறியிருந்தனர் என்பதையும் ஞாபகமூட்ட விரும்புகிறோம்.

ஆயர் தியோகுப்பிள்ளை ஓய்வுபெற்றபோது பொன்.வெள்ளி, வைரவிழா 1992 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதன் போதுதான் கொழும்புப் பேராயராக இருந்த மார்க்கஸ் பெர்னாண்டோ நீண்டகாலத்துக்குப் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு வந்ததுடன், முதன் முதலாக ஆயர் தியோகுப்பிள்ளையுடன் மனம் திறந்து பேசியுமிருந்தார்.

தமிழர்களுக்கு இழைக்கப்படும் அரசியல் அநீதிகள், இராணுவக் கெடுபிடிகள் பற்றியும் அதற்கு எதிராக ஆயர் தியோகுப்பிள்ளை மேற்கொண்டு வரும் சேவைகள் பற்றியும் பாராட்டியிருந்தார்.

அதேபோன்று தமிழ் ஆயர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் விசுவாசத்தை வெளிப்படுத்தித் தாங்கள் மனம் திறந்து பேச வேண்டும். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களுக்கு நீதி தேவை என்பதில் மாற்றுக் கருத்தில்லை. கொல்லப்பட்ட 269 பேரில் அதிகமானோர் தமிழர்கள்.

ஆகவே ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்படும் அரசியல் அநீதிகளுக்குச் சர்வதேச நீதி அவசியம் என்ற முதன்மைக் காரணத்தைத் துணிவுடன் தாங்கள் முன்மொழிய வேண்டும்.

*நன்றி*
*தமிழ் மக்கள்.*

# இலங்கைப் போரையும், இனப்படுகொலையையும் எழுதுவது எனது கடமை



## தமிழர்களுக்கு பிரபாகரன் மீது பிடிமானம் அதிகம்

சமீபத்தில் ஆஸ்திரேலியாவின் உயரிய இலக்கிய விருதான மைல்ஸ் பிராங்க்ளின் விருதை வென்றவரான **சாங்கரி சந்திரன்** சிட்னியில் வசித்து வந்தாலும், அவரது பூர்வீகம் இலங்கையின் யாழ்ப்பாணமே. அவர் ' Songs of Sun God , Barriers , Chai time at cinnamon Gardens எனும் மூன்று நாவல்களை எழுதியுள்ளார். சட்டத்தரணியாகப் பணிபுரிந்த சங்கரி, இப்போது முழுநேர எழுத்தாளராக மாறி, இலங்கைப் போர் பற்றிய கதைகளை ஆங்கிலமொழியில் வெளிப்படுத்தும் பணியைச் செய்து வருகின்றார்.அவரின் நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.

நேர்கண்டவர்: ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி




**கே:** உங்கள் இரு நாவல்களும் இலங்கையில் நடந்த இனப்படுகொலையைப் பற்றி பேசுகின்றன. பல தமிழ் எழுத்தாளர்கள் இலங்கையில் நடந்த இனப்படுகொலை பற்றி தமிழில் எழுதுகிறார்கள். ஆனால் தமிழ்மொழியில் எழுதுவதால் அவை உலகிலுள்ள மற்ற நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பில்லை. ஆங்கிலத்தில் நன்றாக எழுதக்கூடியவர்கள் இனப்படுகொலை பற்றி எழுதுவதில்லை. மேற்கத்திய நாடுகளுக்கு தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து 30 – 40 வருடங்களாகின்றன. மேற்கத்திய மொழிகளில் நமது பிரச்சினைகள் பற்றி குறைந்தது 1000 புத்தகங்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது இன்னும் நடக்கவில்லை. அது ஏன் நடக்கவில்லை என்பதுதான் எனது கேள்வி . புலம் பெயர்ந்த உலகத் தமிழ் மக்கள் ஏன் தம் குழந்தைகளை நமது துன்பங்களைப் பற்றி எழுத அனுமதிக்கவில்லை? யூதர்களைப் போல நாம் ஏன் நமது துன்பங்களை இளைய தலைமுறையினருக்கு கொண்டு செல்லவில்லை? இது நமது தோல்வி இல்லையா ?.

**சங்கரி சந்திரன்:** நாம் அதிகமாக எழுத வேண்டும் என்று நினைக்கிறீர்களா ? ஆம், நாம் இன்னும் அதிகமாக எழுத வேண்டும். வெள்ளை எழுத்தாளர்களும் என்னிடம் நீங்கள் ஏன் எப்போதும் இனப்பிரச்சினையைப் பற்றி எழுதுகிறீர்கள் ?என்று கேட்கிறார்கள். சமீபத்தில் நடந்த சிட்னி எழுத்தாளர் விழாவில், என்னிடம் இதேபோன்று போரைப் பற்றி ஏன் எழுத வேண்டும் என்ற கேள்வி வந்தபோது, " நான் ஒரு தமிழிச்சி . எங்கள் துன்பங்களைப் பற்றி எழுதுவதை விட வேறு வழியில்லை. அந்தப் போரைப் பற்றி எழுதும் கடமை மட்டுமே எனக்கு இருக்கிறது. அதுதான் எங்களது வாழ்க்கை. அதுதான் எங்களின் துன்பம். அதுதான் எங்களின் போராட்டம். அதனால் தான் சொந்த நாட்டை விட்டு வெளியேறினோம் . போரைப் பற்றிச் சிறிதும் இல்லாமல் தமிழ்க் குணம் அல்லது குடும்பம் பற்றி எவ்வாறு எழுதுவது ?. எனவே நாங்கள் இன்னும் அதிகமாக எழுத வேண்டும் என்பதில் நான் உடன்படுகிறேன்.

**கே:** 'Songs of Sun God' நாவலில், தாரா இராணுவ வீரர்களால் சித்திரவதை செய்யப்படும் பொழுது, அவள் தொற்றுநோய்களை அகரவரிசையில் சொல்லத் தொடங்குவாள் : அமீபிக் வயிற்றுப் போக்கு, சிக்கன் பொக்ஸ், டெங்கு, டிப்தீரியா, முதலியன. இராணுவம் சித்திரவதை செய்வதை விரிவாகக் கூறுவதற்குப் பதிலாக வாசகர்களை தொற்றுநோய்கள் மூலம் கற்பனை செய்து பார்க்க வைப்பது ஒரு சிறந்த யுக்தியாகும் . கொலைகார இராணுவத்தினர் தொற்றுக்கிருமிகள் போல தாராவின் உடலில் ஊடுருவ முயற்சி செய்கின்றனர் எனக் கற்பனை செய்யமுடியும். நாவலின் இந்தப் பகுதி என்னால் மறக்க முடியாதது. முழு நாவலினதும் முக்கியமான தருணம் இதுதான். இந்த யுக்தியைக் கையாளும் எண்ணம் எவ்வாறு வந்தது ? . உங்கள் குடும்பம் மருத்துவப் பின்னணியைக் கொண்டது என்பதாலா?

**சங்கரி சந்திரன்:** ஆம், என் பெற்றோரும், தாத்தாவும் மருத்துவர்கள் . எனவே மருத்துவ மொழி மற்றும் அது சார்ந்த மருத்துவச் சிந்தனைகள் அனைத்தையும் மிகவும் சரளமாகவே கேட்டு வளர்ந்திருக்கிறேன் . மேலும், எனது வழக்கறிஞர் பணிக்காக தொடர்ச்சியாக வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்காக சமூக நீதித் துறையில் பணியாற்றியுள்ளேன் . எனவே அந்தக்கொடுமைகளை எனக்கு நன்றாகவே தெரியும் . எனவே அதைப் பற்றி எழுதுவது எனக்கு முதன்மையானது. இந்தக் கதைகளை நான் நினைவில் வைத்திருக்கிறேன் , அதைப் பற்றி யோசிக்கிறேன், அவர்கள் என்னிடம் சொல்லாதபோதும், நான் எப்போதும் மக்களைப் பார்த்து அவர்களின் கதை என்ன என்று அலைந்து கொண்டிருப்பது போல் உணர்கிறேன். ஆனால் அதனைப் பற்றி எழுதும்போது, வாசகர்கள் அந்தக் கொடுமைகளை போதுமான அளவு உணர வேண்டும் என்று நான் விரும்பினேன். திகைப்பு,பதைபதைப்பு , மீறல் மற்றும் மிருகத்தனத்தின் உணர்வுகளையெல்லாம் வாசகர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும் . நாங்கள் ஒருவரையொருவர் அப்படிச் செய்யக்கூடாது என்று குறைந்தபட்சம் ஒரு கட்டத்தில் சொல்ல முடியும். நாம் அதை ஒருவருக்கொருவர் செய்கிறோமா? இந்தக் கொடுமைக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் . அதற்கு நியாயம் கிடைக்க வேண்டும் .

**கே:** உங்கள் நாவலில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை, இராவணனுடன் ஒப்பிட்டு ஒரு கதாபாத்திரம் சொல்லுமிடமுண்டு. அதுமட்டுமின்றி இந்த நாவலில் பல இடங்களில் விடுதலைப் புலிகளை, தாரா என்ற கதாபாத்திரத்தின் வாயிலாக நீங்கள் விமர்சித்திருக்கிறீர்கள்.இது தொடர்பில் தமிழ் வாசகரிடமிருந்து ஏதேனும் ஆட்சேபனை வந்ததா ? ஒரு எழுத்தாளராக பிரபாகரன் பற்றி உங்களுடைய பார்வை என்ன ? நீங்கள் முன்பே சொன்னது போல, Songs of sun God நாவல் இலங்கைத் தீவில் நடந்த 70 வருட வரலாற்று நிகழ்வுகள் மற்றும் அரசியல் நிகழ்வுகளின் சாத்தியக்கூறுகள் வரலாற்றை வேறுவிதமாக எவ்வாறு மாற்றியிருக்கலாம் என்பதைப் பற்றிப் பேசுகிறது. ஆயுதப்போருக்குப் பதிலாக, அகிம்சைப் போராட்டம் நடத்தியிருந்தால் ஒரு வேளை விளைவுகள் வேறாக இருந்திருக்குமா? அதுகுறித்து உங்களது கருத்து என்ன?

**மேற்கத்திய வாசகர்களுக்கு பிரபாகரன் குறித்து எந்தவிதமான உணர்ச்சிகரமான பிடிப்பும் கிடையாது. ஆனால் தமிழர்களாகிய எல்லோருக்கும் அவர் மீது உணர்வுபூர்வமான பிடிமானம் அதிகம் . நீங்கள் வெளியில் இருந்து பார்த்தால், போராட்டத்தின் தார்மீகம் மிகவும் சிக்கலானது.நீங்கள் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதற்காக அல்லது நோக்கங்களை அடைவதற்காகக் கடைப்பிடித்த தார்மீக உயர்நிலைகளை அடிக்கடி இழந்துவிட்டதை ஒப்புகொள்ளத்தான் வேண்டும்.**

**சங்கரி சந்திரன்:** மேற்கத்திய வாசகர்களுக்கு பிரபாகரன் குறித்து எந்தவிதமான உணர்ச்சிகரமான பிடிப்பும் கிடையாது. ஆனால் தமிழர்களாகிய எல்லோருக்கும் அவர் மீது உணர்வுபூர்வமான பிடிமானம் அதிகம் .நீங்கள் வெளியில் இருந்து பார்த்தால், போராட்டத்தின் தார்மீகம் மிகவும் சிக்கலானது.நீங்கள் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதற்காக அல்லது நோக்கங்களை அடைவதற்காகக் கடைப்பிடித்த தார்மீக உயர்நிலைகளை அடிக்கடி இழந்துவிட்டதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஒரு எழுத்தாளராக பிரபாகரனின் பல்வேறு பக்கங்களை மற்றும் பார்வைகளை முன்வைப்பதே எனது நோக்கம். நாவலில் வரும் தாரா கதாபாத்திரம் பெரும்பாலான நேரம் அரசியலுடன் சம்பந்தப்பட்டுள்ளது . புலிகளின் தலைமையின் குறிப்பிட்ட தார்மீக முடிவுகளிலிருந்து விலகி நின்றே தன்னால் முடிந்த நன்மைகளை மக்களுக்குச் செய்கிறாள்.

(07ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






○ ரஜிதா அரிச்சந்திரன்

5
சஞ்சீவி தொடர்கதை

விமானம் கட்டுநாயக்க ஓடுபாதையில் முத்தமிட்டு நின்றது. விடுதியொன்றில் தங்கி, கொஞ்சநேரம் ஓய்வெடுத்துவிட்டு, ஹைஏஸ் வாகனமொன்றில் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டார்கள். காடுகளும், வீடுகளும், தாதுகோபுரங்களும், குன்றுகளும் டொடாவுக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணின. அகன்ற விழிகளோடு அவற்றைப் பார்த்துக்கொண்டு வந்தாள். முறிகண்டியில் வாகனம் நின்றது.

டொடா ஆர்வமாக வாகனத்தை விட்டு இறங்கினாள் .

"மாமி வாறிங்களா?" என விக்னேஸைக் கேட்டாள்.

" இல்லையம்மா. தூக்க கலக்கமா இருக்கு. நீங்கள் ரெண்டு பேரும் போட்டு வாங்கோ" என்றாள். இருவரும் இறங்கி ஆலயத்துக்குச் சென்றார்கள். டொடா கால் கழுவி , ஆலயத்தினுள் நுழைந்து, தலையில் குட்டி தோப்புக்கரணம் போட்டு வணங்கினாள். அங்கு நின்ற பலரும் 'ஒரு வெள்ளைக்காரப் பெண் இப்படி எங்கள் முறைப்படி வழிபடுகிறாளே?' என்று ஆச்சரியப்பட்டனர். சிலர் இவளிடம் கதைத்தனர். "உங்களுக்கு இந்தக் கடவுளின் பெயர் தெரியுமா? " எனக் கேட்டதும், ''பிள்ளையார்" என்று அழகாகச் சொன்னாள். சாமி கும்பிட்டுவிட்டு, கச்சானும் வாங்கிக் கொண்டு வாகனத்தில் ஏறினார்கள். வாகனம் விரையத் தொடங்கியது. சில நிமிடங்களில் கிளிநொச்சி வந்ததும், வாகன வேகத்தைக் குறைக்கச் சொல்லிவிட்டு, இன்னும் ஆர்வத்தோடு அதனைப் பார்த்தாள்.

" இங்கதானே புலிகளின் அரசியல் தலைமையகம் இருந்தது? இதுதானே சந்திரன் பூங்கா? இது வீரம் விளைந்த மண். ஐ ஆம் வெறி பிறஃவ்ட் ஒவ் மை செல்ஃப். நான் தமிழ்க் குடும்பத்தின் மருமகள் . கல் தோன்றி மண் தோன்றாக் குடியின் வழி வந்த தமிழ் மகனின் மனைவி" என்றெல்லாம் கூறிக்கொண்டே வந்தாள். இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த ரைவர் பின்னால் திரும்பி,

"தங்கச்சி நீங்கள் எப்படி இதெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறீர்கள், ஆர் அருணா சொன்னவர்?" என்று கேட்டார்.

"இல்லை அண்ணா. இதெல்லாம் எங்கட ஊரில நியூஸாக் காட்டுவாங்கள். எங்கட இடத்தில பிறந்த பிள்ளைகள் பலரும் இப்ப இலங்கை, இந்தியா நோக்கி வருகினம். எங்களுக்கு எங்கட கலாசாரத்தால மனவுளைச்சல் தான் மிச்சம். தமிழ்க்கலாசாரம் தான் அருமை" என்றாள் டொடா.

"சரியாச் சொன்னீங்கள். இப்ப எங்கட பெடி பெட்டையள் தான் எங்கட கலாசாரத்தை மறந்து போட்டாங்கள்" என்று பெருமூச்சோடு கூறினார்.

அதிகாலை 4.30 மணி. ஊருக்கு வந்துவிட்டார்கள். விடிகாலை என்பதால் கமலா உறங்கி விட்டாள். வாகனச் சத்தம் கேட்டதும் எழும்பி வந்த கமலாவும், விக்னேஸும் மாறி மாறி கட்டிப்பிடித்து மகிழ்ந்தனர். கமலா, விக்னேஸை தன் அறையில் தங்கும்படி கூறினாள். அருணும் டொடாவும் தனி அறையில் தங்க வைக்கப்பட்டனர்.

அருணுக்கு 'ஏஸி' இல்லாமல் அந்த அறையில் தங்க கஷ்டமாகவே இருந்தது. ' ஐயோ டொடா பாவமே' என்று நினைத்தவன், " டொடா நாங்கள் ஏஸி உள்ள ஹொட்டலுக்குப் போவோமா?" என்று கேட்டபடி திரும்பியவன் அதிர்ந்தே போய்விட்டான். அவள் பனையோலைப் பாயுடனும் ஓலை விசிறியுடனும் வந்துகொண்டிருந்தாள். "என்ன இது டொடா?" என்றவனுக்கு ,

"அருண் லண்டன்ல இதைத் தேடி அலையுறனாங்கள், ஆனால் கிடைக்கிறது குறைவு . இங்க தாராளமா இருக்கு. இதை வெறும் நிலத்தில விரித்துப் படுத்தால் நல்லா இருக்குமென்று யூரியூப் பார்த்தனான். இன்றைக்கு இதில படுப்போம் " என்று டொடா சொன்னதும், அருணுக்கு தூக்கி வாரிப் போட்டது. இருவருக்கும் களைப்பு அதிகமாக இருந்ததால் பாயில் படுத்த அடுத்தகணமே தூங்கி விட்டார்கள். காலை விடிந்து நீண்டநேரத்துக்குப் பின்னரே, 11 மணியளவில் தான் டொடாவும், அருணும் தூக்கத்தால் எழுந்தனர். பரபரவென இருவரும் குளித்துவிட்டு வர சாப்பாடு ரெடியாக இருந்தது. சாப்பிட்டதும் தாமதிக்காமல் ஷோபாவைத் தேடும் வேலையில் இறங்கினர். டொடாவுக்கு ஆனந்தியின் வீட்டைக் காட்டினாள் கமலா. டொடா கவலைப்பட்டாள்.

"மாமி, எப்பிடி ஷோபாவைக் கண்டுபிடிக்கிறது? ஏதும் வழி இருக்கா? எங்க போய் அவளைத் தேடலாம்?" என்று கேட்டாள்.

"டொடா இனியெங்க போறது? நான் பொலிஸுக்குப் போனன். அங்கையும் வெறுப்பேத்துறாங்கள். சோம்பேறிப் பொலிஸ். அவங்கள் வேலை செய்யவா இங்க வந்தவங்கள்?" என்று அலுத்துக்கொண்டாள் கமலா.

"மாமி , அப்போ நாங்கள் ஒவ்வொரு லேடீஸ் ஹொஸ்ரலிலையும் தேடிப் பார்ப்போமா? சில வேளைகளில் தாயின் செயற்பாடு பிடிக்காமல் லேடீஸ் ஹொஸ்ரல் எதுக்கும் ஷோபா போயிருக்கலாம் தானே?"என்று ஐடியா கொடுத்தாள் டொடா.

கமலாவுக்கும் அந்த யோசனை சரியெனப்பட்டது.

கமலாவும் டொடாவும் ஒவ்வொரு லேடீஸ் ஹொஸ்ரலாக ஏறி இறங்கியும் எந்தப் பயனும் இல்லை. இறுதியாக ஒரேயொரு ஹொஸ்ரல் மட்டுமே எஞ்சியிருந்தது. இருவரும் அந்த ஹொஸ்ரலை நோக்கி நடந்தார்கள். அது மூடப்பட்டிருந்தது. வாட்ச்மன் ஒருவர் மட்டுமே முன்னால் இருந்தார். ஷோபாவைப் பற்றி அவரிடம் விசாரித்தார்கள்.

"இது ஒரு போதைவஸ்து பிரச்சினையால மூடிட்டாங்கள். இங்கையிருந்த பிள்ளைகள் எல்லாரும் உறவினர்களுடன் சென்று விட்டார்கள். நான் வார்டனின் நம்பர் தாறன். அவரிடம் ஒருக்கா கதையுங்கோ. சிலவேளை ஏதும் தகவல் கிடைக்கலாம்" என்று கூறி, வார்டனின் நம்பரையும் கொடுத்தார். உடனேயே அந்த நம்பருக்கு கோல் பண்ணினார்கள்.

"ஹலோ யார் பேசுறது?"

" நீங்கள் ஹொஸ்ரல் வார்டனா? ஷோபா எண்ட பெயரில ஆரும் உங்கட ஹொஸ்ரலில இருந்தவையா? என்ர பெறாமகள் ஷோபா எங்க எண்டு தெரியாமல் தேடுறம். சிலவேளை அவா உங்கட ஹொஸ்ரலில இருந்திருக்கலாமோ எண்டு தான் கோல் பண்ணினன்" என்று கமலா விடயத்தை விளக்கினாள்.

" ஓம். அந்தப் பிள்ளை இங்கதான் இருந்தவா. இப்ப அசோக் எண்ட பெடியன்ர வீட்டில இருக்கிறா. அசோக்கின்ர போன் நம்பர் இருக்கு. போன் பண்ணிப் பாருங்கோ" என்று சொல்லி அசோக்கின் நம்பரைக் கொடுத்தாள் வார்டன்.

" தாங்க்ஸ் அம்மா " என்று மகிழ்ச்சியோடு சொல்லி போனை வைத்தாள் கமலா.

டொடாவுக்கு இப்போது நம்பிக்கை வந்திருந்தது. ஒருகணமும் தாமதிக்காமல் அசோக்கின் நம்பருக்கு கோல் எடுத்தார்கள்.

" யார் கதைக்கிறது?" எனக் கேட்டான் அசோக்.

" தம்பி, நான் ஷோபான்ர பெரியம்மா. ஷோபா உங்கட வீட்டையா இருக்கிறா?" என்று பதைபதைப்போடு கேட்டாள் கமலா.

"அன்ரி நீங்க கவலைப்படாதைங்கோ . அவா எங்கட வீட்டில தான் இருக்கிறா. வீட்டு அட்ரஸ் தாறன் வாங்கோ" என்று முகவரியைச் சொன்னான் அசோக். ஓட்டோ ஒன்றில் அசோக் சொன்ன முகவரிக்கு கமலாவும், டொடாவும் விரைந்தனர்.

ஓட்டோவில் ஏறிய இருவரும் அமைதியாக அமர்ந்திருந்தார்கள். ஓட்டோவில் ஒலித்த 'சொந்தத்தின் சொந்தமாக நாங்களிருந்தோம் 'என்ற பாடலைக் கேட்ட கமலாவின் கண்களில் நீர் வழிந்தோடியது. பழைய ஞாபகங்கள் வந்தன. ஆனந்தியும், தானும், எல்லா சகோதரங்களும் கூடி இருந்த வாழ்வு நினைவில் வந்தது. அந்த மலரும் நினைவை 'அம்மா இடம் வந்திட்டு' என்ற ஓட்டோக்காரனின் குரல் குழப்பியது.

வாசலில் ஷோபா நின்றிருந்தாள். அவளைக் கண்டதும் கமலா கண்ணீரோடு ஓடிச் சென்று கட்டியணைத்தாள். இருவரும் உணர்ச்சிப் பெருக்கில் அழுதனர்.

டொடாவைக் கமலா அறிமுகப்படுத்தினாள். "உன்னைக் கண்டுபிடிக்கத் தான் லண்டனில இருந்து டொடா வந்தவள்" என்று கமலா சொன்னதும், ஓடிப்போய் டொடாவை ஆரத் தழுவினாள் ஷோபா.


" பெரியம்மா உன்னைப் பார்க்க ஆசையா இருக்கிறா. வா போவம்" என்று கமலா சொன்னாள்.

அசோக்கின் வீட்டில் இருந்து வெளியேற ஷோபாவுக்கு மனமில்லை. ஆனாலும் போகத்தானே வேண்டும். ஷோபா தன் சொந்தங்களோடு புறப்பட்டாள்.

அதன் பின்னர் டொடாவும் அருணும் ஷோபாவை லண்டனுக்கு அனுப்பும் காரியங்களில் மும்முரமாக இறங்கினர். ஷோபாவுக்கு பாஸ்போட் எடுத்து, விசாவுக்கு பதிவு செய்து, ஆங்கிலம் கற்பித்து ஒருசில மாதங்களிலேயே தங்களோடு அவளையும் சேர்த்து, லண்டனுக்கு அழைத்துக்கொண்டு வந்தனர். விக்னேஸுக்கு ஷோபா மீண்டும் கிடைத்ததும், தங்களோடு லண்டன் வந்ததும் அவள் நோயின் பாதியை இல்லாமல் செய்துவிட்டது.

ஷோபாவின் வாழ்க்கையில் இன்னொரு திருப்புமுனை லண்டனில் காத்திருந்தது.

(தொடரும்)



# யாழ்ப்பாண வரலாறு

○ ந.பரமேஸ்வரன்

1505–1948 வரை

**1946 ஜூலை 29**

காங்கேசன் சிமெந்து ஆலைக்கான அடிக்கல் கைத்தொழில் அமைச்சர் சி.கொரியாவால் நாட்டப்பெற்றது.

**1946 ஓகஸ்ட்**

ஐக்கிய தேசியக்கட்சி உதயம்

டி.எஸ்.சேனநாயக்கா இலங்கை தேசிய காங்கிரஸ், சிங்கள மகாசபை போன்ற சிங்கள அமைப்புகளையும் முஸ்லிம் லீக்கையும் யாழ்ப்பாண மாவட்ட சட்டசபை பிரதிநிதி மகாதேவாவையும் இணைத்து ஐக்கிய தேசியக்கட்சியை ஆரம்பித்தார். மகாதேவாவுக்கும் டி.பி. ஜாயாவுக்கும் உபதலைவர் பதவிகள் வழங்கப்பட்டன. ஐக்கிய தேசியக்கட்சி ஆரம்பத்தில் ஐக்கிய இலங்கைக் கட்சி என்றே அழைக்கப்பட்டது.

**1946 செப்ரெம்பர்**

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் எலியேசர், அமெரிக்க பௌதிகக் கழகத்தின் அழைப்பை ஏற்றுச் சென்று அங்கு உரையாற்றினார்.

**1946 ஒக்ரோபர் 17**

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப்புறப்பட்ட தபால் புகையிரதம் அநுராதபுரத்தில் விபத்துக்குள்ளானதில் 7 பேர் ஸ்தலத்திலேயே பலியாகினர். இரண்டு பேர் மருத்துவமனையில் இறந்தனர். தண்டவாளத்திலிருந்த ஆணிகள் அகற்றப்பட்டிருந்தமையாலேயே இந்த விபத்து இடம்பெற்றது. இது ஒரு சதிச்செயலாகவே கருதப்பட்டது.

**1946 நவம்பர்**


சேர்.பொன்.இராமநாதன்,அருணாசலம் ஆகியோரின் உருவச்சிலைகள் நாடாளுமன்ற வளாகத்தினுள் ஆளுநர் சேர். ஒலிவர் குணாதிலகவால் திறந்து வைக்கப்பட்டன.

**1947 மார்ச் 18**

இந்தியத் தலைநகர் டெல்லியில் நடைபெற்ற ஆசிய நாடுகளுக்கிடையிலான கூட்டத்தில் கலந்து கொண்ட சுகாதார அமைச்சர் ஜோர்ஜ்.டீ.சில்வா இலங்கை அரசாங்கத்தின் கொடியாக வாளேந்திய சிங்கக்கொடியை எடுத்துச்சென்றார்.

(வரலாறு நீளும்)

## காணி நிலம் வேண்டும் தமிழரின் காணி நிலம் வேண்டும்



காணி நிலம் வேண்டும்
தமிழரின் காணி நிலம் வேண்டும்
காணி அருகினிலே விகாரைகள்
கட்டித் தரவேணும்
கேணி அருகினிலும்
கூடிக் குலாவிட
காணி நிலம் வேண்டும்
புத்தரின் போதனையைச்
சும்மா தூக்கி எறிந்துவிட்டு
புத்தரின் சிலை அதனை
விகாரைக்குள் சிறையும் வைக்கின்றனர்
காவியைக் கட்டிக் கொண்டு
தமிழரின் காணிக்கு சண்டையிட்டு
போதனை செய்வதனால்
பூமி புனிதம் ஆகிடுமோ?
குருந்தூரும் எங்களுக்கே
கோணேச்சரமும் எங்களுக்கே
மயிலத்த மடுவும் எங்களுக்கே
மயிலம்பாவையும் எங்களுக்கே
கன்னியாவும் எங்களுக்கே
அக்கரவெளியும் எங்களுக்கே
ஆடி அடங்கும் வாழ்க்கைக்கு
ஆறடி நிலம்தான் தேவை எனில்
அதற்கேன் இத்தனை அபகரிப்பும்
சொன்னால் புரியும் மக்களுக்கு
சொன்னாலும் புரியாது மாக்களுக்கு
அதனால் காணி நிலம் வேண்டும்
தமிழரின் காணி நிலம் வேண்டும்

வவுனியூர் தமிழ்மதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# இலங்கைப் போரையும்...

வெளிநாட்டில் வாழும் சுழல் நாற்காலிப் போராளிகள் பாதுகாப்பாக வாழ்ந்து விட்டு ஈழப்போராட்டத்தின் தார்மீகத்தை இப்பொழுது விமர்சிக்கிறார்கள், தாயகத்துக்காக களத்தில் நின்று போராடியோரின் மனநிலையை மதிப்பீடு செய்து தீர்ப்பளிக்கிறார்கள்.

பிரபாகரனின் வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்புமுனைகள் பற்றி நமக்கு எதுவும் முழுமையாகத் தெரியாது. 2002-2004 பேச்சுவார்த்தைகளை அவர் ஏற்றுக் கொண்டிருக்கலாமா? அவர்கள் நோர்வே, ஜப்பான் முதலான நாடுகள் கொண்டுவந்த சமாதான உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டிருக்க முடியுமா? எங்களுக்கு இப்போது எதுவும் தெரியாது . ஆயுதப் போராட்டமன்றி அகிம்சை போராட்டங்கள் என்ன சாதித்திருக்குமென்றும் சொல்லத் தெரியவில்லை , ஏனென்றால், அமைதியான கூட்டாட்சிக் கட்டமைப்பு அல்லது சுய அதிகாரம் பெற்ற தமிழ் மாநிலமொன்றைத் தருவதற்கு இலங்கை அரசாங்கம் ஒருபோதும் இதய சுத்தியுடன் இணங்கியிருக்கப் போவதில்லை. இந்த அரசாங்கம் அகிம்சைப்போராட்டம் நடத்தினால், என்ன பதில் அளித்திருக்கும் என்பதெல்லாம் இனப்படுகொலைகள் மூலம் நமக்கு நன்றாகத் தெரிகிறது இல்லையா ? இறந்தவர்கள் இறந்துவிட்டார்கள். நாம் என்ன செய்யமுடியும்? . இப்பொழுது உட்கார்ந்து சிந்தனைப் பரிசோதனை செய்து பார்ப்பதில் என்ன லாபம் ? ஆயிரமாயிரம் குழந்தைகளை இழந்த பெற்றோருக்கு எந்த ஆறுதலும் இல்லை.

**கே: தமிழர்களின் விடுதலைக்கான போராட்டத்திலும் சாதிய அமைப்பு தாக்கம் செலுத்தியதா?**

**சங்கரி சந்திரன் :** ஆம் கண்டிப்பாக .. சமூக வர்க்க ஏற்றத் தாழ்வு மற்றும் சாதிப் பாகுபாடுகள் போராட்டத்தில் தாக்கம் செலுத்தின. பெரும்பாலான புலிகள் தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் ஏழ்மை வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று நான் நினைக்கிறேன். ஏதோ ஒரு வகையில் விடுதலைப் போராட்டம், அவர்களை ஒருங்கிணைக்கவும், வேறுபாடுகளை அகற்றவும் சில வழிகளில் உதவியது. எல்லோரும் சமம் என்று நினைத்தனர். அனைவரும் தங்கள் உயிருக்காக ஏற்றத்தாழ்வுகளை மறந்து ஒற்றுமையுடன் போராடினர்.

சமூக வர்க்க ஏற்றத் தாழ்வு மற்றும் சாதிப் பாகுபாடுகள் போராட்டத்தில் தாக்கம் செலுத்தின. பெரும் பாலான புலிகள் தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் ஏழ்மை வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று நான் நினைக்கிறேன். ஏதோ ஒரு வகையில் விடுதலைப் போராட்டம் , அவர்களை ஒருங்கிணைக்கவும், வேறுபாடுகளை அகற்றவும் சில வழிகளில் உதவியது.

**கே: உங்கள் இரு நாவல்களும் யாழ். நூலக எரிப்பு பற்றியும், அங்கு லட்சக்கணக்கான புத்தகங்கள் அழிந்ததைப் பற்றியும் பேசுகின்றன. 40 ஆண்டுகளுக்கு மேலாகியும், புலம்பெயர்ந்த நாடுகளில் யாழ். நூலகம் போன்ற நூலகத்தை தமிழ் சமூகமாகிய நம்மால் ஏன் கட்ட முடியவில்லை ?. ஏன் செய்யத் தவறுகிறோம் ? நாம் புலம் பெயர்ந்த ஒவ்வொரு நாட்டிலும் பெரிய கோவில்களைக் கட்டுகிறோம்.. நமது பெருமையை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல முடியாமல் போனதாகக் கருத வேண்டுமா? கோவில்கள் தேவைதான் . ஆனால் கோவில்களை விட நூலகங்கள் தான் அவசியமானவையல்லவா ?**

**சங்கரி சந்திரன்:** கோவில்கள் கட்டுவதில் எங்களுக்கு ஒருவித அர்ப்பணிப்பு உள்ளது என்பதை நானும் முழுமையாக ஒப்புக்கொள்கிறேன். அதேவேளை, கோவில்கள் சார்ந்த நம்பிக்கையின் முக்கியத்துவத்தையும் , சமூகத்தில் மக்களை ஒன்றிணைக்கும் பணியையும் நான் புரிந்துகொள்கிறேன், நீங்கள் முன்பு என்னிடம் கேட்டீர்கள், நாங்கள் ஏன் எங்கள் கதைகளை அதிகம் எழுதவில்லை? இந்தக் கதைகளை எழுதுவதற்கு நாம் ஏன் நம் குழந்தைகளை ஊக்கப்படுத்தவில்லை? என்று . பொதுவாக தமிழர்கள் மனதில் சில விஷயங்களுள்ளன., அதாவது எல்லோரும் மதிக்கக்கூடிய மற்றும் பாதுகாப்பான தொழிலைச் செய்து தமது இருப்பை நிலைப்படுத்திக்கொள்வது .

இரண்டாவதாக, துன்பத்தில் இன்ப நிலை காணும் நிலையில் இருந்து கொள்வது. அதைப் பற்றி வெளியில் பேசாமல் இருந்து விடுவது., இவ்வாறான சூழ்நிலையில் நாம் யூத மக்களைப் பார்க்க வேண்டிய அவசியமிருக்கிறது . எனவே, உங்கள் சொந்தக் கதையைப் பற்றி நீங்கள் பெருமிதம் கொண்டால்,அந்தக் கதைகளை புற உலகிற்கு அதிகமாகக் கொண்டு சொல்ல வேண்டும். அதைச் செய்த ஒரு நபராக நான் இருப்பதில் பெருமைப்படுகிறேன், ஆனால் என்னைப் போன்ற பலர் இருக்கிறார்கள் ஆங்கிலத்திலும், தமிழில் இன்னும் சிறப்பாக எழுதக்கூடியவர்கள். அவர்களும் எழுத வேண்டும்.



**கே: உங்கள் நாவல்களையெல்லாம் தமிழில் மொழிபெயர்க்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?**

**சங்கரி சந்திரன்:** ஆம், நிச்சயமாக. அப்படியான திட்டம் என்னிடம் இருக்கின்றது.



# அவனும் மாணவனே!

○ கோகுலராகவன்

இது எனது கதையல்ல எனக்கும் இந்தக் கதைக்கும் ஒரு தொடர்பும் இல்லை. இரண்டு மாணவர்கள் பற்றிய கதை. என்னை விட மூத்த மாணவர்கள். அப்போது நானும் மாணவனாக இருந்திருப்பேன். இந்த இரண்டு மாணவர்களும் பிரபல்யமான பாடசாலையில் ஏழாம் வகுப்பு படிக்கும் போது செய்த திருவிளையாடல்தான் இந்தக் கதை.

இருவருக்கும் ஆங்கில பாடத்தில் கடும் வெறுப்பு ,பயம்.

இதனால் ஆங்கில பாடத்துக்கு பாடசாலை நூலகத்தில் ஒளித்து இருந்து விடுவார்கள். பின் அடுத்த பாடம் மணியடிக்க வகுப்பில் போய் இருந்து விடுவார்கள்.




ஒருநாள் ஆங்கிலம் இரண்டு பாடவேளை என்பதை மறந்து ஒரு பாடவேளை என்று நினைத்துக்கொண்டு வகுப்புக்கு திரும்பி விட்டார்கள்.

இதுதான் கஷ்ட காலம். இரண்டு பேரையும் ஆங்கில ஆசிரியர் ஏற இறங்கப் பார்த்தார்.

"நியூ அட்மிசனா ? "

இரண்டுபேருக்கும் சப்தநாடியும் ஒடுங்கி விட்டது.

"இல்லை இந்த வகுப்புத்தான் "

"அப்படியா ஒருநாளும் நான் வகுப்பிலே காணவில்லையே? "

"பாத்ரூம் போனனாங்கள்"

நாக்கு தட்டுகிறது.

"ஒவ்வொரு நாளும் இந்தப் பாடத்திற்கு பாத்ரூம் வருமோ?"

"ஓம் ரீச்சர்"

ஆசிரியருக்கு புரிந்து விட்டது.

"பாடத்திற்கு ஒளிக்கிறீர்களா?" கிட்டத்தட்ட ஆறு மாதம் ஒளித்திருக்கிறார்கள்.

ரீச்சர் அதிபரிடம் அனுப்ப வெளிக்கிட இரண்டு பேரும் ரீச்சர் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டு இனிமேல் வகுப்பில் இருப்பதாக உறுதியளித்தபடியால் வகுப்பில் இருக்க ரீச்சர் அனுமதித்தார். மாணவப் பருவம் இத்தகையதுதான். பாடங்களில் வெறுப்பு ஏற்படுவது இயற்கைதான்.

இதில் கவர்ச்சியை ஏற்படுத்துவதில் ஆசிரியருக்கும் பங்கு இருக்கிறது.

ஒரு பாடசாலையில் ஒரே பாடத்துக்கு மூன்று ஆசிரியர்கள் இருந்தாலும் குறித்த ஒரு ஆசிரியரை மட்டுமே மாணவர்கள் நாடும் தன்மையும் இருக்கிறது .

இது கற்பித்தல்பாணி சார்ந்ததுதான். ஆசிரியர் தின விழாக்களில் கண்டிப்பான ஆசிரியர்களுக்கு விழும் மாலைகளின் எண்ணிக்கை அதிகம்.இதை நான் கண்கூடாகக் கண்டிருக்கிறேன். கண்டிப்பான ஆசிரியர் பாடத்தை வீட்டில் கவனமாகப் படித்து வரும் மாணவர்களும் அதிகமே. அந்த இரண்டு மாணவர்களும் இப்போது வளர்ந்து பெரியவர்கள் ஆகிவிட்டார்கள்.

சரி, அவர்கள் இப்போது எப்படி இருக்கிறார்கள்?

உங்களுக்கு சில தகவல்கள் தருகிறேன்.

1.ஒருவர் அதே பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகவும், அதேவேளை பிரபல்யமான ஆங்கில ஆசிரியராகவும் இருக்கிறார்.

2. மற்றவர் இலங்கையின் தூதுவர் தரத்தில் கடமையில் உள்ளார்.

3. முதலாமவர் ஆங்கிலப் பட்டதாரி

4.இரண்டாம் மாணவர் ஆங்கில டிப்ளோமா , ஆங்கில முதுகலைமாணி.

இந்த இரண்டு பேரும் ஆங்கிலத்தில் மேதைகள் ஆகிவிட்டனர்.

இது எவ்வாறு சாத்தியம் ? இடையில் அவர்கள் ஆங்கிலத்தில் செலுத்திய அதீத கவனம் தான் காரணம்.

மொழி என்பது எப்போதும், எந்த வயதிலும் கற்கக் கூடியது என்பதே என் நியாயப்பாடு. இதற்கு அவர்கள் இருவரும் முன்னுதாரணம்.

இந்தியாவின் சிறந்த பேச்சாளரான புலவர் சண்முகவடிவேல் (முன்னாள் ஆசிரியர்) சொல்கிறார்.

" என்னிடம் படித்த மாணவர்களில் எனக்குத் தெரியாமல் கொஞ்சப் பேர் மேதைகள் ஆகிவிடுகின்றனர். இதற்கு நாம் உரிமை கொண்டாட முடியாது . இது அவனுடைய சுயம், சுயமுயற்சி . அவனுக்கு எங்கோ பொறி தட்டியிருக்கும். அதன் பிறகு படித்து விடுவான் . தோமஸ் அல்வா எடிசனுக்கு யாருமே ஆசிரியர் கிடையாதே. அவர் பாடசாலையில் இருந்து விரட்டப்பட்டவரே . என்னிடம் படிக்க முடியாமல் அடி வாங்கியவன் 'ஓடி'(Audi) காரில் வந்து 'வாங்க சார் போகலாம்' என்கிறான்.

அவன் பெரிய ரியல் எஸ்டேட் முதலாளி . ஆனால் நான் இப்பவும் பென்ஷன் காசை நம்பித்தான் இருக்கிறேன்.அவன் என்னால்தான் முதலாளி ஆனான் என்றால் அடிக்கத்தான் வருவான் "என்று சொல்கிறார் அந்தப் பேச்சாளர்.

கடைநிலை மாணவனும் நேசிக்கப்படவேண்டியவன். அவனுள் ஏதோ சக்தி இருக்கும். அது அவனை உருவாக்கிவிடும். நேசிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோகிலா மகேந்திரன்






## முன்றில் 18

○ இயல்வாணன்

ஈழத்துப் படைப்பாளிகள் பலரை உருவாக்கிய பெருமை மகாஜனக் கல்லூரிக்கு உண்டு. அதனை நிறுவிய பாவலர் துரையப்பாப்பிள்ளை.பாரதியின் சமகாலக் கவிஞர். அவர் வழிவந்த சின்னப்பா பிள்ளை, செ.கதிரேசர்பிள்ளை என்று ஒரு நீண்ட கவிஞர்களின் பட்டியலே உள்ளது. அவர்களில் பலருடைய கவிதைகள் மகாஜனக் கவிதைகள் நூலாகவும் தொகுக்கப்பட்டுள்ளன. அந்தப் பண்ணையில் தோன்றிய முதன்மையான பெண் ஆளுமை கோகிலா மகேந்திரன். இவ்வாண்டு யாழ்ப்பாண மாநகர சபையால் வழங்கப்பட்ட இயல் துறைக்கான அரசகேசரி விருதைப் பெற்றுள்ளார்.

சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், விமர்சனம், கட்டுரை, பத்தி, சிறுவர் இலக்கியம் என இலக்கியத்தின் அனைத்துப் பக்கங்களிலும் எழுதியிருக்கிறார். இவருடைய முதன்மைப் பாத்திரம் உளவியல்துறையே. பின்னாளில் அதுவே அவரது அடையாளப்படுத்தத்தக்க துறையாக அமைந்தது.

கவிஞரும் உரையாசிரியருமாக விளங்கிய சிவசுப்பிரமணியத்தின்(விழிசைச் சிவம்) மகளாக 1950 ஆம் ஆண்டு நவம்பர் 17ஆம் திகதி தெல்லிப்பழை விழிசிட்டியில் பிறந்த கோகிலா தேவி பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலையில் (1955-58) தனது ஆரம்பக் கல்வியையும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில்(1959-68) இடைநிலைக் கல்வியையும் பெற்றுக் கொண்டார். 1969 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி மருத்துவத்துறையில் மூன்றாண்டுகள் கற்றபோதும் கற்கைநெறியைப் பூரணப்படுத்தவில்லை. உளவளத்துணையாளர்(1995), வட இலங்கை சங்கீதசபையின் நாடக கலாவித்தகர்(2002) பட்டங்களையும் பெற்றுக் கொண்டார்.

1974 இல் விஞ்ஞான பாட ஆசிரிய நியமனம் கிடைத்து . பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் பணியினை ஆரம்பித்தார். தொடர்ந்து கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயத்தில் கற்பித்தார்.(1976-78) பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் ஆசிரிய பயிற்சியினைப்(1979-81) பெற்றுக் கொண்டார். பயிற்சியின் பின்னர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும்(1982-93), யூனியன் கல்லூரியிலும் கற்பித்தார்.

1994 இல் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையின் அதிபர் பொறுப்பினையேற்று ஐந்து ஆண்டுகள் பணியாற்றினார். அதனைத் தொடர்ந்து வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் 8 ஆண்டுகள் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமைபுரிந்து ஓய்வுபெற்றார். தொலைக்கல்வி போதனாசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நாடகமும் அரங்கியலும் மற்றும் அறிகைச் சிகிச்சை விரிவுரையாளர், சாந்திகம் நிறுவனப் பணிப்பாளர், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிகளையும் வகித்த இவர் அவுஸ்திரேலியாவில் தங்கியிருந்த காலத்தில் தமிழ் மற்றும் சமயபாட வருகை ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

கோகிலா சிவசுப்பிரமணியமாக எழுத்துலகில் பிரவேசித்த இவர், திருமணத்தின் பின்னர் கோகிலா மகேந்திரன் என்ற பெயரில் எழுதி வருகிறார். விழி, விழிசைக்குயில், பசுந்தி, பதுமலாஞ்சனன் முதலிய புனைபெயர்களிலும் இவர் எழுதியுள்ளார். 1972இல் குயில் சஞ்சிகையில் எழுதிய அன்புக்கு முன்னால் சிறுகதையுடன் இலக்கிய உலகிற் பிரவேசித்த இவர் சுடர், ஈழநாடு, மித்திரன், வீரகேசரி, தினகரன், தினக்குரல், உதயன் - சஞ்சீவி, முரசொலி எனப் பல பத்திரிகைகள், சஞ்சிகைகளில் சிறுகதைகளை எழுதியுள்ளார். இவர் எழுதிய 102 வரையான சிறுகதைகள் மனித சொரூபங்கள்(1982), முரண்பாடுகளின் அறுவடை(1983), அறிமுகவிழா(புலோலியூர் ஆ.இரத்தினவேலோனுடன் இணைந்து 1984), பிரசவங்கள் (1986), வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம்(1997), முகங்களும் மூடிகளும்(2003), வரிக்குயில்(2016) ஆகிய தொகுதிகளாக வெளிவந்துள்ளன. மனதைக் கழுவும் மகாசமத்தர்கள்(2008), புலச்சிதறல் நெஞ்சம்(2013), சிறுகதை (2014) முதலிய தொகுப்புகளும் இவரது புனைகதைத் துறைப் பங்களிப்பை வெளிப்படுத்தி நிற்கின்றன.

துயிலும் ஒருநாள் கலையும்(1986), தூவானம் கவனம்(1989), சந்தனச் சிதறல்கள்(2018) ஆகியவை இவர் எழுதி வெளியிட்டுள்ள நாவல்களாகும். சிறுவர் இலக்கியஞ் சார்ந்தும் இவர் நூல்களை எழுதியுள்ளார். விஞ்ஞானக் கதைகள்(2000), அறிவியல் கதைகள்(2020) ஆகிய நூல்கள் மூலம் சிறுவர்களின் அறிவியல் விருத்திக்குப் பங்களித்துள்ளார்.

உளவளத்துணை சார்ந்து பல விரிவுரைகளை மேற்கொண்டும் பயிற்சிகளை வழங்கியும் உள்ள இவர் அது தொடர்பான நூல்களை எழுதியும் இணைந்து தொகுத்தும் உள்ளார். அவ்வகையில் மனக்குறை மாற வழி(1996), எங்கே நிம்மதி(2000), சிறுவர் உளநலம்(2002), மகிழ்வுடன் வாழ்தல்(2005), சின்னச் சின்னப் பிள்ளைகள்(2005), உள்ளக் கமலம்(2006), முற்றத்தில் சிந்திய முத்துக்கள்(2006), சுனாமியில் சிதறிய சித்திரங்கள்(2006), மனச்சோர்வு(2006), மனமெனுந் தோணி(2008), உள்ளம் பெருங்கோயில் (2009), உள்ளத்துள் உறைதல்(2011), சிறுவர் பாதுகாப்பு (2015), பதின்ம வயதுப் பிரச்சினைகளும் அவற்றைக் கையாளுதலும்(2016), வாழ்வின் முன்னேற்றத்துக்கான கற்றல்(2020), சீர்மியத்தில் சிறப்பு முறைகள்(2020), குடும்பம் ஒரு கதம்பம்(2023) முதலான நூல்கள் மூலம் உளவளத் துணை சார்ந்த ஆற்றுப்படுத்தலுக்குப் பெரிதும் பங்களித்துள்ளார்.

இவரது நேர்கொண்ட பாவை (2015) பெண்ணிய உளவியல் சார்ந்த கட்டுரை நூலாகும். திருமனிதர் வாழ்வு (2017) சமூக உளவியல் சார்ந்த கட்டுரைகளின் தொகுப்பாகும். தங்கம்மா அப்பாக்குட்டி பற்றிய தங்கத்தலைவி (2000) தனி மனித ஆளுமையை வெளிப்படுத்தும் நூலாகும். விழிமுத்து (1999), அரங்கக்கலையில் ஐம்பதாண்டு(2003), விழிசைச் சிவம்(2009) ஆகிய நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

நாடகத்துறையிலும் இவர் தனது அடையாளத்தைப் பதித்துள்ளார். நாடக எழுத்தாளராக, நடிகையாக, இயக்குநராக, தயாரிப்பாளராக, ஒப்பனைக் கலைஞராக பல்துறை ஆளுமையுடன் இவர் பயணித்துள்ளதுடன் சோலைக்குயில் அவைக்காற்றுகைக் கழகத்தை நிறுவி பல நாடகங்களை மேடையேற்றியுள்ளார். கோலங்கள் ஐந்து (ஐந்து பேரின் ஐந்து நாடகங்கள் 1994), கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு(1997), குயில்கள்(2001) ஆகியவை நாடகத்துறை சார்ந்த இவரது நூல்களாகும்.

தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தை நிறுவியவர்களில் ஒருவரான இவர் அதன்மூலம் பல நூல்களை வெளியிட்டும், நிகழ்ச்சிகளை நடத்தியும் இலக்கியத்துறைக்குப் பங்களிப்பை வழங்கியுள்ளார். இவரது கலை இலக்கிய சேவையைப் பாராட்டி இலக்கிய வித்தகர், சமூக திலகம், கலாபூஷணம், சமூகஒளி, கலைப்பிரவாகம் முதலிய கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பலவழிகளிலும் இலக்கியம், அறிவியல், சமூகவியல், உளவியல், சமயம் சார்ந்து எழுதியும், பேசியும் வரும் கோகிலா மகேந்திரன் 73 வயதிலும் உற்சாகத்தோடு தொடர்ந்து பணியாற்றி வருகிறார். இவரது அறிவும் அனுபவமும் ஆளுமைப் பரிமாணமும் சமூகத்துக்கு மேலும் பயன்பட வேண்டும்.

## பாகம் 2



# ஊர்ப்புதினம்

## 05

○ இராகவன்

நான் எட்டாம் வகுப்புப் படிக்க விக்னேஸ்வராக் கல்லூரிக்கு வந்ததைப் பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறன். அங்கை தொழில்முறைப் பாடங்களாக விவசாயம், மனையியல், வர்த்தகம் என மூன்றிருந்தன. கவின்கலைப் பாடங்களாக சித்திரம், சங்கீதம், நடனம் என மூன்றுமிருந்தன. அங்கை அப்ப சித்திரம் படிப்பிச்சது சறோஜினி ரீச்சர். இவ ஆரெண்டால் நான் ஊர்ப்புதினம் முதலாம் பாகத்தில ஒருக்கால் இராசேந்திரம் மாஸ்ரர் எண்டு ஒராளைப் பற்றிச் சொல்லியிருக்கிறன். அவர் யாக்கருப் பள்ளிக்கூடத்தில படிப்பிக்கேக்குள்ள பிறேமன் எண்ட பொடியனை விநோத உடைப் போட்டியில ஆமையாக்கினவர் எண்டதையெல்லாம் விவரமாச் சொல்லியிருக்கிறன். இந்த இராசேந்திரம் மாஸ்ரர் பிறகு தீவக வலயத்தில உதவிக்கல்விப் பணிப்பாளராயுமிருந்திருக்கிறார். அவரின்ர மனிசிக்காரிதான் இந்தச் சறோஜினி ரீச்சர். நான் ஏதோ கொஞ்சம் படங்கீறுவன் எண்டதால சித்திரந்தான் எடுத்தனான். எனக்குப் படங்கீறுற 'ரலன்ற்' இருக்கிறதைப் பாத்திட்டு சறோஜினி ரீச்சர் என்னை நல்லா ஊக்கப்படுத்தினா. உண்மையிலேயே ஒரு ரீச்சர் பிள்ளையளோட எப்பிடிப்பழக வேணும் எண்டதுக்கு இவா ஒரு முன்னுதாரணம் எண்டுதான் சொல்லுவன். நான் எழுத்துத் துறைக்கு வந்ததில சரியாச் சந்தோசப்பட்ட ஆக்களில இவாவும் ஒராள். இப்ப என்னைக் கண்டாலும் வாழ்த்தி ஊக்கப்படுத்துவா. ஏதோ நானும் முற்பிறப்பில கொஞ்சம் புண்ணியமும் செய்திருக்கிறன்போலை. அதுதான் இப்படியான ரீச்சர்மாரிட்டயெல்லாம் படிக்கக் கிடைச்சிருக்கு.

அப்போது எட்டாம் வகுப்பை ஏ.பி.சி.டி என நான்கு பிரிவாக்கியிருந்தார்கள். கவின்கலை மற்றும் தொழில்நுட்பப் பாடவேளைகளில் 'ஏ' யும் 'பி' யும் ஒன்றாகவும்'சி'யும் 'டி' யும் ஒன்றாகவும் சேர்த்துத்தான் பாடங்கள் நடக்கும். நான் 'சி' பிரிவில் கற்று வந்தேன். சித்திரப் பாடம் எப்போதும் 'டபிள் பீரியட்டாகவே' இருக்கும். சித்திரப் பாடவேளைகளில் 'டி' வகுப்புப் பொடியள் எல்லாம் எங்கட 'சி' வகுப்புக்கு வருவாங்கள். இதிலையும் அதிசயம் என்னெண்டால் ஒரு பொம்பிளைப் பிள்ளையும் சித்திரப் பாடம் எடுக்கேலை. அதுகள் முழுக்கச் சங்கீதத்துக்கும் நடனத்துக்கும் தான் போனதுகள். சித்திரம் படிக்கிற முக்கால்வாசிப் பொடியளும், ஒரு ட்றோயிங் புக்கும் ஒரு கலர்ப்பெட்டியும் அதோட பென்சில் இறேசரும் இருந்தால் போதும் சுகமாப் பொழுது போக்கலாம் எண்ட நோக்கத்தோடதான் வருவாங்கள். ஒருத்தரிட்டையும் சித்திரத்துக்கெண்டு தனியாய் நோட்ஸ் கொப்பி இருக்கேல்ல. ஆனால் நான் சித்திரத்துக்கெண்டு தனியாக நோட்ஸ் கொப்பி வைச்சிருந்து ரீச்சர் சொல்ற நோட்சை ஒழுங்கா எழுதினன். அதாலதான் அவா என்னில நல்ல வாரப்பாடாயிருந்தவா.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org